விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

நாவாந்துறை படிப்பகம்
மாநகராட்சி மன்றம்

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 புரட்டாதி 21 வெள்ளிக்கிழமை (07.10.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 293

## போரில் மட்டுமே வெற்றி; சமாதானத்தில் தோல்வி!

### மகிந்தவின் தவறுகளே அதற்கு காரணம்; அமைச்சர் ஜோன் செனவிரத்ன ஒப்புதல்



(கொழும்பு)

போர் வெற்றி குறித்து எப்போதும் பெருமை பாராட்டி வரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு, நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த சந்தர்ப்பம் இருந்தும் அதனை அவர் நிறைவேற்றவில்லை என அவரது அரசாங்கத்தில் முக்கிய அமைச்சராக இருந்த தற்போதைய தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன குற்றஞ்சாட்டியுள்ளார். (23-ம் பக்.)

## கொக்குவில் பகுதியில் துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் பிரம்படிப் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றின் மீது நேற்றைதினம் அதிகாலையில் முச்சக்கர வண்டியில் வந்தோரால் கைத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொக்குவில் பகுதியில் உள்ள

23ஆம் பக்கம் பார்க்க....

## நாடு முழுவதும் கடும் வரட்சி!

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நிலவிவரும் வரட்சி காரணமாக மூன்று இலட்சத்து 10 ஆயிரத்து 365 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணம், சப்ரகமுவ, வடமத்திய மற்றும் வடமேற்கு ஆகிய மாகாணங்களில்

24ஆம் பக்கம் பார்க்க....

## தனியார் பஸ் - லொறி விபத்து



(யாழ்ப்பாணம்)

ஏ9 வீதி எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை தனியார் பஸ் மற்றும் லொறி என்பன நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளாகின. எனினும் மேற்படி

23ஆம் பக்கம் பார்க்க....

## 2 கிலோ கஞ்சாவுடன் நபர் கைது

(யாழ்ப்பாணம்)

இரண்டு கிலோகிராம் கஞ்சா பொதியை யாழில் இருந்து கொழும்புக்கு கடத்த முயன்ற நபரை நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்புக்கு எடுத்துச் செல்வதற்காக சங்

23ஆம் பக்கம் பார்க்க....



## இளைஞன் மீது வாள் வெட்டு!

(யாழ்ப்பாணம்)

வீதியில் பயணித்த வேளை இனந்தெரியாத நபர் ஒருவர் வாளால் வெட்டியதில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று இரவு 8.30 மணியளவில் வட்டுக்கோட்டைப் பகு

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜெகநாதனின் உடல் நேற்று நல்லடக்கம்

(பனிக்கன்குளம்)

வட மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் மரியாம்பிள்ளை அன்ரனி ஜெகநாதனின் பூதவுடல் நேற்று மாலை 6.00 மணிக்கு உண்ணாப்பிலவு கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

பெருந்திரளான மக்கள் முல்லைத்தீவு நகரிலுள்ள அவரது இல்லத்

23ஆம் பக்கம் பார்க்க....

## "எழுக தமிழ்" மக்கள் பேரணி தமிழர் போராட்டங்களின் சங்கமம்

### தமிழ் சிவில் சமூகம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கில் மக்கள் தமது உரிமைகளுக்காக தனித்தனியாக நடத்திய போராட்டங்களின் சங்கமமாகத்தான் நாம் எழுக தமிழ் மக்கள் பேரணியினை பார்க்கின்றோம் என தெரிவித்துள்ள தமிழ் சிவில் சமூக அமையம், இந்த போராட்டத்தில் மக்களால் முன்வைத்துள்ள கோரிக்கைகள் நியாயமானதா? என ஆராயாமல்,

பொது பல சேனா போன்ற இனவாத அமைப்புக்கள் போன்று மக்களுடைய போராட்டத்தை தென்னிலங்கையை சேர்ந்த அரசியல்வா

04ஆம் பக்கம் பார்க்க....

## அன்ரனி ஜெகநாதனுக்கு வடக்கு சபையில் அஞ்சலி



23ஆம் பக்கம் பார்க்க....

## நீதி திரட்டும் நடைபவனி ஆரம்பம்




23ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு விவசாய அமைச்சுக்குரித்தான 2072 ஏக்கர் காணி படையினர் வசம்!

(யாழ்ப்பாணம்)

வட மாகாண விவசாய அமைச்சுக்கு சொந்தமான விவசாய பண்ணை, விவசாய விதை உற்பத்தி நிலையம், விடுதிகள் உள்ளிட்ட 29 இடங்களையும், அவற்றின் சுமார் 2 ஆயிரத்து 72.103 ஏக்கர் நிலத்தையும் படையினர் ஆக்கிரமித்திருப்பதாக மாகாண விவசாய அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளதுடன், மேற்படி ஆக்கிரமிப்பு தொடர்பான தரவுகளை வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனிடம் ஒப்படைத்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் மாகாண விவசாய அமைச்சுக்கு சொந்தமான 29 இடங்கள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு தொடர்ந்தும் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

இவற்றில் கிளிநொச்சி மாவட்டத்தில் 12 இடங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 07 இடங்களும், வவுனியா மாவட்டத்தில் 06 இடங்களும், மன்னார் மாவட்டத்தில் 04 இடங்களுமாக 29 இடங்கள் இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டுகிறது.

மேலும் கிளிநொச்சி- பல்லவரா

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 20 கம்பிகளை வளைத்து இளைஞன் உலக சாதனை!

(கொழும்பு)

ஒரு நிமிடத்தில் 20 உருக்குக் கம்பிகளை வாயினால் வளைத்து ஹங்குராங்கெத்த பிரதேசத்தை சேர்ந்த இளைஞர் ஒருவர் உலக சாதனை படைத்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்தில் பணிப்புரியும் 24 வயதான ஜனக காஞ்சன என்ற இந்த இளைஞர் கொழும்பு முகத்துவாரம் துறைமுகச் சூழலில் உள்ள மகாவலி பயிற்சி நிறுவனத்தில் நேற்று இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மற்றும் விளையாட்டுத்துறை மருத்துவ அதிகாரிகள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.



இதற்கு முன்னர் ரஷ்ய விளையாட்டு வீரர் ஒருவர் 12 கம்பிகளை வாயினால் வளைத்து உலக சாதனையை நிகழ்த்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7.10)


## கண்ணீர் அஞ்சலி

அந்தோனிப்பிள்ளை யோசப் செல்வராசா
(கறுவல் பரியாரி)



எமது பாடசாலையின் நலன்
விரும்பியான அந்தோனிப்பிள்ளை
யோசப் செல்வராசா (கறுவல் பரியாரி)
அவர்கள் இறைபதம் அடைந்துள்ளார்.
அன்னாரின் ஆன்மா இளைப்பாற்றுக்காக
பிரார்த்திக்கின்றோம்.

– பாடசாலைச் சமூகம்
யா/மாரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலை
(6147)


# எதிர்க்கட்சிக்குத் தாவினார் அமீர்

(திருகோணமலை)

கிழக்கு மாகாண சபை அமர்வு நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகியபோது, மாகாண சபையில் ஆளும் கட்சி வரிசையில் இருந்த மாகாண சபை உறுப்பினர் எம்.எல்.ஏ.அமீர், எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொண்டார்.

மாகாண சபை உறுப்பினர் எம்.எல்.ஏ.அமீர், கடந்த மாகாண சபைத் தேர்தலின் போது தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட்டு கிழக்கு மாகாண சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பினனர் இவர், கிழக்கு மாகாண சபையில் ஏற்படுத்தப்பட்ட நல்லாட்சியில் இணைந்து செயற்பட்டார்.

எனினும் கிழக்கு மாகாண சபை ஆட்சியில் தற்போது அதிருப்தியுற்ற நிலையில் எதிர்க்கட்சிக்கு தாவியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (செ-5)


ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்
**தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2017**
**வகுப்புக்கள் 09.10.2016 அன்று ஆரம்பமாகின்றன**

யாழ்ப்பாணத்தில்
அன்பொளி கல்வியகம்
யாழ். இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

சாவகச்சேரியில்
அன்பொளி கல்வி நிலையம்
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.
(C-6030) இயக்குநர்கள்

யா/இணுவில் இந்துவின் சார்பில்
## பாராட்டி வாழ்த்துகின்றோம்

புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்ற செல்வன் ஈஸ்வரன் ஆதவன் (175 புள்ளிகள்) அவர்களையும் ,100 புள்ளிகளுக்கு மேற்பெற்ற

1. செல்வன் சி.ஆருஜன்
2. செல்வன் தே.பிரணவன்
3. செல்வன் சு.மதுஷன்
4. செல்வன் ம.துவாரகன்
5. செல்வி அ.சாருஜா
6. செல்வி சு.சுபானுகா
7. செல்வி கா.திவ்யா
8. செல்வி லோ.குசானு
9. செல்வி கோ.மதுரா

மாணவர்களையும் 70 புள்ளிகளுக்கு மேற்பெற்ற மாணவர்களையும் இணுவில் இந்துக் கல்லூரிப் பாடசாலைச் சமூகத்தின் சார்பில் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/இணுவில் இந்துக் கல்லூரி
(6149)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**2016 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற எனதருமை மாணவச் செல்வங்களான**

- ரமேஷ் திலக்ஷான் - 187 (ஜோன் பொஸ்கோ)
- ஜனார்த்தன் திவாஜினி - 167 (ஜோன் பொஸ்கோ)
- நிக்கிலஸ் ரெபின்சன் வினோஜன் - 158 (ஜோன் பொஸ்கோ)
- விமல்தாஸ் ஆன் அபிஷாயினி - 153 (உடுவில் மகளிர் கல்லூரி )
- யூட் நிர்மலன் தாகினி -172 (ஜோன் பொஸ்கோ)
- அமிர்தசெல்வன் றெனுஜன் - 158 (சென் பற்றிக்ஸ் )
- பத்மநாதன் தரணிசன் - 157 (ஜோன் பொஸ்கோ)
- பற்றிக் ஆன் ஜெராட்டீன் - 152 (ஜோன் பொஸ்கோ)

ஆகியோரை மனதார வாழ்த்துவதோடு மேலும் இப்பரீட்சையில் சித்தியடைந்த ஏனைய மாணவச் செல்வங்களை வாழ்த்துகின்றோம். அத்துடன் இவர்கள் கல்வியில் சிறந்து விளங்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்
ஷண் பாடசாலை சேவை,
வலம்புரி T.C நவாலி.


# சீனப் பொறியியலாளர் மீது தாக்குதல்

(திருகோணமலை)

திருகோணமலை, யான் ஓயா திட்டத்தில் கடமையாற்றிய சீனப் பொறியியலாளரொருவர், அத்திட்டததில் சேவையாற்றிய சாரதியொருவரினால் நேற்றைய தினம் தாக்கப்பட்டு, படுகாயமடைந்தநிலையில் கோமரங்கடவெல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாகல்கட-யான்ஓயா திட்டத்தில் கடமையாற்றும் பொறியியலாளரான டோன்ங் ஜெனொவி (DONG JINOWEI) (32 வயது) என்பவரே படுகாயமடைந்துள்ளார். (செ)


**போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்**

இம்மாதம் 22 ஆம், 23ஆம், 30ஆம் திகதி நடைபெறவிருக்கும் கணக்காய்வாளர் பரீட்சை 16ஆம், 30ஆம் திகதி நடைபெறவிருக்கும் கல்வியியலாளர் சேவை பரீட்சைக்கும்,
சனி, ஞாயிறு 9.00 - 4.00 மணிவரை
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)
சகல போட்டிப்பரீட்சைகளுக்குமான வகுப்புகள் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு :- 0766883394
(C-6034)

யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை
J/ Mahajana College Tellippalai

தரம் - 6 அனுமதி - 2017 (தமிழ், ஆங்கில மொழி மூலம்)
தரம் 6 இற்கான அனுமதிக்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
**விண்ணப்ப முடிவுத்திகதி : 31.10.2016**
- அதிபர்
(C-6029)

## 31ம் நாள் நினைவலைகள்



அமரர்
பொன்னுத்துரை யோகேஸ்வரன்

தோற்றம் : 12.01.1949
மறைவு : 07.09.2016

எமது பாடசாலையில் மூன்று தசாப்தங்கள் ஆசிரியராக, பகுதித்தலைவராக, உப அதிபராகவும், எமது பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளருமாகிய திருமதி சுதாநிதி யோகேஸ்வரன் அவர்களின் அன்புக்கணவர் அமரர் பொ.யோகேஸ்வரன் அமரராகிய 31-ம் நாள் அந்தியேட்டி நாளாகிய இன்று அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யா/ நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## திருத்தம்

**விண்ணப்ப முடிவுத் திகதியினை நீடிப்புச் செய்தல்**

மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் மனைப் பொருளியல் பாடத்திற்கு நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு-1 (அ ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை (தமிழ் மொழி மூலம்)-2016 (III)

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட விளம்பரத்தின் முடிவுத்திகதியானது 2016.10.17 ஆம் திகதிவரை நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே கோரப்பட்ட விளம்பரத்தின் ஏனைய விடயங்கள் மாற்றமின்றிக் காணப்படுவதுடன் குறித்த தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகள் மட்டும் முடிவுத் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.


ரூ. வரதலிங்கம் செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடக்கு மாகாணம்
(சி-6021)

# முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்க வேண்டும்

## பொலிஸ்மா அதிபரிடம் வடக்கு சபை கோரிக்கை

**(யாழ்ப்பாணம்)**

**வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்க வேண்டும் என பொலிஸ்மா அதிபரை வடக்கு மாகாண சபை கோரியுள்ளது.**



வடக்கு மாகாண சபையின் 63வது அமர்வு நேற்றைய தினம் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன் போதே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் பேரவையினால் நடத்தப்பட்ட எழுக தமிழ் பேரணியை அடுத்து, குறித்த பேரணிக்கு தென்னிலங்கையில் உள்ள இனவாத சக்திகள் கடும் எதிர்ப்பையும், கருத்துக்களையும் தெரிவித்து வந்தன. இதன் உச்ச கட்டமாக வவுனியாவில் ஒரு போராட்டத்தையும் பொதுபல சேனா அமைப்பினர் முன்னெடுத்திருந்தனர்.

இந்தப் போராட்டத்தின் போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு நடந்ததே எழுக தமிழ் பேரணிக்கு தலைமை தாங்கிய வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் நடக்கும் என கடும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. இந்த அச்சுறுத்தல் குறித்து இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில்.

தென்னிலங்கையில் முதலமைச்சருக்கு எதிரான செயற்பாடுகளில் இனவாத அமைப்புக்கள் ஈடுபட்டு வந்தனர்.

ஆர்ப்பாட்டங்களும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் அண்மையில் யாழில் நடைபெற்ற மூத்த அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசின் நூல் வெளியீடில் தன்னைக்கொலை செய்து விட்டு அந்தப் பழியை தமிழீழ விடுதலைப்புலிகள் மீது சுமத்துவதற்கான திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன என்ற அதிர்ச்சித் தகவலை வடக்கு மாகாண முதலமைச்சர் வெளியிட்டிருந்தார். முதலமைச்சரின் இந்த தகவல் அனைத்து தரப்பினையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய நிலையில் அவருக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்து வருகின்றது. முன்னாள் நீதியரசரான முதலமைச்சரின் இந்த குற்றச்சாட்டை சாதரணமாக கருதி விட முடியாது.

உடனடியாக அவருக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை.சேனாதிராசா கடிதம் மூலம் அரசிடம் வலியுறுத்தியிருந்த நிலையில், வடக்கு மாகாண சபையும் வலியுறுத்தியுள்ளது. வடக்கு மாகாண முதலமைச்சர் தனக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளது என கூறியிருப்பது தொடர்பில் வடக்கு மாகாண சபை கரிசனை கொள்கின்றது என தெரிவித்த அவைத்தலைவர் சிவஞானம்.

எமது முதலமைச்சருக்கு உரிய மேலதிக பொலிஸ் பாதுகாப்பினை வழங்குமாறு பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவை வடக்கு மாகாண சபை கோருகின்றது என தெரிவித்தார். இந்த கோரிக்கை வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.(இ-4)

# இலங்கைக்கு தொடர்ந்தும் இந்தியா ஆதரவளிக்கும்

## இந்தியாவின் ஜனாதிபதி வாக்குறுதி



இலங்கைக்கு தேவையான அதிகபட்ச ஆதரவை வழங்க இந்தியா தயாராக இருப்பதாக இந்தியாவின் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார். டில்லியில் வைத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை - இந்தியா இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கிலும் இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் டில்லியில் வைத்து கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜையும் சந்தித்து இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் பிரதமர் ரணில் கலந்துரையாடியுள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட இலங்கை பிரதிநிதிகள் மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை இந்தியாவிற்கு மேற்கொண்டுள்ளனர். அத்துடன் இந்திய பொருளாதார மன்றத்தில் இலங்கைப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் பங்கேற்றுள்ளனர்.

இந்தப் பொருளாதார மன்றத்தில் பேராசிரியர் மைத்திரி விக்ரமசிங்க, அமைச்சர் மங்கள சமரவீர, மலிக் சமரவிக்ரம மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.(இ-7-10)

# இந்திய - இலங்கை உறவுகள் எல்லைகளுக்கு அப்பாற்பட்டது

## பிரதமர் மோடி தெரிவிப்பு

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் இராஜதந்திர எல்லைகளுக்கு அப்பாற்பட்டது என்றும், இந்தப் பிணைப்பு, இரு நாடுகளுக்கும் இடையில் பல்வேறு துறைகளில் மேலும் ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும் என்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

டில்லியில் உள்ள ஐதராபாத் இல்லத்தில் நேற்று முன்தினம் மதியம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நடத்திய பேச்சுக்களின் போதே, இந்தியப் பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, இரண்டு நாடுகளினதும் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக நிலையான தீர்வு ஒன்றை எட்டுவதற்கு எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி டில்லியில் உயர் நிலைக் கூட்டம் ஒன்றைக் கூட்டவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும், மீன்பிடித்துறைக்குப் பொறுப்பான அமைச்சர்களும் பங்கேற்பர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நேற்று முன்தினம் நடந்த சந்திப்பின் போது, பொருளாதாரம், பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு, வர்த்தகம் மற்றும் சேவைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அபிவிருத்திக்கான மூலோபாயங்களை வகுத்துக் கொள்வது குறித்தும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும், இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் அமைதியைப் பேணுவதன் மூலம் எவ்வாறு சுதந்திரமான கப்பல் போக்குவரத்தை உறுதி செய்யலாம் என்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

தீவிரவாதத்தை ஒழிப்பது மற்றும் சார்க் நாடுகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் இந்தச் சந்திப்பின் போது விரிவாகப் பேசப்பட்டுள்ளது.(இ-7-10)

# சபாநாயகரிடம் வாங்கிக்கட்டிய விமல் வீரவன்ச

பெறுமதி சேர் வரி சட்டமூலத்தை அமைச்சரவையின் அனுமதியுடன் சரியாக வர்த்தமானியில் அச்சிட்டு வெளியிட்டமை தொடர்பில் அச்சக அதிபர் மற்றும் சட்டமா அதிபர் முன்வைத்த ஆவணங்களை பதில் நிதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன சபையில் தாக்கல் செய்தார். இதன் போது சபையில் உரையாற்றிய விமல் வீரவன்ச, சபாநாயகர் கரு ஜயசூரியவை இது தொடர்பில் எனக்கு தெளிவுபடுத்த இடமளியுங்கள்.

இந்த ஆவணங்கள் எமது கேள்விக்குரியதல்ல. நாங்கள் பேசுவதற்கு இடமளியுங்கள். நீங்கள் பக்கச்சார்பாக செயற்படுகிறீர்கள் என உரையாற்றினார். இதனால் கோபமடைந்த சபாநாயகர் விமல் வீரவன்சவை என்ன சொன்னீர்கள். நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நீங்கள் அமருங்கள். நான் நேற்று முன்தினம் இது குறித்து முடிவை அறிவித்தேன்.

என்னை அச்சுறுத்த வேண்டாம் என வீரவன்சவுக்கு எச்சரிக்கை விடுத்தார். (இ-7-10)

# இந்திய மீனவர்களை கைது செய்வது ஏன்?

## ரணில் விளக்கம்

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டுவதால் தான் கைது செய்யப்படுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அவர், டில்லியில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களை சந்தித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேச்சுவார்த்தை மூலமே மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். எல்லை தாண்டுவதால் இரு தரப்பிலும் விரும்பத்தகாத பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மீனவர்கள் எல்லை தாண்டுவதால் அவர்களை கைது செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. பிரச்சினைக்கு தீர்வுகாண இருநாட்டு மீனவர்கள் பேச்சுவார்த்தை நவம்பரில் நடக்கும். இலங்கை இந்திய வெளியுறவு அமைச்சர்கள் பேச்சுவார்த்தையை ஒருங்கிணைப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# 'எழுக தமிழ்' ...

கள் மற்றும் சிவில் சமூகத்தை சேர்ந்தவரகள் கொச்சைப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளது.

தமிழ் சிவில் சமூக அமையத்தின் இணைப பேச்சாளர்களான எழில்ராஜன், கு.குருபரன் ஆகியோர் யாழ் ஊடக அமையத்தில் நேற்றைய தினம் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தனர். அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை பேரவையில் இலங்கை மீதான விசாரணை கலப்பு பொறிமுறையாக இருக்க வேண்டும் என கூறப்பட்டதனை ஏற்றுக்கொண்ட அரசு, தற்போது கலப்பு பொறிமுறையும் வேண்டாம் மக்கள் கலந்தாலோசனைகள் மூலம் மககளே அதனை தீர்மானிக்கட்டும் என கூறி, மக்கள் கலந்தாலோசனை செயலணிகளையும் நடத்தி வருகின்றது.

அந்த செயலணியிடம் கருத்து கூறிய தமிழ் மக்கள் ஒரு தெளிவான செய்தியை கூறியுள்ளனர். உள்ளக விசாரணை வேணடாம். சர்வதேச விசாரணையே வேண்டும் என கூறியுள்ளனர். எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சர்வதேச நீதிபதிகளை ஒருபோதும் நாம ஏற்க மாட்டோம். இராணுவத்தினர் யுத்த வெற்றி வீரர்கள். அவர்கள் குற்றவியல் பொறிமுறை ஊடாக தண்டிக்கபடுவதற்கு அனுமதியோம் என கூறியுள்ளார்.

இதிலிருந்து மக்களுடைய கருத்துக்களுக்கு ஜனாதிபதி மதிப்பளிக்கவில்லை அல்லது பொருட்படுத்தவில்லை என தெளிவாக தெரிகின்றது. இந்த நிலையில் இந்த கலந்தாலோசனை செயலணிகள் சர்வதேசத்துக்காக கண்துடைப்பிற்கு நடத்தப்படுகின்றதே தவிர, அதனை செயற்படுத்துவதற்கு அல்ல.

இதுதான் காணாமல்போனோர் அலுவலகம் அமைப்பதிலும் நடைபெற்றது. புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திலும் நடைபெறப் போகின்றது. இந்த சூழ்நிலையில் யாழில் வடக்கு கிழக்கு மக்களின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற எழுக தமிழ் பேரணி தொடரபில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைககப்படுகின்றன. இந்த பேரணி நடைபெற்ற தருணம் சரியானதல்ல எனவும் குறிப்பாக அதில கலந்து கொணட வடக்கு மாகாண முதலமைசசரை தாக்கும் வகையில் பல்வேறு கருததுக்கள் கூறப்பட்டு வருகின்றன. இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் முதலில் இந்த போராட்டத்தில் மக்களால் முன்வைத்த கோரிக்கைகள் நியாயமானவையா? என்பது தொடர்பில் ஆராய வேண்டும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தேர்தல் காலங்களில் முன்வைத்த கோரிக்கையைதானே இவர்களும் வைத்தார்கள். அப்போது எதிர்க்காத தெற்கு இப்போது எதற்கு எதிர்ககின்றது? புதிய அரசியலமைப்பில் பௌததத்தை முன்னிலைப்படுத்த முயலும் வேளையில் தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளை பெரும் எண்ணிக்கையில் ஒன்றுதிரண்டு சரியான ஒரு தருணத்தில் முன்வைத்தது வரவேற்கத் தக்கது எனவும் அவர்கள் தெரிவித்தனர். (செ-4)

## மின் உபகரணங்கள் நாசம்

மின்பிறப்பாக்கியில் ஏற்பட்ட திடீர் மின் அழுத்த வேறுபாடு காரணமாக 20க்கும் மேற்பட்ட வீடுகளின் மின் உபகரணங்கள் எரிந்து நாசமாகியுள்ளதுடன் பழுதுநிலைக்கும் ஆளாகியுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் அச்செழு மேற்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அச்செழு மேற்குப் பகுதியிலுள்ள ஒரு மின் பிறப்பாக்கியில் திருத்த வேலை இடம்பெற்ற நிலையில் மின்இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது வழமைக்கு மாறாக மின்னிணைப்பில் ஏற்பட்ட அழுத்த வேறுபாடு காரணமாக சுமார் 20க்கு மேற்பட்ட வீடுகளில் இருந்த மின்உபகரணங்கள் எரிந்து பழுதடைந்துள்ளன.

மேற்படிச் சம்பவத்தால் அப்பகுதி மக்கள் பலர் கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். (செ-78)


## மரண அறிவித்தல்

### ஜோசப் வடிவேலு சுப்பையா
### (இளைப்பாறிய ஆசிரியர்)



ஆழியவளையைப் பிறப்பிடமாகவும் கற்கோவளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் ஜோசப் வடிவேலு சுப்பையா 05.10.2016 கர்த்தரின் கிருபைக்குள் பிரவேசித்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிசிலியா இராசநாயகியின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - சின்னம்மா தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான ராமு, நல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் இராஜமனோகரன், றஜனி, Dr. றஞ்சனி, Dr. றாகினி, ரவீந்திரா, இராஜகோஷினி, காலஞ்சென்ற பாமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் றெஜீனா, சோமசுந்தரம், Dr. சரத், பிறின்ஸ், விஜிதா, கலிஸ்டர் ஆகியோரின் அன்பு மாமனாரும் நிருஷினி, வொஷிகன், சந்துலி, கீர்த்திகா, கரன், சச்சினி, றக்ஷினி, தனுஷிகா, டிவினியா, டியொன், றெதூஷன், றஷான் ஆகியோரின் பாசமிகு பாட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நாளை 08.10.2016 பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை மெதடிஸ்த சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-6026)

கற்கோவளம்

தகவல்:
Dr. றஞ்சனி - 0714 528 628
Dr. றாகினி - 0774 022 011


### மில்லர் காட்டடி தர்பார்
## தொடரை வென்றது தென்னாபிரிக்கா



அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் டேவிட் மில்லர் காட்டடி தர்பார் காட்ட தென்னாபிரிக்க அணி 4 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ திரேலிய அணி அங்கு 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது.

இரு அணிகளுக்கிடையேயான மூன்றாவது ஒருநாள் போட்டி டேர்பனில் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணியின் தொடக்க ஆட்டக்காரர்களான வோர்னரும், பின்சும் ஆரம்பத்தில் இருந்தே அதிரடி காட்டத் தொடங்கினர்.

இதனால் அணியின் ஓட்டம் மளமளவென உயர அவுஸ்திரேலியா அணி 11.4 ஓவர்களில் 100 ஓட்டங்கள் குவித்தது.

அரைச்சதம் கடந்து சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த பின்ச் 53 ஓட்டங்கள் எடுத்த போது இம்ரான் தாகிர் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இதற்கு அடுத்து வந்த ஸ்மித்தும், வோர்னரும் ஒன்று சேர்ந்து தென்னாபிரிக்காவின் பந்து வீச்சை துவம்சம் செய்தனர்.

தங்களுடைய அதிரடி ஆட்டத்தால் இருவரும் சதங்கள் கடந்தனர். வோர்னர் 117 ஓட்டங்களிலும் ஸ்மித் 108 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

அணி 50 ஓவர் நிறைவில் அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 371 ஓட்டங்கள் குவித்தது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பில் ஸ்ரெய்ன், இம்ரான் தாஹிர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

கடின இலக்கை துரத்திய தென்னாபிரிக்கா அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்கள் குயின்டன் டி ஹொக்கும், அம்லாவும் சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்தனர்.

சிறப்பாக ஆடிய அம்லா 45 ஓட்டங்களில் ஹேஸ்டிங்ஸ் பந்துவீச்சில் ஆட்டமிழக்க, அடுத்த வந்த வீரர்களும் அதிரடி காட்ட முயன்று சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இவர்களுக்கு அடுத்து வந்த டேவிட் மில்லர் தொடக்கத்தில் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இவருக்கு இணையாக ஆரம்ப வீரர் குயின்டன் டி ஹொக்கும் சிறப்பாக ஆடி வந்தார்.

டி ஹொகாக் இக்கட்டான கட்டத்தில் 70 ஓட்டங்கள் எடுத்தபோது வெளியேறினார், இதனால் அவுஸ்திரேலியா அணியின் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எழுந்தது.

ஆனால் அவுஸ்திரேலியா அணியின் கனவை டேவிட் மில்லர் கலைத்தார். ஓவருக்கு ஒரு பவுண்டரி அல்லது சிக்ஸர் என இறுதி கட்டத்தில் வாணவேடிக்கை நிகழ்த்தினார்.

இதனால் தென்னாபிரிக்கா அணி 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 49.2 ஓவர்களில் 372 ஓட்டங்கள் குவித்து அபார வெற்றி பெற்றது.

தோல்வியின் பிடியில் இருந்த தென்னாபிரிக்கா அணியை வெற்றி பெறச் செய்த டேவிட் மில்லர் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

இவர் 79 பந்துகளில் 118 ஓட்டங்கள் குவித்தார் இதில் 10 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கும்.

5 ஒருநாள் போட்டிகள் கொண்ட இத் தொடரை தென்னாபிரிக்கா அணி 3-0 என்ற கணக்கில் வென்று தொடரை கைப்பற்றியுள்ளது. (க)


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## PHYSICAL EDUCATION UNIT

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the post of **Visiting Instructor** in **Football/ Netball/ Table Tennis/ Cricket.** Salary will be paid **Rs. 750/=** per hour.

Selection: By Interview

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna. either in person or by post, on a payment of Rs. 100/= per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self-addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order for Rs.100/= to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Applicant from the University System/Government Departments/ Corporations and Statutory Board Should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an Interview.

Applications for the above post shall be sent on or before **20.10.2016** to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna. Thirunelvely, Jaffna.

**REGISTRAR**
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA

(C-6022)


## தீவுகளை வெள்ளையடித்தது பாகிஸ்தான்




பாகிஸ்தான் - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையே ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இடம்பெற்ற மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச போட்டித் தொடரை முற்றுமுழுதாக கைப்பற்றி மேற்கிந்தியத் தீவுகளை வெள்ளையடித்தது பாகிஸ்தான்.

அபு தாபியில் இடம்பெற்ற இப்போட்டியில் இத்தொடரில் மூன்றாவது தடவையாகவும் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 308 ஓட்டங்களைப் பெற்றது.

நடுப்பாட்டத்தில் இத்தொடரில், மூன்றாவது முறையாகவும் சதம் பெற்ற பாபர் அஸாம் 117 (106), அணித்தலைவர் அஸார் அலி 101 ஓட்டங்களைப் பெற்றனர்.

மே.தீவுகளின் பந்துவீச்சில் அல்ஸாரி ஜோசெப் 2, சுனில் நரைன், சுலைமான் பென், கீரன் பொலார்ட், அணித் தலைவர் ஜேஸன் ஹோல்டர் ஆகியோர் தலா ஒவ்வொரு விக் கெட்டினை கைப்பற்றினார்.

பதிலுக்கு, 309 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் துடுப்பெடுத்தாடிய மே. தீவுகள் 44 ஓவர்களில சகல விக்கெட்டுகளையும் இழந்து, 172 ஓட்டங்களைப் பெற்று 136 ஓட்டங்களால் தோல்வியடைந் தது.

போட்டியின் நாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் பாபர் அஸாம் தெரிவானார்.

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை-2016 பெறுபேறுகள்

2016 ஆம் ஆண்டிற்கான தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் சித்தியடைந்த மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

யாழ்ப்பாணக் கல்லூரி-வட்டுக்கோட்டை

க.கிருத்திகன்-181, ஜெ.சிவசுதன்-178, பே.அனோஸ்-175, ஜெ.துஷியந்தன்-175, அ.ஜனாத்தன்-173, சி.சாத்வீகன்-172, கு.துளசிராம்-171, அ.ஶ்ரீநாத்-170, சி.விந்துஜன்-170, க.அருண்முகிலன்-170, க.நிருத்தியன்-170, சா.வைஷ்ணவி-170, க.சாதுரியா-167, ஜ.அபினயா-167, மு.டர்ஷிகன்-163, ஞா.ஜெனுபவன்-161, சி.ரதுஜன்-161, சு.திஷான்-161, ர.தயான்-160, மு.தமிழ்நிலா-160, தே.சங்கீத்தனி-160, ஜெ.கைன்சியா-159, சு.நிவேதன்-159, ரொ.ஜோன்சன்-159, ச.கோபிகா-157, பு.தட்ஷணா-156, ரா.ஆன்மிலோரிகா-156, க.ஆரபி-156, ஜீ.தர்மிகன்-154, கு.தக்ஷாயினி-154, ஜெ.பானுப்பிரியா-153, இ.இசையமுதன்-153, து.கிஷ்னி-153, ச.சேயோன்-152, தே.சஞ்ஜிகன்-152.

யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்

மா.தனுசியன்-180, கி.அட்ஷஜா-179, ர.பிரதாப்-178, சி.சந்தோஷ்-175, பா.கௌசிகன்-171, ரா.ஹரிஸ்ராஜ்-169, க.கவிந்தியா-167, பு.வினுக்சன்-165, கி.கயல்விழி-163, யே.யுவன்ராஜ்-162, பா.கிருத்திகன்-162, இ.அட்சயன்-163, ர.தனுசன்-160, வி.சந்தியா-158, ஶ்ரீ.சந்தோஷ்சர்மா-156, க.இலக்கியா-154, இ.ஹரிசன்-153, கு.பிரவின்ஜா-152.

# கலை விழா

யாழ்.நெல்லியடி மத்திய கல்லூரியின் (அவுஸ்திரேலிய) பழைய மாணவர்களின் அனுசரணையில் நடத்தப்படும் கலை விழா எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரிக் கலையரங்கில் இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் க.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிர தம விருந்தினராக வடமராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் யோ.ரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

# வீதி விபத்து கவனயீர்ப்பு வாரம்

வாகனத்தை திருப்பப்போகின்றீர்களா? போதுமான தூரத்திற்கு முன்னரே பக்கக்கண்ணாடி பார்த்து வாகனத்தின் திரும்பும் பக்கவிளக்கை போட்டு விட்டீர்களா? மறவாது வாகனத்தினை திருப்பு முன் திரும்பிப் பார்த்தபின் திருப்பிப் பழகுங்கள்.

நிகழ்வு:- "எழுந்து நிற்போம்"

காலம்:- 10.10.2016 அன்று முற்பகல் 10 மணி தொடக்கம் 11 மணிவரை

இடம்:- உங்களுங்கள் அலுவலக, வேலைத்தள வாசலில்

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

# கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் கரவெட்டி

## நவராத்திரி விழா-2016

இடம்:- நிலைய முன்றல்

காலம்:- 08.10.2016 (சனிக்கிழமை)

நேரம்:- பி.ப. 4.00 மணி

தலைவர்

**திரு.கணேசன் திருமாலழகன்** (நிலையத் தலைவர்)

பிரதம விருந்தினர்

**திரு.செல்லத்துரை பகீரதன்**

(Co-ordinator, IML Delevery System (pvt) Ltd)

அருளாசியுரை

**தியாகராஜக்குருக்கள் ஶ்ரீதரக்குருக்கள்**

(உச்சில் அம்மன் ஆலயம் கரணவாய் கிழக்கு)

சிறப்பு விருந்தினர்கள்

**திரு.அ.வினோராஜ்**

(செயலாளர் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

**Mr.R.P.A.Priyantha**

(Inspector of Police Officer-in-Charge, Police Station Nelliady)

கௌரவ விருந்தினர்கள்

**திருமதி பரமேஸ்வரி யோகராசா**

(சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை)

**திரு.கிருஷ்ணராசா கிருஷ்ணமேனன்**

(கிராம சேவையாளர், கரணவாய் கிழக்கு, கரவெட்டி)

***அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

கலட்டி ஐக்கிய ச.சமூக நிலைய நிர்வாகத்தினர்.

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்புவிழா நாளை மறுதினம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறும். கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன், சிறப்பு விருந்தினராக இந்து சமய கலாசார திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், கௌரவ விருந்தினராக கு.ஜெயந்தன், திருமதி ஜெ.பத்மப்பிரியா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# 43 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 22.09.2011 இறப்பு 27.08.2016

கடந்த 27.08.2016 ஆம் திகதி சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் செல்வப் புதல்வன்



**அமரர் ரசிகரன் கபிஷன்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை 08.10.2016 சனிக்கிழமை 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று அத்னைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.39, கல்வளை வீதி, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம். (6141) குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 08.01.1948 மறைவு 19.10.2015

**அமரர் சின்னையா சின்னப்பு**

எம் உறவில் கலந்து முழுமை பெற முன் உறவுகளை பிரிந்து- ஓராண்டு சென்றும் சோகம் இன்னும் ஆறவில்லை ஐயா!

செம்பியன்பற்று, மருதங்கேணி. (சி-6019) தகவல்: ஶ்ரீகரன் குடும்பத்தினர்.


## ஜோதிடத் தகவல்

**கன்னியில் முத்துப்பல் வரிசை**

2-7 ஆம் பாவங்களுக்கு சுபர் சம்பந்தம் பெறுமானால் முத்துப்பல் வரிசையாக தந்தம் போன்ற நிறத்தையும் உடையவர்கள்.



## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
'மதசார்பற்றது' 'ரகசியமானது' 'இலவச சேவை

**021 222 8117, 077 900 8776**

வவுனியா: (024) 324 4444

(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)


# இராசி பலன்

07.10.2016

(புரட்டாதி 21, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு

சஷ்டி பிற்பகல் 4.27 மணிவரை

கேட்டை பிற்பகல் 12.24 மணிவரை

சுபநேரம் 6.02-7.32 மணிவரை

இராகுகாலம் 10.32-12.02 மணிவரை

சஷ்டி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>கார்த்திகை, ரோகிணி பகல்12.33 மணிக்கு தனு-சந் | | |
| | | | ராகு |
| செவ் | சனி சந் | சுக் | சூரி குரு புத |

**மீனம்:** நம்பிக்கைகள் நடைபெறும் நாள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மேடம்:** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம்.

**இடபம்:** சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம், சுப விரயங்கள் கூடும் நாள், உடல்நலனில் கவனம் தேவை.

**மிதுனம்:** விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**கும்பம்:** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சியான தகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்:** பகை விலகி பாசம் கூடும் நாள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உடல்நலன் சீராகும், பயணத்தால் பலன் கிடைக்கும், கௌரவமான நாள்.

**மகரம்:** சுப விரயங்கள் ஏற்படும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனை யைக் கேட்டு நடப்பது நல்லது.

**சிம்மம்:** புதிய நபர்களின் சந்திப்பு இடம் பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சோம்பலை விலக்குவது நல்லது, பயணத்தால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**துலாம்:** இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், வாகன பழுதுச் செலவுகள் குறையும், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

## வடக்கு மாகாண சபையில்

# அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் விசாரணைக்குழு இன்றிலிருந்து செயற்படும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு முதலமைச்சரினால் விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த விசாரணைக்குழு இன்றிலிருந்து தனது பணிகளை ஆரம்பிக்கவுள்ளது. அமைச்சர்கள் மீது ஏதும் குற்றச்சாட்டுக்கள் இருப்பின் அதனை தபால் மூலமோ அல்லது நேரிலும் தெரிவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண அமைச்சர்கள் தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் தனக்கு கிடைத்தவண்ணம் உள்ளதாக சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முழுமையான பக்கச்சார்பற்ற விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி வந்தார்.

அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய ஓய்வு பெற்ற முன்னாள் நீதிபதிகள் கொண்ட ஒரு விசாரணை குழுவை நியமித்து அதனூடாக விசாரணை மேற்கொள்வது என்ற ஆலோசனையை முதலமைச்சர் சபையில் முன்வைத்திருந்தபோது, அமைச்சர்களை வெளியாட்கள் விசாரணை செய்ய முடியாது எனவும் உறுப்பினர்களைகொண்டே விசாரணை செய்ய வேண்டும் எனவும் கூறி கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

எனினும் உறுப்பினர்களை கொண்டு விசாரணை மேற்கொண்டால் அது பக்கச்சார்பான விசாரணையாக அமையக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன என சுட்டிக்காட்டிய முதலமைச்சர், நம்பகத்தன்மையான விசாரணைக்கு வெளித்தரப்பினரே மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்திவந்தார். இந்த நிலையில் முதலமைச்சரின் கோரிக்கை சபையால் அங்கீகரிக்கப்பட்டு. அதற்கான குழு நேற்றைய தினம் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் முன்னாள் நீதிபதிகளான எஸ். தியாகேந்திரன், எஸ். பரமேஸ்வரா மற்றும் முன்னாள் அரச அதிபர் எஸ்.பத்மநாதன் ஆகியோர் விசாரணையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். வடக்கு மாகாண பிரதம செயலர் அலுவலகத்தில் செயற்படும் இந்த விசாரணைக்குழு எதிர்வரும் மூன்று மாதங்கள் வரை தமது விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

இந்த விசாரணை குழுவிற்கு முறைப்பாடு செய்பவர்கள் தபால் மூலமாகவும் அல்லது நேரிலும் முறைப்பாடுகளை செய்ய முடியும் என வடக்கு மாகாண சபையினால் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நேற்று நடைபெற்ற மாகாண சபை அமர்வின் போது தெரிவிக்கப்பட்டது. (இ-4)




யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரியர் தின நிகழ்வு நேற்றைய தினம் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது . கல்லூரியின் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்ரீபாததேசிய கல்வியியற்கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி ஆறுமுகம் சுந்தரலிங்கம் கலந்து கொண்டு விசேட உரையினை வழங்கியிருந்தார். இந்த நிகழ்வில் கல்லூரியின் விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரிய மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (படங்கள்:பொ.சோபிகா)

# வரி தெளிவுபடுத்தல் செயலமர்வு

வடக்கு மாகாண இறைவரித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை 08.10.2016 காலை 8.30 தொடக்கம் வரி தெளிவுபடுத்தல் செயலமர்வு நடைபெறும்.

வடக்கு மாகாண இறைவரித்திணைக்களத்தினால் நிர்வகிக்கும் முத்திரைத் தீர்வை தொடர்பான விடயங்களை சட்டத்தரணிகள், நொத்தாரிசுகள், மக்கள் வங்கி முகாமையாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடும் முகமாக இச் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச் செயலமர்வில் முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் பிரதான ஏற்பாடுகளுக்கான விளக்கங்கள், கைமாற்றத்திற்குள்ளாகும் ஆதனங்களின் பெறுமதியைக் கணிப்பிடும் நுட்ப முறைகளை விளக்குதல், கைமாற்றம் செய்யப்படும் அசைவற்ற ஆதனங்களின் ஆவணங்களை பதிவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்படும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் மற்றும் முத்திரைத்தீர்வை செலுத்தும் புதிய பணம் கட்டும் படிவத்தை மக்கள் வங்கியால் அறிமுகம் செய்தல் போன்ற விடயங்கள் தெளிவுபடுத்தப்படவுள்ளன. இச் செயலமர்வில் வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளர், பிரதிப்பிரதம செயலாளர்(நிதி) ஆகியோரும் உரை ஆற்றவுள்ளார்கள்.

இச்செயலமர்வில் முத்திரை தீர்வை செலுத்துவதில் விழிப்புணர்வையும் ஊக்குவிப்பையும் மேம்படுத்தும் முகமாக கடந்த ஒரு வருடத்தில் ஆதனங்களை கொள்வனவு செய்து கூடியமுத்திரைத் தீர்வையை செலுத்தியபத்துபெயரையும் ஆதனங்களை கைமாற்றம் செய்யும் போது முத்திரைத்தீர்வையினை செலுத்தியதன்மூலம் வடமாகாண இறைவரி சேகரிப்புக்கு பெரும்பங்களிப்பு செய்து ஐந்து சட்டத்தரணிகள் மற்றும்பிரசித்த நொத்தாரிசு ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

வடமாகாண இறைவரித்திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து பல சட்டத்தரணிகள், பிரசித்த நொத்தாரிசுகள் முத்திரைதீர்வை தொடர்பில் ஆதனத்தின் பெறுமதி தொடர்பாகவும் காணி உறுதிகள் நிறைவேற்றும் போது ஏற்படும் பிரச்சினை சம்பந்தமாகவும் போதிய விளக்கங்களை தருமாறு கோரியதற்கிணங்க இச் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண இறைவரிஆணையாளர் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார். (இ

# மாட்டுடன் மோதிய குடும்பஸ்தர் வைத்தியசாலையில் அனுமதி

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த குடும்பஸ்தர் எதிரே வந்த மாட்டுடன் மோதி காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் ஏ9 வீதி பூநகரிப் பகுதியில் கடந்த 4 ஆம் திகதி இரவு 9 மணியளவில் இடம்பெற்றது.

இவ்விபத்தில் நாவாந்துறையைச் சேர்ந்த பொனிப்பாஸ் அலோஷியஸ் (வயது 60) எனும் குடும்பஸ்தரே காயமடைந்தார்.

காயமடைந்த குடும்பஸ்தர் பூநகரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-3-30)

# இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த இளைஞனை மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருநெல்வேலி சிவன் கோவிலடிப் பகுதியில் இடம்பெற்றது. இதில் சந்திரகுமார் பிரசன்னா (வயது-19) என்ற இளைஞனே படுகாயமடைந்தார்.

வீதியால் நடந்து சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள் ஒன்று குறித்த இளைஞனை மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இவ்விபத்தில் தலையில் படுகாயமடைந்த குறித்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-3-30)





# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் (கொழும்பு கிளை) அனுசரணையில் நடைபெறும் அமிர்தம் நூல் வெளியீடு இன்று வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

முன்னாள் அரச அதிபர், கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் உடுவை எஸ். தில்லை நடராசா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், யாழ்.மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.இரவீந்திரன், வடமாகாண கடற்றொழில் போக்குவரத்து, வர்த்தக, கிராம அபிவிருத்தி மற்றும் வீதி அபிவிருத்தி செயலாளர் எஸ்.சத்தியசீலன், வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார், கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.ரி. ஜெயசீலன், யாழ்ப்பாணக் கல்லூரிஅதிபர்கலாநிதிடி.எஸ். சொலமன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ-3-89)




சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு நேற்றைய தினம் யாழ் அஞ்சலகத்தில் நடைபெற்றது. எதிர்வரும் ஒக்டோபர் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற இந்த நிகழ்வில் பலர் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர். (படங்கள்-பொ.சோபிகா)

# யாழ்.பல்கலை.தமிழ்த்துறை நடத்தும் ஆய்வுக் கருத்தரங்கு 9ம்திகதி யாழில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத் தமிழ்த் துறையினர் நடத்தும் ஆய்வுக் கருத்தரங்கு நாளை மறுதினம் 9ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2மணிக்கு சட்டத்துறை விரிவுரை மண்டபத்தில்(மண்டப இலக்கம்-207) இடம்பெறும். யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் கி.விசாக ரூபன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் அறிமுகவுரையினை சட்டத் துறை தலைவர் மொழியியல்துறை பேரா சிரியர் கலாநிதி.சுபதினி ரமேஸ் வழங்கு வார்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக அயல் நாட்டு தமிழ் மொழிக் கற்கைகள் துறைப் பேராசிரியர் சா.உதயசூரியன் "பெண் கவிக ளின் ஈர்ப்பு மையங்கள் "எனும் தலைப்பிலும் பாண்டிச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறுவன பேராசிரியர் ச.பிலவேந்திரன் "ஆவிகளின் உலகம் நிலம் பொழுது ஆள் பற்றிய கருத்தமைவுகள்" பற்றியும் மதுரை காமராசர் பல்கலைக்கழக தமிழியல்துறை தலைவர் பேராசிரியர் பி.சத்தியமூர்த்தி "அண்மைக் காலத் தமிழ்க் கவிதைப் போக்குகள்"பற்றியும் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறை பேராசிரியர் எஸ்.சுந்தரேசன் "நாட்டார் வழக்கியலும் உணவுப் பண்பாடும்"பற்றியும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். நன்றியுரையினை பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் வழங்குவார். (இ-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


## இந்திய விபூதி விற்பனைக்கு

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1Kg) மொத்தமாகவும் (ரூ 100) சில்லறையாகவும் (ரூபா110) பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு:-

எம்மிடம் குங்குமம், சந்தனம், அபிஷேகக் கூடு, இந்தியன் பட்டு, நெய், பஞ்சவர்ணக்கயிறு மற்றும் கோயிற் சாமான்களை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

சிவா நறுமணப் பூங்கா
இல-288 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(சத்திரத்துச் சந்திக்கு அருகாமையில்)
தொ.பேசி-021 222 2567

(#-5939)

## நவராத்திரி பாமாலை

செல்வத்துக்கு இன்று நான்காம் நாள்



தனம் தருபவள்

தாமரை தனில் அமர்ந்து
தன்னிறைவை வாரித்தரும்
தனலட்சுமிக்கு
இன்றோர் தினம்
நீல மேனியனை நீங்காமல்
நிலைத்து நின்று
பல உள்ளங்களில்
வாசம் செய்யும் இலட்சுமிக்கு
இன்றோர் தினம்

அ.அச்சுதன்
கோண்டாவில்.

## பாராட்டி வாழ்த்துகின்றேன்



செல்வி துஷ்யந்தி இராசசூரி
கலைமாணி- (B.A)

கொழும்பு பண்டாரநாயக்க
சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 27.09.2016
நடைபெற்ற பேராதனைப் பல்கலைக் கழகத்தில்
பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (BA)
பட்டம் பெற்ற
செல்வி துஷ்யந்தி இராசசூரி
அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று
சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துபவர்:-
நண்பி K.கஜிபனா

யாழ்ப்பாணம் (6135)

## 18 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

### பிறேமச்சந்திரன் விதுஷன் (பிரான்ஸ்)

(07.10.2016)



பிரான்ஸில் வசிக்கும்
பிறேமச்செல்வன்
செந்தமிழ்ச் செல்வி
தம்பதிகளின் தவப்புதல்வன்
விதுஷன் இன்று தனது 18 ஆவது
பிறந்தநாளைஅப்பா,
அம்மா, தம்பி பிரதீஷனோடு
பிரான்ஸில் மிகவும்
குதூகலமாக
கொண்டாடுகிறார்.
இவரை இலங்கையில்
இருக்கும் அப்பம்மா,
அத்தைமார், மாமா,
மச்சாள் சரணிகா,
மச்சான்மார் சஜீவன்,
சன்ஜேவன் ஆகியோர்
நல்லூர் முருகன்
அருளால் சீரும் சிறப்புடனும்
பல்லாண்டு காலம் வாழ்கவென
வாழ்த்துகிறார்கள்.

வாழ்த்துவோர்:-
அப்பம்மா,அன்னலட்சுமி
அத்தை,கோதா.

103/01,கோயில் வீதி,
நல்லூர். (6144)

## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 32 1/2
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில் (கனடா PR)எதிர்பார்ப்பு: விவாகரத்தும் ஏற்கப்படும்
தொ.இ: B/3969

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மிருகசிரீடம்
கி.பா: 33 3/4 சூரிசெவ் 2இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்: CIVIL ENGINEERING/ அரச தொழில்
தொ.இ: B/3972

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 30 சூரிசெவ் 12இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: BCOM, LLB (அவுஸ்திரேலியா PR)
தொ.இ: B/3973

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 24 1/4
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BA
தொ.இ: B/3976

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 54 3/4 செவ் 8இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்
தொ.இ: G/3992

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 22 1/2 செவ் 12இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/3993

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 41
உயரம்: 5'
தகைமை/தொழில்: BDS/ தனியார்
தொ.இ: G/3847


பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 23 3/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MSC (லண்டன்)
தொ.இ: G/3848

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

# புற்றுநோய் வைத்தியசாலை அமைப்பதற்கு நிதி திரட்டும் நடைபவனி நேற்று ஆரம்பம்

## வடமாகாண முதலமைச்சர் பங்கேற்பு









(படங்கள்:-கரணவாய்ச் செய்தியாளர்)

காலி கராப்பிட்டியவில் சிறுவர்களுக்கான புற்றுநோய் வைத்தியசாலை ஒன்றினை புதிதாக நிர்மாணிப்பதற்காக நிதி திரட்டும் நடைபவனியை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார்.

நேற்று வியாழக்கிழமை காலை இந் நடைபவனி பருத் தித்துறை கொடிக்கம்பத்தடியில் இருந்து ஆரம்பமானது.

சுமார் ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர் நிதியி னைத் திரட்டும் பொருட்டு இவ் நடைபவனி வடக்கில் இருந்து தெற்கிற்கு 28 தின ங்களாக நடைபெறவுள்ளது.

பருத்தித்துறையில் இரு ந்து நகர் வழியாக மந்திகை- நெல்லியடி வழியாக சென்ற நடைபவனிக்கு பாடசாலை மாணவர்கள், கல்வித் திணை க்களத்தினர்,பிரதேச செயலகத்தினர்,பிரதேச சபையி னர்,பருத்தித்துறை சாலை யினர்,வீதிகளில் கொடிகளை அசைத்தவண்ணம் நின் றதுடன் நிதிகளையும் வழங்கினர்.பருத்தித்துறை படைமுகாமின் முன்பாக இரா ணுவத்தினரும் நிதிகளை அளித்தனர்.பொது அமை ப்புகள், வியாபார கம்பனி கள்,வங்கிகள்,வர்த்தக சங் கங்கள் குடிநீர்,குளிர்பானம் என்பவற்றை வழங்கி வைத்தனர். (இ-60)

பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அன்ரனி ஜெகநாதனின் பூதவுடல் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இருந்து ஊர்வலமாக எடுத்துச் செலலப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாகவுள்ள கரைதுறைப்பற்று பிரதேச சபையின் பொது விளையாட்டு மைதானத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அங்கு அரசியல் பிரமுகர்கள்,வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள்,பாராளுமன்ற உறுப்பினர்கள் ,மதத் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் இரங்கல் உரைகள் நடைபெற்று மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு அதன் பின்னர் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் பாண்ட் வாத்திய சகிதம் ஊர்வலமாக சென்று புனித இராயப்பர் ஆலயத்தில் பூதவுடல் வைக்கப்பட்டு அங்கு இரங்கல் பூசை வழிபாடு நடைபெற்று அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு உண்ணாப்பிலவு கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

(படங்கள்-பனிக்கன்குளம்செய்தியாளர்)









# எமது சமூகத்தின் இக்கட்டான நிலைக்கு கல்விச் சமூகம் சார்ந்தோரே பொறுப்பு

## முன்னாள் பீடாதிபதி சுட்டிக்காட்டு

எமது சமூகம் பாரிய இக்கட்டான நிலைக்கு செல்வதற்கு கல்வி சமூகம் சார்ந்தவர்களே பொறுப்புக் கூற வேண்டும்.

அதேபோல் சமூகத்தை நல்ல முறையில் மாற்றி அமைக்கும் கடமை ஆசிரியர்களுக்கு உண்டு என ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி ஆறுமுகம் சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரியர் தின நிகழ்வு நேற்றைய தினம் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேறகண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரை யாற்றுகையில்.

ஆசிரியர்கள் கௌர விக்கப்பட வேண்டும் .அதன் மூலம் இந்த சமூகம் கௌரவிக்கப்படுகிறது. ஒவ்வொரு சமூகத்தையும் மாற்றி அமைக்கும் கடமை ஆசிரியர்களுக்கு உண்டு. ஒவ்வொரு ஆசிரியர்களும் தாம் உண்மையான, நேர்மையான, விசுவாசமான செயற்பாட்டை மேற்கொள்கிறோம் என சமூகத்தில் பெருமைப்பட்டுக்கொள்ள முடியும்.

ஆசிரிய வாழ்க்கை மிகவும் உன்னதமானதாக இருக்க வேண்டும். மாணவர்களுக்கு முன்னுதாரணமாக நடக்க வேண்டும். ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் மனச்சாட்சியுடன் தமது தொழிலை சரியாக செய்ய முயற்சிக்கும் போது அதற்கான கௌரவத்தை பெற்றுக்கொள்ள முடியும். எந்த தொழிலை செய்கிறோமோ அந்தந்த தொழிலுக்கு உரியவர்களாக மாற்றியமைத்து அதை சிறந்த முறையில் செய்ய வேண்டும்.

அதாவது முதலில் மனம் நன்றாக இருக்க வேண்டும்.

தற்போது எமது சமூகம் மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளது. இந்த நிலை மாற்றமடைய வேண்டும். கல்வி நிலையில் உயர்ந்து காணப்பட்ட எமது யாழ் மாவட்டம் தற்போது இறுதியான மாவட்டமாக இருப்பதாக அறிகிறேன். மதுபான பாவனையில் முன்னிலையில் இருப்பதாக கூறுகிறார்கள். எமது சமூகம் ஏன் இவ்வாவு கீழ் நிலைக்கு சென்றது என நினைக்கும் போது மிகவும் வேதனையாகவுள்ளது. இவை காலத்தால் எமக்கு கிடைத்த தீய விளைவுகள். யுத்த காலப் பகுதியில் பண்பில் உயர்ந்த சமூகமாகத்தான் இருந்தோம். யுத்தம் முடிவுற்ற பிறகு எமது சமூகம் வேதனைக்குரிய சமூகமாக மாறியுள்ளது. அதில் இருந்து மீள நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். சமூகத்தில் படித்த நிலையில் உள்ள ஒவ்வொருவரும் பொறுப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். அதிலும் முக்கியமாக ஆசிரியர்களின் பொறுப்பு அதிகம் உள்ளது. எனவே சமூகத்தை நல்ல நிலைக்கு மாற்ற முழு முயற்சியை படித்தவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

மனித விழுமியம், நல்ல வாழ்க்கை முறையை பாடசாலை மாணவர்கள் மத்தியில் கற்பிக்க வேண்டும். நல்ல ஒழுக்கம் என்பது பாடசாலை மற்றும் குடும்பத்தில் இருந்து வளர வேண்டும். மாணவர் மனதில் இடம்பிடித்து மாணவர்களுக்கு முன்மாதிரியாக ஆசிரியர்கள் இருக்க வேண்டும். வழி தவறிப் போகின்றவர்களை வழிப்படுத்துவதும் அவர்களின் கடமை. அந்த வகையில் மாணவர்களை நல்ல முறையில் வளர்த்தெடுப்பவர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்களே.

எமது சமூகம் பாரிய இக்கட்டான நிலைக்கு செல்வதற்கு கல்விச் சமூகம் சார்ந்தவர்கள் பொறுப்புக்கூறவேண்டிய நிலையில் உள்ளோம். மற்றவரை பாதிக்கும் நிலை குறைந்து போகின்றது.எம் சமூகத்துக்கு ஏன் இந்த சாபக்கேடு என்ற கேள்வி வருகிறது. நாம் அனைவரும் சிந்திக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

புனிதமான சமூக சேவைக்குரிய தொழிலில் காலடி வைத்துள்ள ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் எந்த நேரத்திலும் தமது ஒழுக்க நெறியில் இருந்து விலக மாட்டோம் என்று சபதம் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் சமூகத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். மிக உயர்ந்த இடத்தில் உள்ளவர்கள்.அதை பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு ஆசிரியரதும் பொறுப்பு. அந்த புனிதமான தரம் தனிப்பட்ட ஒருசிலருடைய தீய நடத்தைகளால் குறையக்கூடாது. அதை மனதளவில் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

காலத்தின் தேவையால் நாம் யுத்த நிலைக்கு சென்றோம். யுத்தம் நல்ல நோக்கத்தை கொண்டு தான் நடைபெற்றது. ஆனால் அதில் பின் தள்ளப்பட்டுள்ளோம். அதை தொடர்ந்து கீழ் நிலைக்கு சென்றுள்ளோம். ஆனால் மேலும் எமது சமூகம் பழைய நிலைக்கு முன்னேற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# ஆற்றுக்குள் மணல் அகழ்வில் ஈடுபட்ட உழவு இயந்திரம் கைப்பற்று

## சாரதியும் கைதானார்

(முல்லாவி)



முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிலுள்ள மாங்குளம் பொலிஸ் பகுதியில் அம்பாள்புரம் கோவிலாறு பகுதியில் அனுமதிப்பத்திரத்திற்கு முரணானவகையில் ஆற்றுக்குள் உழவு இயந்திரத்தை இறக்கி மணல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த உழவு இயந்திரம் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதியும் கைதானார் என முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் கடந்த 3 ஆம் திகதி திங்கட் கிழமை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த முல்லைத்தீவு மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கருணாரத்தினம் ஜெசிந்தன் தலைமையிலான பொலிஸ் அணியினரின் சுற்றி வளைப் பின்போதே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தின் போது கைப்பற்றப்பட்டுள்ள உழவு இயந்திரத்தையும் அதன் சாரதியையும் மேலதிக விசாரணைக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைக்காகவும் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# துஷ்பிரயோகம் இல்லாத சூழலை சிறுவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பது எமது கடமையாகும்

## மஸ்தான் எம்.பி. வலியுறுத்து

(பனிக்கன்குளம்)



சிறுவர் துஷ்பிரயோகம் இல்லாத சூழலை சிறுவர்களுக்கு நாம் உருவாக்கிக் கொடுக்க வேண்டும்எனவன்னி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

தலைமன்னார் லோரன்ஸ் ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற உலக சிறுவர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

எமது எதிர்காலத்தின் விளைநிலங்களாக உள்ள சிறுவர்களுக்கு அவர்களின் சூழலை சிறப்புமிக்கதாக உருவாக்கி கொடுப்பது ஒவ்வொரு பெரியோர்களது கடமையாகும். கல்வி. ஆரோக்கியம் போன்றவற்றில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். சிறுவர் துஷ்பிரயோகம் இல்லாத சூழலை சிறு[illegible]ளுக்கு நாம் உருவாக்கி கொடுக்க வேண்டும எனவும் வலியுறுத்தி கூறினார் .

இப்பாடசாலைக்கு காதர் மஸ்தானினால் பாடசாலைக்கு தேவையான தளபாடங்கள் வழங்கப்பட்டன.

பாடசாலை சமூகத்தின் வேண்டுகோளுக் கிணங்க பாடசாலையில் குடிநீர் வசதியை ஏற்படுத்தும் நோக்கில் நீர்த்தாங்கியுடன் கூடிய கிணறு அமைப்பதற்கான அடிக்கல்லையும் நாட்டிவைத்தார். (2-15)




# தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை-2016 பெறுபேறுகள்

துணுக்காய் கல்வி வலயம்

மு/ ஒலுமடு தமிழ் வித்தியாலயம்

சி. பிருந்தாபன் -176

மு/ தண்டுவான் அ.த.க. பாடசாலை

சி. நந்தன் -172

மு/பாண்டியன்குளம் ஆரம்ப வித்தியாலயம்

க.கலைமதி -153

மு/ஆறுமுகம் வித்தியாலயம்

லூ.வர்சிகா -166, தி.விஜிதா -160.

மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை

ய. கலைக்குமரன் -150

மு/அனிஞ்சியன்குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்

த.எயுறின் -160, பு.கனிவிழி -169,தே. மகிழவன் -169, வி.சங்கீர்த்தனன் -169, ற.பிறைவிழி-165, பா.சுதனா -164, யோ-லாவண்யன் -163, சு.அர்ச்சயா -162, கி.விதுர்சன் -156, தீ.தேசிகன் -155.

மு/விநாயகர்புரம் அ.த.க. பாடசாலை

ச. கலைவிழி -151

மு/குமாரசுவாமி வித்தியாலயம்

க.ரிக்சிகா -164, ரி.சஜீர்னி -161, ஜே.கலைப்பிரியன் -160.

மு/மயில்வாகனம் ஆரம்ப வித்தியாலயம்

கி.அல்வின் -170, கே.பானுஜன் -169 , க. சஜீபா -167, வ.அதீசன் -151. (2-15)

# பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்ளூரில் தயாரான துப்பாக்கி மீட்பு!

(மல்லாவி)

மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட திருமுறிகண்டி இந்துபுரம் கிராமத்தில் அண்ணா கோப்பி விற்பனை நிலையத்திற்கு முன்பாகவுள்ள புகையிரதப் பாதைக்கு அருகில் இருந்த பற்றைக்குள் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு பயன்படுத்தும் நோக்குடன் மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றை மாங்குளம் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் புதன் கிழமை காலை 9.30 மணியளவில் இடம் பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மாங்குளம் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து மாங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் நேரடி உத்தரவிற்கு அமைய மாங்குளம் பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் அ.சியானன் தலைமையில் பொலிஸ் கொஸ்தாப்பஸ்களான ரூபமேனன் (84939), கில்ரோய் (86695) ஆகியோர் அடங்கிய பொலிஸ் அணியினரின் தேடுதலின் போது துப்பாக்கி கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை என மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(2-15)

# 16 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு கிராம அலுவலர்கள் நிரந்தரமாக நியமிக்கப்படாமையால் மக்கள் அவதி

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் 46 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ள நிலையில் 16 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நிரந்தரமாக கிராம அலுவலர்கள் நியமிக்கப்படாமல் இருப்பதுடன் பிரதேச செயலக மட்டத்தில் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும்20 சமுர்த்தி அலுவலர்கள் இல்லாது இருப்பதால் பொதுமக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கு பதில் கடமையாற்றும் அலுவலர்களைத் தேடி அலைந்து திரியும் அவல நிலை காணப்படுவதாக பாதிக்கப்பட்டுள்ள பிரதேச மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் மக்களின் இடப்பெயர்வின் பின்னரான மீள்குடியேற்றத்தின் போது 46 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 13 ஆயிரத்து 213 குடும்பங்களைச் சேர்ந்த 42 ஆயிரத்து 55 அங்கத்தவர்கள் மீள்குடியேறியுள்ளனர்.

வன்னியில் நடைபெற்று முடிந்த இறுதி யுத்தத்தின் போது கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவானது பாரிய அழிவுகளைச் சந்தித்த பிரதேசமாகும்.

இங்கு மக்கள் மீள்குடியேறி ஏழு வருடங்கள் கடந்த நிலையிலும் வாழ்வாதார உதவிகள் உட்பட பல்வேறு அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளது.

இந் நிலையில் நிரந்தர கிராம அதிகாரிகளும் நிரந்தர பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தரும் மற்றும் சமுர்த்தி அலுவலர்களும் நியமிக்கப்படாது இருப்பதன் காரணமாக மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக தமது கிராமங்களுக்கான பதில் கிராம அலுவலர்களைத் தேடியும் பதில் கடமையாற்றும் சமுர்த்தி அலுவலர்களைத் தேடியும் அலைந்து திரியும் அவல நிலை காணப்படுவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் மேற்படி பிரதேசத்திற்கான அலுவலர்களுக்கான வெற்றிடங்களை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு உதவ வேண்டுமென பாதிக்கப்பட்டுள்ள பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

# பிரம்மோற்சவம்

வவுனியா கோவில் குளம் அருள் மிகு ஸ்ரீ தேவி பூதேவி ஸ்ரீ மஹாவிஷ்ணு தேவஸ்தானத்தின் பிரம்மோற்சவ பெருவிழா நேற்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் சிவஸ்ரீ முத்து இரத்தின வைத்தியநாத குருக்கள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.


மேலும் சப்பரத் திருவிழா எதிர்வரும்13 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 8 மணிக்கும் தேர்த் திருவிழா மறுநாள் வெள்ளிக் கிழமை முற்பகல் 10.25 மணிக்கும் தீர்த்தோற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக் கிழமை முற்பகல் 11 மணிக்கும் திருக்கல்யாணம் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கும் ஆஞ்சநேயர் உற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமையன்று முற்பகல் 10.30 மணிக்கும் இடம் பெறும்.

பக்த அடியார்கள் வருகை தந்து அருள் மிகு ஸ்ரீ தேவி பூதேவி ஸ்ரீ மஹா விஷ்ணுவின் அருளைப்பெறுமாறு கேட்கப்படுகின்றனர். (2)



முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பனிக்கன்குளம் கலைமகள் முன்பள்ளியின் சிறுவர் தின நிகழ்வுகள் அண்மையில் கலைமகள் முன்பள்ளியில் இடம்பெற்றது. இதன்போது மாணவர்கள் கௌரவிக்கப்பட்டு பரிசுப்பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் ஆசிரியர்களும் பெற்றோரும் கலந்து சிறப்பித்தனர்.

(படங்கள்:-பனிக்கன் குளம் செய்தியாளர்)




(கேலிச்சித்திரம்)

# 'வற்' திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனு

(கொழும்பு)

பெறுமதி சேர் வரி (வற்) திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக, உயர் நீதிமன்றத்தில், நேற்று முன்தினம் புதன்கிழமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வரி திருத்தச் சட்டமூலத்தின் 4, 13, 17 மற்றும் 18ஆவது உறுப்புரைகள்,

அரசியலமைப்பின் 3, 4, மற்றும் 12 (1), 12 (2), 14 (1) (2) உறுப்புரைகளுக்கு எதிராக உள்ளன என்று தெரிவித்து, ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளருமான உதய கம்மன்பிலவினால், நேற்று முன்தினம் முற்பகல், இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு தொடர்பான தீர்ப்பு வழங்கப்படும் வரையில், வரி திருத்தச் சட்டமூலம் தொடர்பான விவாதம், நாடாளுமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படாது என்று, பிவிதுரு ஹெல உறுமய கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7-10)

# எல்லை தாண்டிய பயங்கரவாதம் குறித்து ஆலோசனை நடத்த வேண்டும்-பிரதமர்

எல்லை தாண்டிய பயங்கரவாதம் குறித்து சார்க் அமைப்பில் இடம்பெற்றுள்ள 8 நாடுகளும்விரிவாக ஆலோசனை நடத்தி தீர்வு காண வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது இந்திய பயணத்தில் நேற்று முன்தினம் பிரதமர் மோடியை சந்தித்து, பிராந்திய பாதுகாப்பு, இரு நாட்டு உறவை மேம்படுத்துவது குறித்து ஆலோனை நடத்தினார்.

இதன்பின்னர் அவர் செய்தியாளர்களை சந்தித்தார்.

இந்தியா-பாகிஸ்தான் இடையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள போர் ஒரு தீர்வாகாது.

இந்தநிலையில் எல்லை தாண்டிய பயங்கரவாதம் குறித்து சார்க் அமைப்பில் இடம்பெற்றுள்ள 8 நாடுகளும் விரிவாக ஆலோசனை நடத்தி தீர்வு காண வேண்டும்.

அத்துடன் சார்க் மாநாடு ஒத்திவைக்கப்பட்டதற்கு காரணம் என்ன? என்ன நடந்தது என்பது பற்றியெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சார்க் அமைப்பின் முன்னால் 2 முக்கிய விடயங்கள் தற்போது முன்வைக்கப்பட்டுள்ளன. எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை எப்படி தடுப்பது மற்றும் எந்தெந்த விடயங்களில் 8 நாடுகளும் சேர்ந்து பணியாற்றுவது என்பதுவே அவை இரண்டுமாகும்.

இந்த இரண்டு விடயங்கள் குறித்தும் சார்க் நாடுகள் கவனம் செலுத்த வேண்டும். அதை நாம் செய்யாவிட்டால், சார்க் அமைப்பு என்பது கேள்விக்குறியதாக அமைந்துவிடும் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (இ-7-10)

# ராஜ்நாத் சிங்குடன் ரணில் விசேட சந்திப்பு



இந்தியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கை நேற்று சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது அமைதி மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை செய்யப்பட்டது.

ரணிலிடம் பிராந்திய அமைதி, பாதுகாப்பு, பயங்கரவாதத்திற்கு எதிரான ஒத்துழைப்பு மற்றும் இந்திய பெருங்கடலில் கடல்வழி பாதுகாப்பு குறித்து ராஜ்நாத் சிங் விளக்கினார். முன்னதாக காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியாகாந்தி, முன்னாள் பிரதமர் மன்மோகன்சிங் உள்ளிட்டோரையும் நேற்றுமுன்தினம் விக்கிரமசிங்க சந்தித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# கலையால் நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஐரோ.ஒன்றியம் 280 மில்லியன் உதவி



(கொழும்பு)

பல்லினசார் கலைகளின் ஊடான நல்லிணக்கத்தை மையப்படுத்திய தேசிய திட்டத்திற்காக ஐரோப்பிய ஒன்றியம் 280 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

இலங்கையில் அனைத்தின நல்லிணக்கத்தினையே ஐரோப்பிய ஒன்றியம் எதிர்பார்ப்பதாக ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவிற்கான திட்டப்பணிப்பாளர் மாரிமுத்து திருநாவுக்கரசு தெரிவித்தார்.

கிளிநொச்சி , அம்பாறை மற்றும் கொழும்பில் முன்னெடுக்கப்படவுள்ள இந்த பல்லினசார் கலை விழாவிற்கு "நம்பிக் கையின் சிறகசைப்பு" ( விங்ஸ் ) என்று பெயரிடப்பட்டுள்ளது.

இது குறித்து தெளிவுபடுத்தும் ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

இதன் போது உரையாற்றுகையிலேயே ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவிற்கான திட்டப்பணிப்பாளர் மாரிமுத்து திருநாவுக்கரசு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நம்பிக்கையின் சிறகசைப்பு கலை விழா இம்மாதம் 21 ஆம் திகதி கிளிநொச்சியில் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்தும் மூன்று நாட்கள் இடம்பெறவுள்ள கலை விழாவின் இரண்டாவது பாகம் அம்பாறையில் 27 ஆம் திகதியிலிருந்து 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இறுதி நிகழ்வு நவம்பர் மாதம் 7 ஆம் திகதியில் இருந்து 13 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது. தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்கள் பலரும் இந்த தேசிய நல்லிணக்க கலை விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த விழாவில் 900 இளங்கலைஞர்கள் பங்குபெற்றுவதுடன் 200 க்கும் மேற் பட்ட மூத்த கலைஞர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

கலை சிந்தனை, உணவு சார்ந்த கொண்டாட்டமாக இடம்பெறும் இவ் விங்ஸ் விழாவில் பல்வகையான கலைப்படைப்புக்கள், அறிஞர்கள் மாநாடு மற்றும் திறந்த வெளி உணவுச் சந்தை என்பன இதில் உள்ளடக்கப்படும்.

நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் முகமாக அனைத்து பின்னணிகளிலுமிருந்து ஒன்றிணைத்து கொண்டு இவ் விழாக் கொண்டாட்டங்கள் அமையப்பெறவுள்ளன.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் உள்ளிட்ட பல அமைப்புகள் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் இந்த தேசிய விழாவிற்கு ஐரோப்பிய ஒன்றியம் 280 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)


# கேள்வி அறிவித்தல்

**கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடமாகாணம்.**

**2016/2017 ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்புச் சேவைக்கான விலைமனுக்கோரல்**

**பெறுகை இல: NP/03/03/NCB/CLE.SER/2016**

தலைவர்,பிரதம செயலாளர் பெறுகைக்குழுவினால் கல்வி அமைச்சு மற்றும் அதன் கீழான வடக்கு மாகாண திணைக்களங்கள் பாடசாலைகளுக்கான 2016/2017 ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்புச் சேவையை (Cleaning Service) வழங்குவதற்கு தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்வி மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1)கேள்விதாரர் சுத்திகரிப்புச் சேவையை வழங்குதலுக்கான வியாபாரப் பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச் சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.

2)கேள்விதாரரின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் வடக்கு மாகாணத்தில் அமைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் சேவையை வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வழங்கல் வேண்டும்.

3)ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களை எழுத்து மூலமான கோரிக்கையுடன் ரூபா 3,500.00 இனை மீளளிக்கப்படாத வைப்பாகச் செலுத்தி கடமை நாட்களில் 10.10.2016 ஆம் திகதி தொடக்கம் 31.10.2016 ஆம் திகதி வரை காலை 9.30 மணி தொடக்கம் பி.ப 3.30 மணிவரையான காலப்பகுதியில் செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

4)கேள்வி ஆவணங்கள் 01.11.2016 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு "செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது கல்வி அமைச்சில் பிரதம கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

5)சகல கேள்விகளுடனும் ரூபா 350,000.00 பெறுமதியான கேள்விப்பிணை ஒன்று இணைக்கப்படல் வேண்டும். அத்துடன் பிணைப்பொறுப்பு செல்லுபடிகாலம் 01.11.2016 முதல் 27.02.2017 வரையானதாகும்.

6)கிடைக்கப்பெற்ற கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் கேள்வி கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

7)கேள்வி முன்னாயத்தக் கூட்டம் 25.10.2016 அன்று முற்பகல் 10.00 மணியளவில் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் நடைபெறும்.

அ.பத்திநாதன்
தலைவர்,பிரதம செயலாளர் பெறுகைக்குழு,
பிரதம செயலாளர் செயலகம்,
வடக்கு மாகாணம்.
(சி-6020) திகதி:07.10.2016

# முதலமைச்சர் விக்கியை கொல்லச் சதி!

# கூட்டமைப்பு விசாரணையைக் கோரும்

## இந்தியன் எக்ஸ்பிரஸ் தகவல்

(கொழும்பு)

**தன்னைக் கொலை செய்வதற்கு தென்பகுதியில் சதித்திட்டம் தீட்டப்படுவதாக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுத் தொர்டர்பாக, பொலிஸார் விசாரணைகளை நடத்துமாறு ஜனாதிபதியிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரலாம் என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.**

இந்த விடயத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின்கவனத்துக்கு கொணடு சென்று, விக்னேஸ்வரனுக்கு பொலிஸார் பாதுகாப்பை வலுப்படுத்துமாறு கோரும்படி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் தாம் கோரியுள்ளதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்ற நீதியரசராக இருந்த விக்னேஸ்வரன், அடிப்படைகள் இல்லாமல் இத்தகைய குற்றச்சாட்டை எழுத்து மூலம், பகிரங்கமாக வெளியிட்டிருக்க மாட்டார். எனவே, இந்த விடயம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தப்படவேணடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த விடயத்தை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்வது குறித்து ஆராயப்பட்டு வருவதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு அனுப்பியிருந்த சிறப்புரையில, தனது உயிருக்கு உலை வைத்து விட்டு அந்தப் பழியை விடுதலைப் புலிகள் மீது சுமத்துவதற்கு தென்னிலங்கையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்கூறியிருந்தார் எனபது குறிப்பிடத்தக்கது.(இ-7-10)

## தெற்கில் வாழும் தமிழ் மக்களுக்கு மேல் மாகாண முதல்வர் எச்சரிக்கை

வடக்கில் சிங்கள மக்களுக்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அச்சுறுத்தல் விடுத்தால் தெற்கில் வாழும் தமிழ் மககள் தொடர்பாகவும், அதே பாணியில் தாமும் செல்ல நேரடும் என்று மேல்மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"யாழ்ப்பாணத்தை விடவும் மேல் மாகாணத்திலேயே அதிகளவிலான தமிழ் மக்கள் வாழ்கின்றனர், வடக்கில் சிங்கள மக்களுக்கு ஏற்படுத்தப்படும் நிலையே இங்கும் ஏற்படுத்தப்படும்.

வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் இனவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார் என்பதற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. அரச கருமங்களில் வடமாகாண முதலமைச்சர் பல்வேறு சந்தர்ப்பத்தில் இனவாதத்தை கடைப்பிடித்திருப்பதாகவும் மேல்மாகாண முதலமைச்சர் குற்றம்சாட்டினார். (இ-7-10)

## சோனியா, மன்மோகன் சிங்கை டில்லியில் சந்தித்தார் ரணில்



இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தியை நேற்று முன்தினம் டில்லியில் சந்தித்துள்ளார்.

இதேவேளை அந்நாட்டு முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துள்ளார். (இ-7-10)

## அரசின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு அரசியல்வாதிகளின் பெயர்கள் வேண்டாம்

### அமைச்சர் அமரவீர பரிந்துரை

(கொழும்பு)

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு அரசியல்வாதிகளின் பெயர்களை பயன்படுத்தக்கூடாது என்ற யோசனை ஒன்றை பாராளுமன்றத்தில் முன்மொழிய நடவடிக்கை எடுப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

எந்தவொரு அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் அரசியல் வாதிகளின் பணத்தினால் முன்னெடுக்கப்படுவதில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், அது மக்கள் செலுத்துகின்ற வரிப்பணமே என்று கூறியுள்ளார்.

சில திட்டங்களுக்கு வெளிநாட்டு உதவிகள் அல்லது கடன்கள் கிடைப்பதாக கூறினார்.

இவ்வாறான நிலைமையில அந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு அரசியல்வாதிகளின் பெயர்களை பயன்படுத்துவது சிறந்த செயற்பாடு அல்ல என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார். (இ-7-10)

## அதிவேக நெடுஞ்சாலைகளின் 2ஆம் கட்டப்பணிகள் ஆரம்பம்

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று கிரியுல்ல பிரதேசத்தில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தலைமையில நடைபெற்றது.

மீரிகம தொடக்கம் குருநாகல் வரையிலான 39 கிலோ மீற்றர் நீளமான பகுதி நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்த இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகளை 2019ஆம் ஆண்டுக்குள் பூர்த்தி செய்ய நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.


இதற்காக 15 ஆயிரம் கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. முதற்கட்டப் பணிகள் கடவத்தை முதல் மீரிகம வரையிலும், இரண்டாம் கட்டம் குருநாகல் முதல் தம்புள்ளை வரையிலும் மேற்கொள்ளப்படும்.

2020 ஆம் ஆண்டளவில் நான்கு கட்டங்களாக இந்த நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.(இ-7-10)

## வறுமை ஒழிப்பு ஆண்டாக 2017

# அமைச்சர்கள் 3 மாதங்களுக்கு ஒரு தடவையேனும் அனைத்து மாவட்டங்களுக்கும் செல்ல வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி பணிப்பு



(கொழும்பு)

வறுமையிலிருந்து விடுபடும் ஆண்டாக அடுத்த ஆணடை பெயரிட்டு அதற்குரிய செயற்பாடுகளை அமுல்படுத்து வதுடன் மாவட்ட மட்டத்தில் அதன் முன்னேற்றத்தை ஆராய்வதற்கு தொடர்புடைய அமைச்சர்கள் மூன்று மாதங்களுக்கு ஒருதடவை அனைத்து மாவட்டங்களுக்கும் பயணிக்க வேண்டுமென ஜனாதிபதி மைத்திரி பணித்துள்ளார்.

அதற்கான நேர அட்டவணையொன்றை வழங்குவதற்கும் எதிர்பார்ப்பதுடன் அரசியல் பாகுபாடுகளின்றி அனைவரினதும் ஒத்துழைப்பைப் பெற்று அந்த செயற்திட்டங்களை வெற்றியடையச் செய்வதற்கு அனைத்து அமைச்சர்களும் பாடுபட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிலையான அபிவிருத்தி இலக்கு தொடர்பில் விளக்கமளிக்கும் விசேட கருத்தரங்கில் உரையாற்றும போதே ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு வறுமையிலிருந்து விடுபடும் இலக்கை அடைவதற்காகவே நிலையான அபிவிருத்தி இலக்கை அமுல்படுத்த வேண்டியுள்ளதெனவும் இதன்போது சுட்டிக்காட்டிய ஜனாதிபதி நிலையான அபிவிருத்திக் கொள்கை தொடர்பில் அரசியல்வாதிகள், அரச அலுவலர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் அனைத்து நிறுவனங்களிலும் பணியாற்றுவோரும் பொதுமக்களும் தெளிவடைவது கட்டாயமானதெனவும் தெரிவித்தார்.

பூகோள வெப்பமயமாதல் மற்றும் சூழல் அழிவடைதல் தொடர்பில் இன்று முழு உலகும் குழப்பமடைந்துள்ளதுடன் ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகதின் தலைமையில் அணமையில் பாரிஸில் இடம்பெற்ற மாநாட்டின்போது எட்டப்பட்ட தீர்மானத்தை அங்கீகரித்த ஆசிய நாடுகளில் இலங்கை முன்னிலையில் இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தேசிய நிலையான அபிவிருத்தி பங்குபற்றுதல் தொடர்பான திறந்த கலந்துரையாடலாக பெயரிடப்பட்டுள்ள இந்தக் கருத்தரங்கு நிலையான அபிவிருத்திச் செயற்பாடுகளை அமுல்படுத்துவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அலுவலர்கள் மற்றும் ஏனைய தரப்பினருக்கிடையில் கருத்தாடலை ஏற்படுத்தும் நோக்குடன் நிலையான அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வணக்கத்துக்குரிய அத்துரலிய ரத்ன தேரர், நிலையான அபிவிருத்தி மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா, பிரதியமைச்சர் சுமேதா பி ஜயசேன உள்ளிட்ட அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் மாகாண முதலமைச்சர்கள், மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் ஐ.நா. அமைப்பின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் உனா மக்கோலி உள்ளிட்ட பிரமுகர்கள் இக்கருத்தரங்கில் பங்குபற்றியிருந்தனர். (இ-7-10)

# காவிரி விவகாரம்; மத்திய அரசின் நிபுணர்கள் குழு இன்று கூடுகிறது



காவிரி நீர்ப் பிரச்சினை தொடர் பாக மத்திய அரசு அமைத்துள்ள நிபுணர்கள் குழு பெங்களூரில் இன்று கூடுகிறது.

காவிரி நீர் பங்கீடு பிரச்சினை தொடர்பான வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் கர்நாடகம், தமிழகம் ஆகிய இரு மாநிலங் களில் காவிரி படுகையில் உள்ள அணைகளில் நீர் இருப்பு, நீர் வரத்து ஆகியவை குறித்த உண்மை நிலவரத்தைக் கண்டறிய நிபுணர் கள் குழுவை அமைக்குமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட்டது. அத் துடன் அந்தக்குழு 17ஆம் திகதி க்குள் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது.

அதன்பேரில் மத்திய நீர் வளத் துறை மற்றும் நதிகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகம் மத்திய நீர் வள ஆணையத்தின் தலைவர் ஜி.எஸ்.ஜா தலைமையில் மத்திய நீர் வள ஆணைய உறுப்பினர் மசூத் உசேன், கிருஷ்ணா மற்றும் கோதாவரி படுகை அமைப்பின் தலைமைப் பொறியாளர் ஆர்.கே. குப்தா, தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா, புதுச்சேரி மாநிலங்களின் தலைமைப் பொறியாளர்கள், தமிழ நாடு, கர்நாடக மாநிலங் களின் தலைமைச் செயலாளர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் கொண்ட குழுவை அமைத்து உள்ளது.

இந்த நிபுணர்கள் குழுவின் கூட்டம் பெங்களூரில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக்குழுவினர் கர்நாடகம், தமிழகம் ஆகிய இரு மாநிலங் களிலும் காவிரி படுகையில் உள்ள அணைகளுக்கு சென்று அங் குள்ள நீர் இருப்பு, நீர்வரத்து ஆகிய வற்றை பார்வையிட்டு, 17ஆம் திகதி உச்ச நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்வார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பாரிஸ் சுற்றுச்சூழல் காலநிலை ஒப்பந்தம் இன்னும் 30 நாட்களில் - ஐ.நா.அறிவிப்பு




இன்னும் 30 நாட்களில் பாரிஸ் சுற்றுச்சூழல் காலநிலை ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும் என்று ஐ.நா. சபை அறிவித்துள்ளது.

சுற்றுச்சூழல் காலநிலை தொடர் பாக ஐ.நா. சபையில் உள்ள நாடு கள் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் பாரிஸ் நகரில் ஒன்று கூடி ஒரும னதாக வரைவு ஒப்பந்தம் ஒன் றினை உருவாக்கினர்.

இந்த பாரிஸ் சுற்றுச்சூழல் காலநிலை ஒப்பந்தத்திற்கு பல்வேறு நாடுகளும் தொடர்ச்சியாக ஒப்புதல் அளித்த வண்ணம் இருந்தன. இந்தியாவும் கடந்த காந்தி ஜெயந்தி தினத்தன்று ஒப்புதல் ஆவணங் களை ஐ.நாவிடம் அளித்தது.

இந்நிலையில், இன்னும் 30 நாட்களில் பாரிஸ் சுற்றுச்சூழல் காலநிலை ஒப்பந்தம் நடைமுறை க்கு வரும் என்று ஐ.நா.சபை அறி வித்துள்ளது.

இதுவரை 72 நாடுகள் இதற்கு ஒப்புதல் அளித்துள்ளன. பசுமை வாயு வெளியிடும் நாடுகளில் 56 சத வீதத்திற்கும் மேலாக ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளதாக ஐ.நா.பரு வநிலை மையம் தனது இணையத் தளத்தில் தெரிவித்துள்ளது.

இதனிடையே ஐரோப்பியன் யூனியன் ஒரே அமைப்பாக நேற்று முன்தினம் பாரிஸ் சுற்றுச்சூழல் காலநிலை ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இது குறித்து பிரான்ஸ் சுற்றுச் சூழல் அமைச்சர் சீகோ லெண்ராயல் கூறுகையில், "ஐரோப்பியன் யூனி யன் நாடுகள் ஏற்கனவே இந்த ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்துள் ளது. தற்போது அதற்கான ஆவ ணங்களை ஐ.நாவிடம் தாக்கல் செய்துள்ளது" என்று தெரிவித்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் ரஷ்யா, அமெரிக்காவுக்கு பயணம்



பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீன்மார்க் அய்ரால்ட் அலெப்பே நகர் மீதான தாக்குதல் குறித்து ஆலோசனை செய்ய ரஷ்யா, அமெரிக்கா செல்கிறார்.

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதி கள் மற்றும் அரசு எதிர்ப்பு கிளர் ச்சியாளர்களுக்கு எதிரான அமெரி க்கா மற்றும் ரஷ்யா தலைமையி லான படைகள் தனித்தனியே தாக் குதல்களில் ஈடுபட்டு வருகின்றன.

இதில் சிரியாவில் தாக்குதல் நடத்துவது குறித்து ரஷ்யா மற்றும் அமெரிக்கா இடையே பல்வேறு சிக்கல்கள் நிலவி வருகின்றன.

இதனிடையே சிரியாவின் அலெப்பே நகரில் தாக்குதல் நடத் துவது தொடர்பான தீர்மானமா னது ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்நிலையில் அலெப்பே நக ரில் தாக்குதல் நடத்துவது குறித்து ஆலோசனை நடத்த பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீன் மார்க் அய்ரால்ட், அலெப்பே நகர் மீதான தாக்குதல் குறித்து ஆலோ சனை செய்ய ரஷ்யா, அமெரிக்கா செல்கிறார்.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவி ற்கு நேற்று சென்ற ஜீன்மார்க், இன்று வெள்ளிக்கிழமை அமெரி க்கா சென்று இந்த தீர்மானத்திற்கு ஆதரவு திரட்டுவார் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வறுமையை ஒழிக்க முடியாது மோடிக்கு நவாஸ்ஷெரீப் பதிலடி



இராணுவ டாங்கிகளைக்கொண்டு வறுமையை ஒழிக்க முடியாது என பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் பாராளுமன்றத்தில் பேசினார்.

ஊரி தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், பாகிஸ்தான் பகுதியில் அமைந்துள்ள தீவிரவா திகள் முகாம்கள் மீது இந்திய இரா ணுவம் தாக்குதல் நடத்தி அழித் தது. சர்ஜிக்கல் ஸ்ரைக் என்ற பெயரில் நடத்தப்பட்ட இந்த அதிர டித் தாக்குதலில் தீவிரவாதிகள் பலர் கொல்லப்பட்டனர். பாகிஸ் தான் இராணுவ வீரர்கள் இருவ ரும் உயிரிழந்தனர். ஆனால், சர்ஜிக்கல் தாக்குதல் நடத்தவி ல்லை என்றும், அது இந்தியாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கை என்றும் பாகிஸ்தான் கூறி வருகிறது.

இதற்கிடையே வறுமை மற்றும் கல்வியறிவின்மையை முதலில் ஒழிப்பது யார் என்ற போட்டிக்கு தயாரா? என பாகிஸ்தானுக்கு மோடி சவால் விட்டிருந்தார்.

அவரது கேள்விக்கு பதிலளிக் கும் முயற்சியாக, பாகிஸ்தான் பாரா ளுமன்ற கூட்டுக்கூட்டத்தில் பிரத மர் நவாஸ் ஷெரீப் நேற்று முன்தி னம் பேசினார். அவர் பேசியதாவது,

பாகிஸ்தான் போரை விரும் பவில்லை அமைதியைத் தான் விரும்புகிறது. ஊரி தாக்குதல் குறித்து உரிய விசாரணை நடத் தாமலேயே பாகிஸ்தான் மீது இந்தியா குற்றம் சாட்டுகிறது. காஷ் மீர் மக்களின் போராட்டத்திற்கு பாகிஸ்தான் ஆதரவு தொடரும். போரை பாகிஸ்தான் விரும்பவி ல்லை. ஆனால் போர் வந்தால் அதனை எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம். எந்த சவாலையும் சந்திக்க பாகிஸ்தான் இராணுவம் தயாராக உள்ளது.

வறுமையை ஒழிப்பதில் நம் முடன் போட்டியிட இந்தியா விரும் புகிறது. விளைநிலங்கள் மீது டாங்கிகளை இயக்குவதால் வறு மையை ஒழித்துவிட முடியாது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். (இ-7)

# வேதியியலுக்கான நோபல் பரிசு அறிவிப்பு








மூலக்கூறு பற்றிய கண்டுபிடிப்பு களுக்காக 3 விஞ்ஞானிகளுக்கு வேதியியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. ரூ.6 கோடி பரிசுத்தொகையை இவர்கள் 3 பேரும் பகிர்ந்து கொள்வார்கள்.

இயற்பியல், மருத்துவம், பொரு ளாதாரம், அமைதி, இலக்கியம் உள்ளிட்ட துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு ஆண்டுதோ றும் நோபல் பரிசு வழங்கப்படு கிறது. அவ்வகையில் இந்த ஆண் டுக்கான நோபல் பரிசுகள் சுவீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் அறி விக்கப்பட்டு வருகின்றன. மருத் துவம் மற்றும் இயற்பியலுக்கான நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் வேதியியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது.

இந்த ஆண்டு வேதியியல் நோபல் பரிசினை பிரான்ஸ் விஞ் ஞானி ஜீன்பியர் சாவேஜ், ஸ்கொட் லாந்து விஞ்ஞானி பிரேசர் மற்றும் நெதர்லாந்து விஞ்ஞானி பெர்னாட் பெறிங்கா ஆகியோர் இணைந்து பெறுவார்கள் என நோபல் பரிசு தேர்வுக்குழு அறிவித்துள்ளது. ரூ.6 கோடி பரிசை இவர்கள் 3 பேரும் பகிர்ந்து கொள்வார்கள். மூலக்கூறு கள் பற்றிய கண்டுபிடிப்புகளுக்காக இந்தப் பரிசு வழங்கப்படுகிறது. மூலக்கூறு இயக்கத்தை திறன் மூலம் கட்டுப்படுத்தக்கூடிய அள வில் இவர்கள் புதிய மூலக்கூறு இயந்திரத்தை தயாரித்து இருக் கிறார்கள்.

விஞ்ஞானி பிரேசர், அமெரி க்காவின் நார்த்வெஸ்டர்ன் பல் கலைக்கழகத்தில் பணியாற்றி வருகிறார். ஜீன் பியர் சாவேஜ், ஸ்ட்ராஸ்பர்க் பல்கலைக்கழகத் திலும், பெர்னாட் பெரிங்கா, குரோ னிங்கன் பல்கலைக்கழகத்திலும் பணிபுரிகின்றனர். இன்று அமைதி க்கான நோபல் பரிசும், 10ஆம் திகதி பொருளாதாரத்துக்கான நோபல் பரிசும், 13ஆம் திகதி இலக்கியத் திற்கான நோபல் பரிசும் அறிவிக் கப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (இ-7)

# ஐ.நா. சபையின் புதிய பொதுச்செயலராக போர்த்துக்கல் முன்னாள் பிரதமர் தெரிவு




ஐக்கிய நாடுகள் சபையின் புதிய பொதுச்செயலராக போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த ஆன்டோனியோ கட்டரஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐ.நா. சபை எனப்படும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலராக தென் கொரிய நாட்டை சேர்ந்த பான்-கீ-மூன் உள்ளார். இவர் கடந்த 10 ஆண்டுகளாக இந்த பொறுப்பில் உள்ளார். இந்நிலையில் அவர் இந்தாண்டு இறுதியுடன் ஓய்வு பெறவுள்ளார்.

இதையடுத்து, புதிய பொதுச் செயலரை தெரிவு செய்யும் பணி நடைபெற்றது. இது தொடர்பாக நடந்த வாக்கெடுப்பில் போர்த்துக்கல் முன்னாள் பிரதமர் ஆன்டோனியோ கட்டரஸ் அதிக வாக்குகள் பெற்று தெரிவானார். இவருக்கு ஐ.நா. பாதுகாப்பு சபையில் உள்ள 15 நாடுகளின் உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இவர் தற்போது ஐ.நா., சபையின் அகதிகள் அமைப்பின் தலைவராகவுள்ளார். கட்டரஸ் எதிர்வரும் ஜனவரி மாதம் ஐ.நா.பொதுச் செயலராக பதவி ஏற்கவுள்ளார். (இ-7)

# போக்குவரத்தில் சாதனை படைத்த டுபாய் சர்வதேச விமான நிலையம்




ஐக்கிய அமீரகத்தில் அமைந்துள்ள டுபாய் சர்வதேச விமான நிலையம் பயணிகள் போக்குவரத்தில் பெரும் சாதனை படைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் 76 இலட்சத்து 20 ஆயிரம் பயணிகள் வந்து சென்றுள்ளதாக கூறப்படுகிறது. இது முந்தைய அதிகரிப்பு அளவை விட 14 சதவீதம் உயர்வு என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச அளவில் டுபாய் விமான நிலையம் எப்போதும் பயணிகள் போக்குவரத்தில் முன்னணி வகித்து வருகிறது. ஜூலையில் ரம்ழான் நோன்பு நாட்களாக இருந்துள்ள நிலையில், பயணிகள் போக்குவரத்து வழக்கத்தை விட அதிகமாக இருந்துள்ளது.

மேலும் வர்த்தகர்கள், சுற்றுலா பயணிகள் என்று பல தரப்பட்டவர்களும் டுபாய் வழியாக செல்வதை விரும்புகின்றனர். 2016 ஆம் ஆண்டு தொடக்கம் முதல் கடந்த ஏழு மாதங்களில் பயணிகள் போக்குவரத்து ஏழு சதவீதம் உயர்ந்துள்ளது. ஒகஸ்ட் மாதத்தில் மட்டும் டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் 7.7 மில்லியன் பயணிகள் போக்குவரத்து செய்துள்ளனர். போக்குவரத்து செய்த நாட்டின் பட்டியலில் அதிகபட்ச மாக இந்தியாவிற்கு மட்டும் 9 இலட்சம் பயணிகள் போக்குவரத்து செய்துள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது என்று போக்குவரத்து அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. (இ-7)

# ஹேய்ட்டியில் மேத்யூ புயலின் தாண்டவத்தால் 11 பேர் பலி!



இலத்தீன் அமெரிக்க நாடான ஹேய்ட்டியில் 'மேத்யூ' புயல் ருத்ரதாண்டவம் ஆடியது. டொமினிக்கன் குடியரசும் இந்த புயலுக்கு தப்பவில்லை. இரு நாடுகளிலும் 11 பேர் பலியாகினர்.

இலத்தீன் அமெரிக்க நாடான ஹேய்ட்டியை கடந்த செவ்வாய்க்கிழமை 'மேத்யூ' புயல் கடுமையாக தாக்கியது. இந்த புயல் காரணமாக மணிக்கு 140 மைல் வேகத்துக்கு அதிகமாக சூறாவளி வீசியது.

பலத்த மழையும் பெய்தது. 6 ஆண்டுகளுக்கு முன்னர் 2010 ஆம் ஆண்டு அந்த நாட்டை தாக்கிய பூகம்பத்துக்கு பிறகு இது மிகப்பெரிய இயற்கை சீற்றம் என கருதப்படுகிறது.

'மேத்யூ' புயல் ருத்ர தாண்டவம் ஆடியதால் பல நகரங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதேபோன்று தொலைபேசி, இணையத்தள சேவையும் முடங்கியது. பல நகரங்கள் உருக்குலைந்து போயின.

கடலோரப் பகுதிகள் மூழ்கி விட்டன. இயல்பு வாழ்க்கை முடங்கிப்போனது.

இந்த புயல் காரணமாக ஹேய்ட்டியில் சாகுபடி செய்யப்பட்டிருந்த பயிர்கள் நாசமாகின. நூற்றுக்கணக்கான வீடுகள், கட்டடங்கள் பலத்த சேதம் அடைந்தன. ஆயிரக் கணக்கான மக்கள் வீடுகளை காலி செய்துவிட்டு முகாம்களில் தஞ்சம் புகுந்தனர்.

ஹேட்டியின்அயல்நாடான டொமினிக்கன் குடியரசையும் 'மேத்யூ' புயல் ஒரு கை பார்த்தது. அங்கும் இந்தப் புயல் பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. பலத்த மழை பெய்ததால் 500இற்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து தரைமட்டமாகி விட்டன.

ஹேய்ட்டி, டொமினிக்கன் குடியரசு ஆகிய இரு நாடுகளிலும் 'மேத்யூ' புயல் தொடர்பான சம்பவங்களில் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

'மேத்யூ' புயல் அடுத்து பஹாமாசை தாக்கிவிட்டு அமெரிக்காவில் புளோரிடா, தெற்கு கரோலினா, வடக்கு கரோலினா, ஜோர்ஜியா மாகாணங்களை தாக்கும் என வானிலை ஆய்வு வட்டாரங்கள் கூறுகின்றன.

இந்த மாகாணங்களில் இப்போதே அவசர கால நிலை அமுல்படுத்தப்பட்டுள்ளன.

தெற்கு கரோலினா மாகாணத்தில் கடலோர மக்களை முழுமையாக வெளியேற்றி, முகாம்களில் தங்க வைப்பதற்கு அந்த மாகாண ஆளுநர் நிக்கி ஹாலே நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இஸ்ரோவின் ஜிசாட்-18 செய்றகைக்கோள் விண்ணில் வெற்றிகரமாக ஏவப்பட்டது
## இந்தியப் பிரதமர் மோடி பாராட்டு



(பரீஸ்)

இந்தியாவின் அதி நவீன தகவல் தொடர்பு செயற்கைக் கோளான இஸ்ரோவின் ஜிசாட்-18 பிரான்ஸ் நாட்டில் உள்ள பிரெஞ் கயானா ஏவுதளத்தில் இருந்து நேற்று அதிகாலை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

ஏரியன்-5 வி.ஏ-231 ரொக்கெட் மூலம் விண்ணில் செயற்கைக்கோள் வெற்றிகரமாக செலுத்தப்பட்டதை அடுத்து இஸ்ரோவுக்கு பிரதமர் மோடி பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

இந்த செயற்கைக்கோளில் தகவல் தொடர்புக்காகவும், போக்குவரத்து துறையில் வழிகாட்டுவதற்கு மற்றும் காலநிலை மாற்றத்தை முன் கூட்டியே தெரிந்து கொள்வதற்காகவும் 'கியூபேண்ட்' எனப்படும் அதிநவீன தொலைத்தொடர்பு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

விண்ணில் செலுத்தப்பட்ட 32 ஆவது நிமிடத்தில் செயற்கைக்கோளானது அதன் சுற்று வட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. (இ-7)

# அமெரிக்காவில் சர்வதேச பலூன் திருவிழா



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நடைபெற்று வரும் 9 நாட்கள் சர்வதேச பலூன் திருவிழாவில், பல்வேறு வண்ணங்களிலும், விதவிதமான வடிவங்களிலும் உருவாக்கப்பட்ட நூற்றுக்கணக்கான பலூன்கள் வானில் பறக்கவிடப்பட்டுள்ளன. இதனை ஏராளமான பார்வையாளர்கள் பிரமிப்புடன் கண்டுகளித்து வருகின்றனர்.

அமெரிக்காவின் நியூ மெக்சிகோவின் Albuquerque நகரில் சர்வதேச வெப்ப பலூன் திருவிழா, ஆண்டு தோறும் நடைபெறுவது வழக்கம்.

அதன்படி, 45ஆவது ஆண்டாக பலூன் திருவிழா, "Desert kaliedoscope" என பெயரிடப்பட்டு கோலாகலமாக நடைபெற்று வருகிறது. 9 நாட்கள் நடைபெறும் இந்த திருவிழாவில், பல்வேறு நாடுகளில் இருந்தும் ஏராளமானோர் கலந்துகொண்டு, பல்வேறு வண்ணங்களிலும், விதவிதமான வடிவங்களிலும் நூற்றுக்கணக்கான பலூன்களை வானில் பறக்க விட்டுள்ளனர்.

வெப்பக்காற்று நிரப்பப்பட்டுள்ள இந்த இராட்சத பலூன்கள், வானில் வரிசையாக மிதந்து செல்லும் கண்கொள்ளாக் காட்சியை, ஏராளமான சுற்றுலாப் பயணிகள் பிரமிப்புடன் கண்டுகளித்து வருகின்றனர்.

உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் இந்த பலூன் திருவிழாவைக் காண நியூமெக்சிகோ நகரில் குவிந்து வருகின்றனர்.

பல்வேறு நாட்டைச் சேர்ந்த விளையாட்டு பிரியர்கள் திருவிழாவில் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர்.

பாலைவனத்தை மையக் கருவாக கொண்டு இந்த ஆண்டு நூற்றுக்கணக்கான பலூன்கள் பறக்கவிடப்பட்டு வருகின்றன.

கடந்த வாரம் தொடங்கப்பட்ட பலூன் திருவிழா நாளை மறுதினம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இந்த ஆண்டு 500 இற்கும் மேற்பட்ட பிரமாண்ட பலூன்கள் பறக்கவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

# தாய்லாந்து அரசைக்கண்டித்து மாணவர்கள் பெரும் போராட்டம்

(ஹொங்கொங்)

ஹொங்கொங் ஆர்வலரான ஜெயுதுடையயோஷ்வா வோங் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் நாடு கடத்தப்பட்டமையை கண்டித்து தாய்லாந்தில் மாணவர்கள் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது வீதியில் இறங்கிய மாணவர்கள், யோஷ்வாவிற்கு தாய்லாந்தில் வசிப்பதற்கு உரிமையுள்ளது எனக் கோஷமிட்டனர்.

இவ்வாறு யோஷ்வாவிற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் சுமார் 30 சுலாலோங்கார்ன் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிலையில், தாய்லாந்து அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் தாம் அதிருப்தி அடைந்துள்ளதாக ஆர்ப்பாட்டக் குழுவின் தலைவர் குறிப்பிட்டார். இவ்விடயத்தில் அரசாங்கம் மிகக் குறுகிய மனப்பாங்குடன் செயற்பட்டுள்ளது. புதிய தலைமுறைக்கான வாய்ப்புக்களை அரசாங்கம் மேலும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சம்பூர் மக்களுக்கு பூர்வீகக் காணிகள் மீள வழங்கப்படாது



(கொழும்பு)

**சம்பூர் அனல்மின் நிலையத்திட்டம் கைவிடப்பட்டுள்ள போதிலும் இந்தத் திட்டத்திற்காக சுவீகரிக்கப்பட்ட 500 ஏக்கர் காணி உரிமையாளர்களுக்கு மீளக் கையளிக்கப்பட மாட்டாது என்று மின்வலு அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.**

இதற்காக அவர்களுக்கு மாற்றுக் காணிகளே வழங்கப்படும் என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க சம்பூர் மக்களின் காணிகள் தொடர்பாக கேள்வி எழுப்பியிருந்தார்.

குறித்த திட்டத்திற்காக 500 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டதோடு அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் கிளிவெட்டி அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

எனவே அவர்களது சொந்தக் காணிகள் வழங்கப்படுவது தொடர்பாக பிமல் ரத்நாயக்க வினவியிருந்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் அஜித் பி.பெரேரா, சம்பூர் திட்டம் கைவிடப்பட்டுள்ள போதிலும், அங்கு அமைக்கப்பட்ட அலுவலகம் இன்னும் கலைக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

சம்பூர் மக்கள் இடம் பெயர்ந்தமைக்கு மின்சார சபையோ அல்லது அரசாங்கமோ காரணம் இல்லை என்று தெரிவித்த அமைச்சர், அவர்கள் கடந்த கால யுத்தம் காரணமாகவே இடம்பெயர்ந்திருப்பதாகவும் கூறினார்.

காணிகளை இழந்த பெருமளவிலானவர்களுக்கு மாற்றுக்காணி வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், இதுவரை மாற்றுக்காணி பெற்றிராதவர்கள் மின்வலு அமைச்சு அல்லது மீள்குடியேற்ற அமைச்சில் தெரியப்படுத்தினால் அவர்களுக்கான மாற்றுக்காணி வழங்குவது பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (இ-7-10)

# வடக்கு, கிழக்கு உள்ளிட்ட பகுதிகளில் கடும் வரட்சி; 3 இலட்சம் மக்கள் பாதிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நிலவிவரும் வரட்சி காரணமாக மூன்று இலட்சத்து 10 ஆயிரத்து 365 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணம், சப்ரகமுவ, வடமத்திய மற்றும் வடமேற்கு ஆகிய மாகாணங்களில் இவ்வாறு தொடர்ச்சியான வரட்சி நிலை ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள 78 ஆயிரம் குடும்பங்களில் அதிகளவானோர் கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.



இதற்கமைய கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் 20 ஆயிரத்து 458 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 678 பேர் வரட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் திருகோணமலை மாவட்டத்தில் வரட்சியினால் மூவாயிரத்து 867 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 677 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடமாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் 5550 பேரும், வவுனியா மாவட்டத்தில் மூவாயிரத்து 111 பேரும் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த பொலனறுவை மாவட்டத்தில் 25 ஆயிரத்து 480 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 309 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் வெகுவிரைவில் அவர்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7-10)

# ஆசிரியர்களுக்கு எதிராக நீதிமன்றம் செல்லும் நிலைக்கு சமூகம் மாறியுள்ளது - ஜனாதிபதி





மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள், சுதந்திரம், ஜனநாயகம் என்பன சமூகத்தின் நலனுக்காக பயன்படுத்தப்பட வேண்டுமேயன்றி சமூகத்தை பிழையாக வழிநடத்தும் வகையில் அல்ல என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பாடசாலை ஆசிரியர் ஒரு பிள்ளையை தண்டித்தால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும் நிலைக்கு இன்று எமது சமூகம் மாறியுள்ளது. அது நியாயமானதா? நியாயமற்றதா? என்பது தொடர்பில் வாதங்கள் உள்ளபோதும், அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள், சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை அனுபவிக்கின்ற அதேநேரம் அவற்றை உண்மையாக விளங்கிக் கொள்வதும் அறிந்து கொள்வதும் பெற்றோர்களது பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முற்பகல் கொழும்பு தாமரைத் தடாகம் கலையரங்கில் நடைபெற்ற 'குரு பிரதிபா பிரபா பிரணாம' விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இலங்கை பாடசாலைக் கல்வித்துறையில் முக்கிய இடம் வகிக்கும் ஆசிரியர்களும் அதிபர்களும் தமது தொழில் உயர்வானது என்பதை உலகிற்கு எடுத்துச் சொல்லி நாட்டின் பிள்ளைகளின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குவதற்காக அர்ப்பணிப்புடன் செய்யும் சேவைக்கு உரிய உபகாரம் செய்யும் வகையில் கல்வி அமைச்சு 'குரு பிரதிபா பிரபா பிரணாம' விழாவை வருடாந்தம் ஏற்பாடு செய்துவருகிறது.

ஒருசமூகத்தையும்நாட்டையும் மாற்ற வேண்டியது அரசியல்வாதிகளின் பணியாகும் என்றபோதும், நாட்டையும் சமூகத்தையும் ஆன்மீக ரீதியாக குணப்படுத்துவதற்கு ஆசிரியர்களால்தான் முடியும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, ஆசிரியர் சேவையின் மேன்மைக்காக ஒரு அரசு என்றவகையில் பெற்றுக் கொடுக்கக்கூடிய அனைத்து வசதிகளையும்பெற்றுக்கொடுக்க தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

250 அதிபர்கள், 459 ஆசிரியர்கள் ,29 பிரிவெனாக்களின் தலைவர்கள் மற்றும் 56 பிரிவெனா ஆசிரியர்கள் இதன்போது கௌரவிக்கப்பட்டதோடு, ஜனாதிபதியினால்சான்றிதழ்களும்வழங்கி வைக்கப்பட்டன.

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம், இராஜாங்க அமைச்சர் வீ.ராதாகிருஷ்ணன், பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா உள்ளிட்ட அமைச்சர்கள், மாகாண கல்வி அமைச்சர்கள், கல்வித் துறையைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7-10)

# வடக்கும் கிழக்கும் இணைய இடமளியேன்

## மகிந்த சூளுரை



(கொழும்பு)

**வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைக்க ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சூளுரைத்துள்ளார்.**

தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையான இனப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமானால் தமிழரின் பூர்வீகத் தாயகப் பிரதேசமான வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைத்து தமிழ் மக்களின் சுயாட்சி அதிகாரத்தை உறுதிப்படுத்தும் வகையிலான சமஷ்டி ஆட்சிமுறை ஊடாக அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என தமிழர் தரப்பினால் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வரும் நிலையிலேயே மகிந்த இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள நெலும் பொக்குண என்ற தாமரைத் தடாகம் அரங்கிற்கு அருகிலுள்ள மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் நடவடிக்கை அலுவலகத்தில் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் முன்னாள் ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பை அடுத்து அங்கு கூடியிருந்த ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து மீண்டும் தமது தமிழீழக் கனவை அடைய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும், வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் முயல்வதாக குற்றம்சாட்டினார்.

எனினும் வடக்கு, கிழக்கு இணைப்பை தான் விரும்பவில்லை என்றும் கூறிய அவர், அதற்கு தான் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்றும் சூளுரைத்துள்ளார்.

வடக்கு - கிழக்கு இணைப்பிற்கு முஸ்லிம் கட்சிகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுவரும் நிலையிலேயே மகிந்த இந்தக் கருத்தை கூறியிருக்கின்றார்.

அதேவேளை கூட்டு எதிர் கட்சியினர் உருவாக்கவுள்ள புதிய அரசியல் அமைப்பிற்கு முஸ்லிம் மக்களின் ஆதரவை பெற்றுக்கொள்வதற்காக முஸ்லிம் அமைப்பொன்றையும் உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அளுத்கம தாக்குதல் உட்பட முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இன வன்முறைகள் காரணமாக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களும் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவாக வாக்களித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனால் மீண்டும் ஆட்சியை கைப்பற்றும் முயற்சியில் தீவிரமாக இருக்கும் மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவர்தலைமையிலான அணியினர் தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவை திரட்டிக் கொள்ள தீர்மானித்து செயற்பட்டு வருவதாகக் கூறும் அரசியல் ஆய்வாளர்கள், அதன் வெளிப்பாடே மகிந்தவின் இந்தக் கருத்துக்கள் என்றும் கூறியுள்ளனர். (இ-7-10)

# ஊடகங்களுக்கு எதிரான இரகசிய நடவடிக்கை குறித்து இராணுவத்துக்கு எதுவுமே தெரியாதாம்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் ஊடகங்களுக்கு எதிராக எந்த இரகசிய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டது தொடர்பாக, இராணுவத்துக்குத் தெரியாது என்று, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பின் போது, ஊடகவியலாளர்களைக் கண்காணிக்கவும், அவர்களுக்கு எதிராக இரகசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இராணுவத்துக்குள் இரகசியப் பிரிவு ஒன்றை மகிந்த ராஜபக்ஷ பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக, இலங்கை இராணுவப் பேச்சாளரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.



அதற்கு, தான் அதுபற்றி அறிந்திருக்கவில்லை என்று பிரிகேடியர் செனவிரத்ன பதிலளித்தார்.

எனினும், இந்தக் குற்றச்சாட்டு நீதிமன்றத்தில் நடந்து வரும் வழக்கு ஒன்றாக மாறிவிட்டது.

எனவே, இதற்கான பதில்களை நீதிமன்றத் தீர்ப்பு வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

# கையடக்கத் தொலைபேசியை கவனமாக பயன்படுத்துங்கள் என மகிந்த கூறினார்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு



(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசியை கவனமாக பயன்படுத்துங்கள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒருமுறை என்னிடமே கூறியிருந்தார் என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

ஆனால் ஜனவரி எட்டு புரட்சிக்குப் பின்னர் எமது அரசாங்கத்தில் அவ்வாறு தொலைபேசி உரை பதிவு செய்யப்படுவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நீதிபதி ஒருவரின் தொலைபேசி பதிவு செய்யப்படுவதாக கூறப்படுகின்றதே என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்,

அது குறித்து எனக்கு தெரியவில்லை. ஆனால் அந்தக் குற்றச்சாட்டுக் குறித்து விசாரணை நடத்தப்படும். இதில் ஜனாதிபதி தெளிவாக இருக்கின்றார். ஜனவரி 8ஆம் திகதிக்குப் பின்னர் இவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்றார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## விருந்து என்றால் விழுந்துவிடுவதுண்டா!

நூற்றுக்கு அறுபதுபேர் சாப்பாட்டுப் பிரியர்கள் என்றால் ,நூற்றுக்குத் தொண்ணூறு பேர் விருந்துப் பிரியர்கள்.விருந்து என்றால் போதும், விழுந்துவிடுவார்கள்; விழுந்தடித்துக் கொண்டு போவார்கள். ஆனால் வெளியே ஆர்வமற்றவர்கள் மாதிரிக் காட்டிக் கொள்வார்கள்.

எனக்குத் தெரிந்து ஒரு பிரபல அரசியல் தலைவர் மீன் பிரியர்.மீன் உணவு என்றால் போதும், துள்ளுவார். இந்தப் பிரபலத் தலைவருக்கு அப்படி ஒரு பலவீனம். இவர் பல வீடுகளில் பலமான விருந்து சாப்பிட்ட குற்றத்திற்காக அவர்களுக்கெல்லாம் சில பதவிகளைத்தர வேண்டிய கட்டாயத்திற்குப் பலமுறை தள்ளப்படுகிறார்!

பல இடங்களில் இலஞ்சமே கோப்பி வடிவத்தில்தான் ஆரம்பிக்கிறது. "வாங்க கோப்பி சாப்பிடலாம்'' என்று ஆரம்பித்துக் காரியத்தைச் சாதகமாகப் பேசி முடித்து வரும் விற் பன்னர்கள் பலர் இருக்கிறார்கள்.

பெரும்பாலான மிருகங்களையும் உயிரினங்களையும் உணவைக் காட்டியே மனிதன் பிடிக்கிறான். அல்லது கொல்கிறான். இந்த உத்திக்கு மனிதர்களும் இலக்காகி விடுவது எவ்வளவு கேவலம்!

ஒரு வேளை,உணவைத் தந்துவிட்டு முதல் கவளத்தை வாயில் வைத்தவுடன் , என் மகனுக்கு ஏதாச்சும் ஒரு வேலை போட்டுக் கொடுத்தீங்கன்னா... என்றும் என்னைத் பத்தி ஏதாச்சும் எழுதணும். நீங்க ...என்றெல்லாம் என்னிடம் ஆகாத மிகப் பெரிய விண்ணப்பங்களை நீட்டியவர்கள் உண்டு. அதிலிருந்து விழித்துக் கொண்டேன். பொது விருந்துகளில்கூட அபூர்வமாகவும், எனக்கெனத் தரப்படும் விருந்துகளை மிகமிக வடிகட்டியும் கலந்து கொள்கிறேன். சாமானியத்தில் மாட்டுவதில்லை. உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்று பெரியவர்கள் வேறு சொல்லி வைத்துவிட்டுப் போய் விட்டார்களே!

பெரிய மனுக்களைத் தராத சிலர் கூட எனக்கு ஒரு வேளைச் சாப்பாட்டைப் போட்டு விட்டு என்னுடைய நேரத்தை ஏராளமாகச் சாப் பிட்டிருக்கிறார்கள். விருந்து என்று அழைத்தால் அந்த அழைப் பைத் தராசில் தூக்கி நிறுத்த வேண்டும். இது என்ன உண்மையான அன்பின் பேரில் தரப் டுவதா-இல்லை-ஏதும் வலையா? பதிலுக்கு நாம் ஒரு விருந்தை அவர்களுக்குத் தந்து அதைச் சரி செய்ய முடியுமா? போன்ற கேள்விகள் மடமடவென்று வந்து விழ வேண்டும்.

உண்மையில் அன்பும் அபிமானமும்தான் காரணம் என்றாலும் கூடச் சிலமுறை தள்ளிப் போட வேண்டும்; தவணை சொல்ல வேண்டும். நம்மை அழைப்பதில் அவர்கள் களைப் படையாதிருக்கிறார்களா? என்று பார்க்க வேண்டும்.சீக்கிரம் களைப்படைந்து போனால் அது சம்பிரதாயமான அழைப்பே தவிர , வேறல்ல. முதலில் என் விருந்து , அப்புறம் உங்கள் வீட்டுக்கு வருகிறேன் என்று இத்தகையவர்களைச் சமாளிக்க வேண்டும்.

அதற்காக யாருக்கும் உதவக் கூடாது என்பதல்ல வாதம். எவருக்கும் உதவலாம் . ஆனால் அதன் பின்னால் ஒரு கட்டாயம் இருக் கக் கூடாது. தூய அன்பான அழைப்புக்களையெல்லாம் நாம் சந்தேகிக்க வேண்டியதில்லை; ஆனால் அதை ஏற்றுக் கொண்டால் பின்னால் அவர் கள் சொல்வதை யெல்லாம் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏதும் இல்லை என்பதில் உறுதியாய் இருந் தால்போதும்.

புத்திசாலிகள் எவரும் ஒரு வீட்டில் சாமானியத்தில் கையை நனைப்பதில்லை.

**லேனா தமிழ்வாணன்**




# அழகு ராணி!

ஓரிடத்தில் இருந்த எலி, முயல், குரங்கு, வெட்டுக்கிளி ஆகியவை ஒன்றுடன் ஒன்று நன்றாகப் பழகி வந்தன.

ஆனாலும் அவைகளுக்குள் அழகு குறித்து அடிக்கடி விவாதங்கள் எழும். ஒவ்வொன்றும் தன் பெருமையைப் பறைசாற்றும் விதத்தில் பேசும். முயல் மட்டும் மவுனமாக இருக்கும்.


"நம் நால்வரில் நான் தான் மிக அழகு! மனிதர்கள் கூட எங்கள் இனத்திலிருந்துதான் தோன்றியதாகச் சொல்வார்கள்!" குதித்து குதித்து நடனமாடியபடி சொல்லியது குரங்கு.

"நாங்கள் மனிதர்களின் வீட்டுக்குள்ளே புத்திசாலித்தனமாக ஒளிந்தும் வாழ்கிறோம்! எங்களிடம் அழகும் அறிவும் இருக்கிறது. எனவே நான்தான் அழகு தேவதை!" என்றது எலி.

"மனிதர்கள் திட்டும் போது குரங்கு முகம், எலி முகம் என்று கூட உங்களைப் பற்றிக் கூறுவார்கள்! நான் சிறிய உருவமாக இருந்தாலும் கிளியின் நிறத்தில் அதைப் போன்றே அழகாக இருக்கிறேன்!" பெருமிதம் பொங்கக் கூறியது வெட்டுக்கிளி.

"நான் இந்த அழகுப் போட்டிக்கே வரவில்லை!" முயல் சொல்ல, மூன்றும் சேர்ந்து சிரித்தன. முயல் மெதுவாக அவ்விடத்தை விட்டு அகன்றது.

"என்ன இருந்தாலும் வெள்ளை வெளேரென்று முயல் ஓடி வரும் அழகே தனிதான்!" குரங்கு சொல்லியது.



"ஆமாம் ஆமாம்!" ஒப்புக் கொண்டது வெட்டுக்கிளி.

"நிறமும் அழகும் மட்டும் இருந்தால் போதுமா? அறிவு புத்திசாலித்தனம் எல்லாம் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அழகியாக ஏற்றுக் கொள்ள முடியும்" என்றது எலி.

"எனக்கொரு யோசனை தோன்றுகிறது! நமக்குள்ளே ஓர் அழகிப் போட்டி நடத்தினால் என்ன?" கேட்டது வெட்டுக்கிளி.

"போட்டி நடத்தலாம். ஆனால் நடுவர் யார்?" சந்தேகம் எழுப்பியது எலி.

"நடுவராக நானிருக்கிறேன்!" திடீரென்று ஒரு சப்தம் கேட்டது. அனைத்தும் மேலே பார்க்க, மரத்தின் மீது ஒரு காகம் இருந்தது.

"நீங்கள் எப்படி?" ஆச்சரியப் பட்டது குரங்கு.

"நீங்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்ததை நான் கேட்டேன். முயலையும் அழைத்துக் கொண்டு நாளை என் இருப்பிடம் தேடி வாருங்கள். ஆனால் நான் தேர்ந்தெடுப்பவரை அழகு ராணியாக அனைவரும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ள வேண்டும்!" என்று காகம் தன் முகவரி கூறியது.

"அப்படியே செய்கிறோம்" அனைத்தும் சேர்ந்து குரல் கொடுத்தன.

மறுநாள் அனைத்தும் அழகிய அழகுராணி கனவில் மிதந்து காகத்தைத் தேடி போய்க் கொண்டு இருந்தன.

அப்பொழுது குருவி ஒன்று வலியால் துடித்துக் கொண்டிருந்தது. அதன் கால்களில் காயம் தெரிந்தது.

"எனக்கு யாராவது ஒருவர் உதவி செய்யுங்களேன். ஒரு சிறுவன் கல்லெடுத்து எறிந்து காலில் காயப்படுத்தி விட்டான்!" குருவி பல கீனமாக உதவி கேட்டது.

"நாங்கள் அழகிப் போட்டிக்குப் போய்க் கொண்டு இருக்கிறோம். அபசகுனமாக பேசாதே!" கடுமையாக கூறியது குரங்கு.

குருவியைப் பார்த்த எலியும், வெட்டுக்கிளியும் முகம் திருப்பி சென்று விட்டன. முயல் குருவி அருகே தயங்கி நின்றது. பின்னர் அவசர அவசரமாக மருந்து தேடிக் காலில் வைத்து விட்டு அழகிப்போட்டிக்கு சென்றது.

அழகிப் போட்டி தொடங்கியது. குறித்த நேரத்திற்கு முயல் மட்டும் செல்லவில்லை. மீதி மூன்றும் மனசுக்குள் மகிழத் தொடங்கின.

"அழகுக்கும் அறிவுக்கும் மதிப்பெண் போட்டு விட்டேன். இனி உங்கள் நல்ல குணம் பார்த்து மதிப்பெண்கள் கொடுப்பேன்! இதற்குத்தான் அதிக மதிப்பெண்கள் ஒதுக்கி இருக்கிறேன்!" காகம் கூறியதும் குருவிக்கு உதவாத மூன்றும் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன. அப்பொழுது அரக்கப் பரக்க முயல் ஓடி வந்தது.

"முயல்தான் அழகு ராணி! இதை அழகுராணியாகத் தேர்வு செய்வதற்காக நான் பெருமைப் படுகிறேன்! குருவி என் நண்பன் தான்! ஒரு ஆபத்திலிருந்து முயல் காப்பாற்றியதாக சற்று முன்பு தான் குருவி கூறியது. அப்பொழுது மூவரும் உதவாமல் சென்றது பற்றியும் சொல்லி வருத்தப்பட்டது! உதவும் நல்ல மனசு உள்ளவர்கள்தான் உண்மையில் அழகானவர்கள்!" காகம் கூறியதும் எலி, வெட்டுக்கிளி, குரங்கு ஆகியவற்றின் முகங்கள் அஷ்டகோணலாகின.




- 1690 - ஆங்கிலேயர் கியூபெக் நகரைத் தாக்கினர்.
- 1737 - இந்தியா, வங்காளத்தில் கிளம்பிய 40 அடி உயர அலை சுமார் 300,000 பேரைக் கொன்றது.
- 1769 - ஆங்கிலேய நாடுகாண் பயணி கப்டன் ஜேம்ஸ் குக் நியூசிலாந்தைக் கண்டுபிடித்தான்.
- 1806 - ஆங்கிலேயர் ரால்ஃப் வெட்ஜ்வூட் என்பவரால் கார்பன் தாள் காப்புரிமம் பெறப்பட்டது.
- 1840 - இரண்டாம் வில்லியம் நெதர்லாந்தின் மன்னனாக முடிசூடினான்.
- 1874 - யாழ்ப்பாணத்துக்கான தந்தி இணைப்பு அநுராதபுரம் வரையில் நீடிக்கப்பட்டது.
- 1919 - நெதர்லாந்தின் கே.எல்.எம் விமான சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி ருமேனியாவைத் தாக்கியது.
- 1942 - அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஐக்கிய நாடுகள் அவையை ஆரம்பிக்கப்போவதாக அறிவித்தன.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: வேக் தீவில் கைப்பற்றப்பட்ட அமெரிக்கக் கைதிகள் 100 பேரை ஜப்பான் கொன்றது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: அவுஷ்விட்ஸ் வதை முகாமில் யூதக் கைதிகளின் கிளர்ச்சி இடம்பெற்றது.
- 1949 - ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு உருவாக்கப்பட்டது.
- 1950 - சீனா திபெத்து மீதான தாக்குதலை ஆரம்பித்தது.
- 1951 - மலேயத் தீவிரவாதிகள் பிரித்தானிய தூதுவர் சேர் ஹென்றி கேர்னி என்பவரைக் கொன்றனர்.
- 1951 - இஸ்ரேலிய அரசு டேவிட் பென்-கூரியன் என்பவரால் அமைக்கப்பட்டது.
- 1958 - பாகிஸ்தான் அதிபர் இஸ்காண்டர் மிர்சா ஜெனரல் அயூப் கான் ஆதரவுடன் 1956 அரசமைப்பை நிராகரித்து இராணுவ ஆட்சியைக் கொண்டுவந்தார்.
- 1959 - சோவியத் விண்கலம் லூனா 3 சந்திரனின் அதி தூரத்திய் புகைப்படங்களை பூமிக்கு அனுப்பியது.
- 1962 - சோவியத் ஒன்றியம் நோவயா சிம்லியா என்ற இடத்தில் அணுக்கரு சோதனையை நிகழ்த்தியது.
- 1963 - எயிட்டி மற்றும் டொமினிக்கன் குடியரசு ஆகியவற்றை சூறாவளி ஃபுளோரா தாக்கியதில் 7,190 பேர் கொல்லப்பட்டனர்.
- 2001 - ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா மூன்று முறை விமானத்தாக்குதல் நடத்தியது. பயங்கரவாதத்திற்கு எதிரான போர் அமெரிக்கா மற்றும் அதன் நேசநாடுகளின் உதவியுடன் ஆரம்பமாகியது.
- 2004 - கம்போடியாவின் நொரொடொம் சிஹானூக் மன்னர் பதவியில் இருந்து விலகினார்.

பிறப்புக்கள்

- 1931 - டெஸ்மண்ட் டூட்டு, தென்னாபிரிக்க ஆயர், நோபல் பரிசு பெற்றவர்.
- 1935 - தாமஸ் கெநீலி, ஆத்திரேலிய எழுத்தாளர்.
- 1952 - விளாடிமிர் பூட்டின், ரஷ்ய முன்னாள் அதிபர்.
- 1978 - சகீர் கான் , இந்திய வேகபந்து வீச்சாளர்.
- 1979 - நரேன், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்.

இறப்புகள்

- 1708 - குரு கோவிந்த் சிங், சீக்கிய குரு. (பி. 1666)
- 1967 - நோர்மன் ஏஞ்செல், நோபல் பரிசு பெற்றவர். (பி. 1872)
- 1974 - சி. மு. இராசமாணிக்கம், முன்னாள் இலங்கைத் தமிழரசுக் கட்சி பட்டிருப்பு பாராளுமன்ற உறுப்பினர்.
- 1984 - அப்துல் காதர் லெப்பை, ஈழத்துக் கவிஞர். (பி. 1913)
- 1994 - நீல்ஸ் காஜ் ஜேர்ன், நோபல் பரிசு பெற்றவர் . (பி. 1911)

சிறப்பு நாள்

- கிழக்கு ஜேர்மனி - குடியரசு நாள்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 50 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 55 | 100 | 60 |
| தக்காளி | 100 | 100 | 70 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 60 | 70 |
| கோவா | 80 | 80 | 45 | 80 | 80 |
| கரட் | 80 | 80 | 60 | 120 | 80 |
| பூசணி | 25 | 30 | 20 | 50 | 30 |
| புடோல் | 40 | 40 | 35 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 120 | 90 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 65 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 160 | 100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 70 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 160 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 160 | 160 | 100 | 120 | 120 |
| லீக்ஸ் | 120 | 100 | 95 | 120 | 100 |
| பீற்றூட் | 40 | 100 | 40 | 80 | 50 |
| கறிமிளகாய் | 100 | 100 | 80 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 60 | 100 | 120 |
| போஞ்சி | 200 | 200 | 140 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 20 | 30 | 60 | 50 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 25 | 20 | 15 |
| தேசிக்காய் | 400 | 500 | 250 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-35 | 25-35 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | 170 |
| வெங்காயப்பூ | 80 | — | — | 160 | 180 |
| முள்ளங்கி | 60 | 60 | 30 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | — | 40 | — | — | — |

# திருமலையை பிராந்திய எரிபொருள் கேந்திரமாக மாற்ற இந்தியா விருப்பம்

(டில்லி)

**திருகோணமலையை பிராந்திய எரிபொருள் கேந்திரமாக மாற்றுவதற்கும் இலங்கையில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை நிறுவுவதற்கும் இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது.**

இந்தியாவுக்குச் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை டில்லியில் நேற்று முன்தினம் இந்தியாவின் பெற்றோலிய மற்றும் இயற்கை எரிவாயுத்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இதன்போது, இலங்கையில் பெற்றோலிய மற்றும் எரிவாயுத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு, இந்தியாவின் சார்பில் பல்வேறு திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

திருகோணமலையில் உள்ள உயர்நிலை எண்ணெய்க் குதங்களை இந்திய எண்ணெய் நிறுவனத்தினால் பயன்படுத்துதல், கரவெலப்பிட்டியவில் இயற்கை எரிவாயு முனையம் ஒன்றை உருவாக்குதல், நகர எரிவாயு வலையமைப்பை உருவாக்குதல், மோட்டார் வாகனங்களுக்கு அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு பயன்பாட்டை அறிமுகப்படுத்தல் உள்ளிட்ட திட்டங்களை இலங்கையின் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து மேற்கொள்ளும் திட்ட முன்மொழிவுகளை இந்தியா சமர்ப்பித்துள்ளது.

இலங்கையில் லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவனத்தின் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடிய இந்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான், இலங்கையில் சில்லறை எரிபொருள் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், களஞ்சியப்படுத்தல் வசதிகளை அதிகரித்தல் குறித்தும் ஆராய்ந்துள்ளார்.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை புனரமைப்பது மற்றும் புதியதொரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை அமைப்பது குறித்தும், இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.



திருகோணமலையை பிராந்திய எண்ணெய் கேந்திரமாக அபிவிருத்தி செய்வதில் இலங்கையுடன் இணைந்து பணியாற்றுவதற்கு இந்தியா உறுதியுடன் இருப்பதாகவும் இந்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார். (இ-7-10)




## கொழும்பு துறைமுகத்திற்கு வந்த பிரின்சஸ்

இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்திற்காக புதிதாகக் கட்டப்பட்ட எம்.வீ சிலோன் பிரின்சஸ் (Mv. Ceylon Princess) கப்பல் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்துள்ளது.இந்தக் கப்பலானது சீனாவின் AVIC சர்வதேச நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.குறித்த கப்பலை துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க வரவேற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.அத்துடன் இந்தக் கப்பலின், சகோதர கப்பலான எம்.வீ சிலோன் பிரிஸ் (Mv. Ceylon Breeze) ஆனது இந்த வருடத்தின் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

மகிந்த ஆட்சிக்காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இந்த இரண்டு கப்பல்களுக்கும் 70 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்தக் கப்பலின் நீளம் 199.813 மீற்றர் என்றும், அகலம் 32.251 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.எம்.வீ சிலோன் பிரின்சஸ் கப்பலின் கொள்ளளவு திறன் 63.212 மெற்றிக் தொன்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 863

Search for people, places and things   Nagendram Home

### வக்ஷலா





### மொனா




### பத்மராஜி




### பரிமளா




### அனித்தா




### கிரேபினா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கை வரலாற்றில் மோசடி அரசியல்வாதிகள் மீதான முதல் புலன் விசாரணை



இலங்கை சுதந்திரமடைந்து 68 வருடங்கள் கடந்து விட்ட நிலையில் இதுவரை எந்த வொரு அரசியல்வாதியும் எமது நாட்டு நீதிமன்றங்களில் ஊழல் சம்பந்தமான எவ்வித வழக்கிற்கும் முகங்கொடுத்த வரலாறே கிடையாதென்பது அபூர்வமான ஒன்றாகவே இருப்பினும் அதுவே தான் உண்மையும் கூட.

எமது நாட்டின் 4-5 தலை முறைகளைச் சேர்ந்த அரசில் வாதிகளிடையே விசேடமாக பதவி வகித்தோர், பதவிவகிப்போர் மத்தியில் அப்பளுக்கற்றோர் எவருமே கிடையாதென்பதை நம்புவதே கடினமென்ற போதிலும் தூய வெண்ணிற தேசிய ஆடையணியும் அவர்களுக்கும் அவர்களது நற்பெயர்களுக்கும் களங்கம் ஏற்படுத்தும் அரசாங்க நடவடிக்கை எதுவுமே அவர்களுக் கெதிராக இதுவரை மேற்கொள்ளப்பட்டதில்லை என்பதுதான் வரலாறு!

அவுஸ்திரேலியாவில் அப்பிள் மரத்தோட்டங்கள் வாங்குவதற்கான அரச கொள்வனவுகளில் தரகுப் பணமாக பாரிய தொகைகள் பெற்றுக் கொள்ளப்படுவது, கப்பல்கள் ஆயுத தளபாடங்களுடன் பயன்பாட்டிற்குலாயக்கில்லாதவற்றையும் சேர்த்தே கொள்வனவு செய்வது மற்றும் செயற்றிறனற்ற காலாவதியான ஜெட் போர் விமானங்கள் மற்றும் பெரும் செலவில் பெற்றுக் கொள்ளப்பட்ட கடற்படைப் பீரங்கிப் படகுகளின் தேவைகளுக்கென அளவுப் பொருத்தமற்ற பீரங்கிக் குண்டுகள் போன்றவற்றை வாங்கிக் குவிப்பதில் பல்வேறு தரகுப் பேர பேச்சுக்களும் பணப்பரிமாற்றங்களும் இடம் பெறுவது போன்ற விவகாரங்களில் சம்பந்தப்பட்ட அமைச்சரவை அமைச்சர்களது புகைப்படங்கள் சுவிஸ் ஹோட்டல் வரவேற்பறைகளிலும் பேச்சு வார்த்தை மண்டபங்களிலும் பெருமளவில் தொங்கவிடப்படுவது பற்றிய வதந்திகளும் தகவல்களும் பலப்பல.

> எமது நாட்டு அரசியல்வாதிகள்... எனும் தலைப்பில் சண்டே லீடர் ஆசிரியர் தலையங்கத்தில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

இந்த நிலையில் அரசாங்கங்கள் மாறி மாறி அதன் அதிகாரங்களும் கைமாறிக் கொண்டிருக்கையிலேயே அரசியல் வாதிகளும் பொறுப்புக்களைத் தட்டிக்கழிக்கும் மற்றும் அவர்களுக்கு உதவும் இராணுவ பரிவாரங்களும் முறையற்ற பணப்பரிமாற்ற ஒட்டுண்ணிகளும் தமது வழமையான மோசடிகளிலிருந்து சற்றே ஓய்வெடுத்து தமது வீட்டு உப்பரிகைகளில் உல்லாசமாக பொழுதினைப்போக்கிகளித்திருக்கையில் அவர்களும் அவர்களது முன்னோரும் இழைத்திருக்கும் பாவக்கனிகளின் பலன்களை மாத்திரம் அனுபவிக்கும் தற்போதைய நிலைக்கு எமது சமுதாயத்தின் தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததி உள்ளாகியிருக்கும்



பரிதாபம்...!

இந்த விடயங்களெல்லாம் கொழும்பு நகர பேச்சுப் பிரியர்களுக்கான தினசரி கிசுகிசுக்காகவும் ஆ....ஹா பேச்சுக்களாகவும் இடம் பிடித்து வருவது பெரிதும் தெரிந்த விடயமேயாகும்.

இப்படியான சந்தர்ப்ப சூழ்நிலைகளிலும் எமது தாய்நாட்டின் குறிப்பிடத்தக்க பிரபல்யம் வாய்ந்த புத்திரசிகா மணிகள் சிலர் போற்றுதலுக்குரிய எடுத்துக்காட்டான தமது முன்னோருக்கு நினைவுத்தூபிகள் அமைப்பதன் மூலமும் நினைவு தினக் கொண்டாட்டங்கள் நடத்துவதன் மூலமும் தமது எதிர்கால அரசியல் அதிகாரத்திற்கு வலுச்சேர்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

முன்னைய நாட்களில் இந்த விதமான தரகுப்பேர மோசடி வேலைகள் பகிரங்கப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட ஒன்றோ இரண்டோ பத்திரிகையாளர்களுங் கூட குற்றவியல் அவதூறு (Criminal Detenation) என்ற குற்றச்சாட்டின் கீழ் நீதிமன்ற வழக்குகளுக்கு முகங்கொடுக்க வேண்டியதாயிருந்த சம்பவங்களும் முன்னர் நிகழ்ந்துள்ளன. அப்போது அந்நியச் செலாவணிக் குற்றங்களை (Foreign Exchange Offences) விசாரிப்பதற்கான குற்றவியல் ஆணைக்குழு ஒன்றும் நடைமுறையிலிருந்தது. அன்று நீதியமைச்சராக இருந்த பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக் கவினது பொருத்தமில்லாததும் வலுவற்றதுமான ஒரு சட்ட உருவாக்கமாகவே அது இருந்ததுடன் ஆட்சி அதிகாரமட்ட செயற்பாடுகளை உள்ளடக்காத தனிப்பட்ட மற்றும் நிதி மூலவளகையாளுகை சம்பந்தமான விடயங்களை மட்டுமே உள்ளடக்குவதாயிருந்தது. அதாவது அரச மட்ட ஊழல் மோசடிகளுக்கு அப்பாற்பட்டதாகவே அது இருந்தது. ஆனாலும் உயர்மட்ட மோசடிகள் சம்பந்தமான மைத்திரி- ரணில் அரசினது பங்கானது முன்னைய விடயங்களிலும் வேறுபாடானதாக மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் தீர்மானத்துடன் கூடிய நடவடிக்கைகளாகவே இருக்கிறது. அதாவது இதற்கு முந்திய ஆட்சிக்காலத்தில் பாரிய அளவிலான ஊழல் மோசடி வேலைகளை பெருந்தொகையில் திட்டமிட்டு நிறை வேற்றியதாக மக்களால் குற்றச்சாட்டப்படும் அரச அதிகார மட்ட பெருச்சாளிகளை சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வருவதன் மூலம் நாட்டில் நிலவி வருகின்ற கையூட்டல்- ஊழல் போன்ற மோசடிகளை இல்லாதொழிக்கும் முயற்சிக்கான நடவடிக்கையே இதுவாகும்.

இதற்கென கைக்கொள்ளப்படும் நடைமுறைகள் அலுத்துப் போகும் விதத்தில் மிகவும் மெதுவாகவே நகர்த் தப்படுவதுடன் மிகுந்த சிரமத்துடன் கூடிய ஒரு சித்திரவதையாகவே இருப்பினுங் கூட ஜனநாயகமொன்றின் அடிப்படைக் கோட்பாட்டு உண்மைகள் பாதுகாக்கப்படும் பொருட்டு அவை நிறைவேற்றப்படுவது அவசியமேயாகும். குற்றவியல் விசாரணை இலாகா (CID) யின் கீழ் இதற்கென்றே உருவாக்கப்பட்ட விசேட கிளைப் பிரிவான (FCID) நிதி மோசடி விசாரணைப் பிரிவானது முன்னாள் அரச நிர்வாகத்தைச் சேர்ந்த பொறுப்பான உயர் அதிகாரிகளது செயற்பாடுகளையிட்டு இப்போது விசாரணை மேற்கொண்டு வருகிறது. விசாரணைகள் சுதந்திரமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற அதன் இலக்குப்படி வெளியார் தலையீடோ தனது சொந்தத் தலையீடோதானும் இல்லாத அல்லது ஏற்படாத நிலையை அரசு உறுதி செய்து கொண்டுள்ளது.



விசாரணைகளில் சம்பந்தப்படும் விதத்தில் குறுக்கீடுகளோ தலையீடோ இல்லாதிருக்கும் நிலையை உறுதி செய்யும் பொருட்டு ஜனாதிபதியும் பிரதமரும் மிகுந்த அவதானத்துடன் கூடிய உசார் நிலையில் இல்லாவிடின் தமது செந்த அரசியல் இலாபத்தின் பொருட்டு இல்லாததை இருட்டில் தேடும் குற்றச்சாட்டிற்கே இலக்காக நேரிடும்.

முன்னாள் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களான அதிகார பலம் வாய்ந்த உயர் அதிகாரிகள் பலரும் FCID அலுவலகங்கள், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அல்லது நீதிமன்றங்களுக்குள் ஏதும் அறியாத அப்பளுக்கற்ற அப்பாவிகள் போன்ற முகபாவனையுடன் படிகளேறிப் போய் வந்த காட்சிகளை அண்மைக் காலங்களில் தொலைக்காட்சிகளில் நாம் பார்த்துள்ளோம். தமது போலியான முகபாவனைகளுக்குப் பின்னால் அவர்கள் கொண்டிருந்த வெறுப்புணர்வு, கசப்பு, குற்றத்தை மறுக்கும் இயல்பு போன்றவை வெளிப்படையான உண்மைகளேயாகும். எப்படியும் இந்த நடைமுறைகளனைத்தும் பொது மக்களுக்கான தமது உண்மைச் சேவைகளுக்குரிய பிரதிபலன்களின் ஒரு பகுதியே என்பதை அவர்கள் கருத்திற் கொள்ள வேண்டும் என்பதும் அறியப்படவேண்டிய ஒரு உண்மையேயாகும்.

தமது அரசியல் எதிராளிகளின் செயற்பாடுகளில் வெளிப்படைத் தன்மையுடன் பொறுப்புக்கூறலுக்கான கடப்பாடுகளின் தேவை பற்றியும் வலியுறுத்தி இடி இடிப்பது போல் முழக்கமிடும் அரசியல் வாதிகள் தமது சொந்தச் செயற்பாடுகளுக்கான அதே நடைமுறைப் பிரயோசனங்களையிட்டு வெறுப்படைவதற்கு பெறுமதியான காரணங்கள் எதுவுமில்லை என்பதை நிச்சயம் தெரிந்து கொண்டவர்களாகவே இருப்பர்.

(19ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை வரலாற்றில் மோசடி...

அதாவது கைவிலங்கிடப்பட்ட நிலையில் நிமாண்ட் தடுப்புக்காவலுக்கு கொண்டு செல்லப் படும் அரசியல்வாதிகள் சிலர் தம்மைத் தியாகிகளாகக் காட்டும் விதத்தில் விலங்கு டன்கூடிய தமது இரு கைகளையும் உயர்த்திக்காட்டி மலர்ந்த முகத்துடன் வெளிப் படையாகப் பாவனை செய் வது அவர்களது அனுபவத் தின் வெளிப்பாடேதான் என்பது பலரும் அறிந்ததே.

அரசாங்கமும் இந்த நிலை மையைப் பயன்படுத்தி நீதி வழங்குவதற்கான நடைமுறை களைச் செயற்படுத்துவதற் கான உதவிகளைச் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வழங்குவது போலவே பொலிஸ் நடைமுறைகளைச் சுருக்கியும் துரிதமான நீதி வழங்குவதன் மூலம் ஜனநாயகம் மட்டிலான தமது மனப்போக்குகளை நிரூபிக்கும் விதத்தில் செயற் படவேண்டும். அரசாங்க மொன்றினை கவிழ்ப்பதற் கான முயற்சிகளுக்கே அர்ப் பணித்தவிதமாக தமது செயற் பாடுகளை மேற்கொள்ளும் அரசியல்வாதிகள் கொண்ட தனித்துவ நோக்குடன்கூடிய குழுவொன்றுக்கெதிரான அரசியல்பழிவாங்கல் போலியான குற்றச் சாட்டுக்கள் மீது விசா ரணை நிர்ப்பந்திப்பது மற்றும் இவைபோன்ற ஏனைய குற்றவியல் விசார ணைகளையும் முன்னெடுப் பது தவிர்க்க முடியாத தாகவே இருக்கும்.



இதில் அரசாங்கத்தின் தர்ம சங்கடமான நிலைமை என்ன வென்றால் FCID விசாரணை களுக்குள் வருவோர் ஊழல் புரிந்தவர்களாக சந்தேகிக் கப்படும் முன்னாள் அரசாங்க த்தின் உயர்மட்ட அதிகாரிக ளாகவே இருந்தனர். அத்து டன் தற்போதைய அரசாங்கத் திற்கெதிராக படுமோசமான எதிர்ப்பினை ஆக்ரோஷமான முறையில் வெளிப்படுத்தி வருபவர்களும் இவர்களே தான். கடந்த அரச நிர்வாக த்தின் போது நிகழ்த்தப்பட்ட தாக மக்களால் முன்வைக் கப்படும் இந்த ஊழல் பற்றிய குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணைகள் நிறுத்தப்ப டுமானால் மக்களுக்கு இதும ட்டில் அளித்த வாக்குறு திகளை அரசு மதிக்கவில்லை என்ற குற்றச்சாட் டிற்குள்ளாக வேண்டி வரும். அரசாங்க த்தை ஆக்ரோஷமாக எதிர்த்து வரும் அதே அரசியல் வாதிகள்மீது ஊழல் நடவடிக்கை களுக்கான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமானால் இல்லாத ஒன்றினை இருளில் தேடுவது என்றவிதமான குற்றச்சாட்டுகளும் அரசுக் கெதிராக எழலாம். மகிந்த ராஜபக்ஷ சார்பான அவர்க ளது தயார் நிலை ஊடகவிய லாளர்களும் ஒரு தசாப்த காலத்திற்கும் கூடுதலாக அனுபவித்திருந்த அலரி மாளிகை (Temple Trees) விருந்துகளை இழந்து எரிச்சலடைந்திருப் பவர்களுமான அனைவரும் இதுபோன்ற சந்தர்ப்பங்களையே எதிர் பார்த்துக் காத்திருக்கின்றனர். இணைந்த எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் மீது மட்டும் தானா விசாரணை நடவடி க்கை என்ற இந்த நிலை மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் அமைச்சர்களாயிருந்து இப் போது நல்லாட்சியில் இருப்ப வர்கள் மீது இல்லையா?

உண்மைதான்! விடைதேட வேண்டிய அர்த்தபுஷ்டியான கேள்வியொன்றே இது.

இப்போது நல்லாட்சி அர சிலிருக்கும் முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சி யின் அமைச்சர்கள் மீது விசாரணை மேற்கொள்ளா திருப்பதற்கான காரணங்கள் எதுவாக இருந்தாலுங்கூட மகிந்த ராஜபக்ஷ சார்பான தயார்நிலை ஊடக ஆதரவுப் படையினர் தற்போது தவறி ழைப்பவர்களை பொதுமக் களுக்கு வெளிப்படுத்திக் காட்டுவதா? அல்லது ஒன்றி ணைந்த எதிர்க்கட்சி கோமா ளிகள் மத்தியிலிருப்போர் FCID விசாரணையில் கடந்த ஆட்சியில் தவறிழைத் தோர் களையும் அவர்களது தவறு களையும் வெளிப்படுத்திக் காட்டுவதா? சிறப்பானதா யிருக்கும் என்ற இருதலைக் கொள்ளி எறும்பின் நிலை தான் இப்போது!

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியிற் போலவே நல்லாட்சியிலும் அமைச்சர்களாகவும் உயர் பதவிகளிலும் இடம் பிடித்தி ருக்கும் முன்னைய ஆட்சிக் கால உறுப்பினர்கள் மீது விசாரணை- நடவடிக்கை எடுக்கப்படாத காரணம் எதுவாகயிருந்தாலும் இவர் களைப் போலவே ஏனைய கோமாளிகளும் விசாரணை யின்றி விடுவிக்கப்பட வேண்டும் என்ற ஓர் விவாதத்தை மகிந்த ராஜபக்ஷவுடைய உரோமைக் காவலர்களுமே ஒழுக்கசீலர்களுமான அந்த தயார்நிலை ஊடகப் பாதுகா வலர்கள் முன்வைக்கிறார்கள் என்றால் அவர்கள் விடுவிக்கப்படவேண்டுமா? முடியாது... அப்படி விட்டு விடமுடியாது!

நல்லாட்சி அரசில் தவறி ழைப்போர் மீதும் அதே மாதிரியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டேயாக வேண்டும்.

தமிழில்: யோகர்

# தமிழ் சினிமா வரலாறு

## மகாலிங்கம் மரணம் அடைந்தார் 269

அதன் பின் திருவிளையா டல், அகத்தியர், ராஜராஜ சோழன் ஆகிய படங்களில் நடித்தார்

**நாடகம்**

சில ஆண்டுகளாக ஸ்பெஷல் நாடகங்கள் நடத்தி வந்தார். கே.பி.சுந்தராம்பாள், எஸ்.டி. சுப்புலட்சுமி ஆகியோருடன் நடித்தார்.

**உடல்நலக்குறைவு**

1978ஆம் ஆண்டில் தன் நாடகக்குழுவுடன் மலேசி யாவுக்குச் சென்றார் மகாலி ங்கம். ஒரு மாதம் தங்கியி ருந்து வள்ளி திருமணம் உட்பட பல நாடகங்களை நடத்திவிட்டு திரும்பினார். அது முதலே அவருக்கு சிறிது உடல்நலக்குறைவு ஏற்பட்டது.

மதுரையில் தனியார் வைத் தியசாலை ஒன்றில் தங்கி சிகிச்சை பெற்று குணம் அடைந்தார். எந்த நிகழ்ச்சி யிலும் கலந்து கொள்ளாமல் மதுரையை அடுத்த சோழ வந்தான் தென்கரையில் உள்ள வீட்டிலேயே தங்கி ஓய்வு எடுத்து வந்தார்.

**மரணம்**

தினமும் பிற்பகலில் அவர் தூங்குவது வழக்கம். 5 மணிக்கு முன் எழுந்து விடு வார். 21.04.1978 அன்று தூங்குவதற்குச் சென்ற அவர் மாலை 6 மணி வரையில் எழுந்திருக்கவில்லை. இதனால் வீட்டில் இருந்தவர்கள் சந்தே கப்பட்டு படுக்கை அறைக்கு சென்று பார்த்தார்கள்.

அங்கே 2 கட்டில்களுக்கு இடையே தரையில் மகாலிங் கம் விழுந்து கிடந்தார். தட்டி எழுப்பி பார்த்தார்கள். உட லில் அசைவு இல்லை. பேச்சு மூச்சு இன்றிக் கிடந்தார்.

உடனே வைத்தியர் வர வழைக்கப்பட்டார். வைத்தியர் விரைந்து வந்து மகாலிங் கத்தை பரிசோதித்து விட்டு உயிர் பிரிந்து வெகு நேரம் ஆகிவிட்டது என்று அறிவித் தார். மறு நாள் உடல் தகனம் நடந்தது.

**குடும்பம்**

மகாலிங்கத்தின் மனைவி பெயர் கோமதி.

இந்த தம்பதிகளுக்கு சுகு மார் என்ற ஒரே மகன். விஜ யலட்சுமி, சாவித்திரி, மீனா ட்சி என்ற 3 மகள்கள்.

தமிழ்த்திரை உலகில் ஒரு கால கட்டத்தில் நகைச்சுவை மன்னனாக கொடிகட்டிப் பறந்த நடிகர் சந்திரபாபு. மேல் நாட்டு பாணியில் ஆடுவார், பாடுவார். குறுகிய காலத்தில் புகழின் சிகரத்தை அடைந்தார். ஆனால் நீண்டகாலம் அந்த இடத்தில் நீடிக்க முடிய வில்லை. பல சோதனைகளை அனுபவித்து 42ஆவது வயதி லேயே மரணம் அடைந்தார்.



**பெற்றோர்**

சந்திரபாபுவின் சொந்த ஊர் தூத்துக்குடி.

தந்தை பெயர் ஜே.பி. ரோட்டரிக்ஸ். இவர் சுதந்திர போராட்ட தியாகி. தாமிரப் பட்டய விருது பெற்றவர். தாயார் பெயர் ரோசரின். சந்திரபாபுவுடன் பிறந்தவர் கள் 4 சகோதரர்கள், 5 சகோதரிகள்.

**இலங்கை படிப்பு**

சந்திரபாபுவின் தந்தை சிறிதுகாலம் இலங்கையில் அச்சகம் நடத்தி வந்தார். அதனால் சந்திரபாபு அங்கு வளர்ந்தார். கொழும்பில் உள்ள ஆங்கிலப் பாடசாலை ஒன்றில் படித்தார்.

தமிழ்நாட்டுக்கு திரும்பிய தும் கலை ஆர்வத்தின் காரணமாக சினிமா உலகில் நுழைந்தார்.

**தற்கொலை முயற்சி**

முதலில் ஜெமினி படப்பிடி ப்பு நிலையத்திற்கு சென்று சினிமா சான்ஸ் கேட்டார். கிடை க்கவில்லை. வேலை தேடினார். அதுவும் கிடைக்கவில்லை.

இதனால் மனம் உடைந்து விஷம் குடித்து தற்கொலை செய்து கொள்ள முயன்ற தாக அவரே சில கட்டுரை களில் குறிப்பிட்டார்.


**100 படங்கள்**

சந்திரபாபு நடித்த முதல் படம் "தன அமராவதி". கடைசி ப்படம் பின்னனச் செல்வம். மொத்தம் 100 இற்கும் மேற் பட்ட படங்களில் நடித்து இருக்கிறார். (தொடரும்)

# இலங்கை இரண்டாக பிரிக்கப்பட்டுவிட்டது

## முன்னாள் அமைச்சர் பீரிஸ் குற்றச்சாட்டு

**(கொழும்பு)— இலங்கை இரண்டு நாடாகப் பிரிக்கப்பட்டுவிட்டதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற கூட்டு எதிர்க்கட்சியின் ஊடகச்சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், ‘ நாட்டின் பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படும் வகையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனின கருத்து அமைந்துள்ளது. தெற்கில் உள்ளவர்களுக்கு வடக்கிற்குச் சென்று ஆரப்பாட்டம் செய்வதற்கு உரிமை இல்லை என்று அவர் கூறுகின்ற கருத்தானது நாட்டை இரண்டாகப் பிரித்து இரு நாடுகள் உருவானதற்கு ஒப்பானது.

தெற்கு மக்களுக்கு தெற்கில் ஆர்ப்பாட்டம் செய்ய உரிமையுள்ளது. வடக்கு மக்களுக்கு வடக்கில் ஆர்ப்பாட்டம் செய்ய உரிமையுள்ளது. அதேபோல தெற்கு மக்ளுக்கு வடக்கிற்குச் சென்று ஆர்ப்பாட்டம் செய்ய உரிமையுள்ளது. இந்த நிலையில் இவரது கருத்து பாதகமாக அமைந்துள்ளது. இதன்மூலம நாடு இரண்டாக பிளவு பட்டுள்ளமை புலப்படுகின்றது எனவும் தெரிவித்தார்.(இ-7-10)

# குற்றச்செயல்களைத் தடுக்க மரண தண்டனை அவசியம்

## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் கூறுகிறார்

நாட்டில் அதிகரித்து வரும பாலியல் வன்கொடுமை, சிறுவர் துஷ்பிரயோகம், போதைப்பொருள் கடத்தல் போன்ற மோசமான குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கும் தடுப்பதற்கும் மரண தண்டனைச் சட்டத்தை அமுல்படுத்த நீதி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

நீதிமன்ற குற்றவியல் திருத்தச் சட்டத்தின் மீதான விவாதம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்களும், அதனோடு இணைந்த தண்டனைகளுமே இலங்கை நீதித்துறை சட்டவாக்கத்தில் இன்னும் நடைமுறையில் உள்ளன. நீதித்துறை சட்டத்தில் இருக்கின்ற ஓட்டை உடைசல்களைப் பயன்படுத்தி நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதுடன், சில சந்தர்ப்பங்களில் அதனை எம்மால் கட்டுப்படுத்த முடியாத ஒரு நிலையும் உருவாகியுள்ளது.

நாட்டிலே குற்றச்செயல்களை கட்டுப்படுத்த வேண்டுமாக இருந்தால் நீதித்துறையை நாம் இறுக்கமாக வைத்திருக்க வேண்டும். தண்டனைகளை நாங்கள் அதிகரிக்க வேண்டும்.

மீண்டும் இந்த நாட்டிலே மரண தண்டனையை அமுலபடுத்த வேண்டும். அதை சட்டமாக்க வேண்டும்.

பாலியல் வல்லுறவு, சிறுவர் துஷ்பிரயோகம், போதைப் பொருள் கடத்தல் போன்ற மோசமான குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு இந்தச் சட்டத்தை பிரயோகித்து தண்டனை வழங்க வேண்டும்.

கடந்த கால்ங்களில் பாலியல் துஷ்பிரயோகம் .செய்யப்பட்டு மிகமோசமாக படுகொலை செய்யப்பட்ட பல சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. அச்சந்தர்ப்பங்களில் நாடு முழுவதும் மக்கள் எதிர்ப்பலைகள் கிளம்பியிருந்ததுடன், மீண்டும் மரண தண்டனைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு அந்த சட்டத்தின் ஊடாக இவ்வாறான குற்றச் செயல்களை தடுக்க வேண்டும் என்று கோஷம் முன்வைககப்பட்டிருந்தன. இதனால், மரண தண்டனைச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்ற ஆலோசனைகளும் கோரிக்கைகளும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கிறது.

ஆகவே, நீதி அமைச்சரே! சட்டத்தை அமுல்படுத்துவதற்கான வசதிகள் செய்யப்பட வேண்டும். மக்கள் நீதிமன்றங்கள் மீது வைத்திருந்த நம்பிக்கை படிப்படியாக இழந்து வருகின்றது. 15 - 20 வருடங்களாக சில காணிப் பிரச்சினைகளுக்காக அலைந்து திரிகிறார்கள். இவ்வாறான பிரச்சினைகள் குறிப்பிட்ட காலத்துக்குள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்ற எவ்வித சட்டங்களும் கிடையாது. எனவே, இந்த ஆட்சிக் காலத்தில் நீதித்துறையில் மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். நீதியமைச்சருக்கு சட்டத்திலுள்ள பிரச்சினைகள், குறைபாடுகள் என்ன என்பது நன்றாகத் தெரியும்.

எனவே, மக்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் வகையில் சட்டதிட்டங்கள் அமைக்கப்பட வேணடும் என அவர் மேலும தெரிவித்தார். (இ-7-10)

# சிறுநீரக நோய் ஒழிப்புக்கு உதவும் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்கள் அமைக்க ஜேர்மனி விருப்பம்

(கொழும்பு)

இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் பாதிப்பை ஏற்படுத்தி வரும் சிறுநீரக நோயைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு உதவ ஜேர்மன் அரசாங்கம் முன்வந்துள்ளது. அதேவேளை தெற்கில் தெரிவு செய்யப்படவுள்ள ஒரு இடத்திலும் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தை அமைப்பதற்கும் ஜேர்மன் அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான ஜேர்மனியின் புதிய தூதுவர் ஜோர்ன் ரோட் அவரது நியமனக் கடிதத்தை நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்தார். அவருடன் இணைந்து இலங்கைக்கான பங்களாதேஷின் புதிய உயர்ஸ்தானிகர் ரியாஸ் ஹமீதுல்லாவும் தமது நியமனக் கடிதத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்தார். இந்த நிகழ்வு ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

ஜேர்மன் ஜனாதிபதி அஞ்சலா மோர்க்கலின் வாழ்த்துக்களை ஜேர்மனியின் புதிய தூதுவர் ஜனாதிபதியிடம தெரிவித்தார். தூதுவர் எனற வகையில் தமது முதலாவது பணி கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரியின் அபிவிருத்தியை கண்காணிப்பதாகவும் ஜேர்மனிய அரசாங்கம் தெற்கில் தெரிவுசெய்யப்பட்ட ஒரு பிரதேசத்தில் மற்றுமொரு தொழில்நுட்ப பயிற்சிக் கல்லூரியை நிர்மாணிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் சிறுநீரக நோயை தடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாகக் குறிப்பிட்ட தூதுவர் ரோட், ஜேர்மனிக்கும் இலங்கைக்கும் இடையிலான கூட்டுறவு மிக வேகமாக வளர்ந்து வருவதாகவும் கடந்த வருடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஜேர்மனிக்கான உத்தியோகபூர்வ விஜயத்தைத் தொடர்ந்து பல்வேறு வர்த்தக மற்றும் முதலீட்டு தூதுக்குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதாகவும் தெரிவித்தார். ஜேர்மன் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாவும் அவர் குறிப்பிட்டார்.

தமது நியமனக் கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்த பங்களாதேஷுக்கான புதிய உயர்ஸ்தானிகர் ஹமீதுல்லா பிரதமர் ஷேக் ஹசீனாவின் வாழ்த்துக்களையும் ஜனாதிபதிக்கு தெரிவித்தார். ஜனாதிபதி சிறிசேனவின் பங்களாதேஷுக்கான விஜயம் பிற்போடப்பட்டுள்ளமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிக விரைவில் தமது நாட்டுக்கு விஜயம் செய்வார் என பங்களாதேஷ் அரசாங்கம் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார். தமது விஜயம் பிற்போடப்பட்டமைக்கான காரணத்தை தூதுவரிடம் விளக்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பங்களாதேஷில் அண்மையில் பொதுமக்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்தார்.

ஜேர்மனி மற்றும் பங்களாதேஷுடனான நெருங்கிய இருதரப்பு உறவுகளை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, வர்த்தகம் முதலீடு மற்றும் சுற்றுலாத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்த கூட்டுறவு மேலும் பலம் பெறும் என தாம் நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

சர்வதேச மன்றங்களில் இந்த இரு நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையே இருந்துவரும் மிக நெருங்கிய கூட்டுறவுகளை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, இலங்கைக்கு வழங்கிவரும் உதவிகளுக்காக இவ்விரு நாடுகளுக்கும் நன்றி தெரிவித்தார். இலங்கையும் இவ்விரு நாடுகளுக்கும் முடியுமான அனைத்து உதவிகளையும் செய்யும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7-10)

ஏதாவது ஓர் இலட்சியத்தில் ஆழ்ந்த நம்பிக்கை வையுங்கள். அந்த நம்பிக்கை அறிவுபூர்வமானதாக இருக்கட்டும். ~ ஸ்ரீராமகிருஷ்ணர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அந்த மாணவியின் கனவுக்கு இந்த நாடு இடம் தருமா?

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் வட மாகாணத்தில் 2ஆம் இடத்தையும் ஈட்டிச் சாதனை படைத்த யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை மாணவி செல்வி ஜயனி உமாசங்கர், ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில்,

எனது எதிர்காலக் கனவு ஒரு மருத்துவராக வருவது என்பதுடன் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வரவேண்டும் என்றும் கூறியிருந்தார்.

மாணவர்களே! இளைஞர்களே! கனவு காணுங்கள் என்ற டாக்டர் அப்துல் கலாமின் அறிவியல் அழைப்பின் ஓர் அங்கமாக மாணவி ஜயனி இந்த நாட்டின் ஜனாதிபதியாக வரவேண்டும் எனக் கூறியிருந்தார் எனலாம்.

இந்த நாட்டைச் சேர்ந்த; இந்த நாட்டில் மிகப் பெரும் போட்டியாக இருக்கக்கூடிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்த பத்து வயது மாணவியின் விருப்பத்தில் டாக்டராக வருவது சாத்தியமாகும் ஆனால் ஜனாதிபதியாக வரமுடியுமா? என்ற கேள்வி இங்கு எழுகிறது.

இந்த எழுகையின் அடிப்படை இந்த நாட்டில் அப்படியொரு சந்தர்ப்பம் தமிழ் மக்களுக்கு கிடைக்குமா? என்பதுதான்.

உலகம் முழுவதிலும் பிறந்திருக்கக்கூடிய பிள்ளைகள் தமது விருப்பமாக அந்த நாட்டின் உச்சமான அதிகார பதவிவரை கூறமுடியும்.

ஆனால் இலங்கையில் தமிழ் இனத்தில் பிறந்த ஒரு பிள்ளை இந்த நாட்டின் ஜனாதிபதியாக வரவேண்டும் என்று தனது விருப்பத்தை கூறலாமா? அதற்கு இந்த நாட்டில் சந்தர்ப்பம் உண்டா? என்பதுதான் கேள்வி.

ஆம், இலங்கையில் தமிழினத்தில் பிறந்த ஒரு குற்றத்துக்காக, ஒரு பிள்ளையின் இலட்சியம்; இலக்கு; கனவு; விருப்பம் என்பதுகூட மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதுதான் இங்கு வேதனைக்குரியது.

ஆம், இலங்கைத் தீவின் பேரன்புமிக்க சிங்கள மக்களே! இந்த நாட்டில் தமிழ் இனத்தில் பிறந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட ஒரு பத்து வயதுப் பாலகி இந்த நாட்டின் ஜனாதிபதியாக வருவதே தனது இலட்சியம் என்று கூறியுள்ளார்.

அந்தக் குழந்தையின் இலட்சியம் நிறைவேறுவதற்கு அத்தனை சந்தர்ப்பங்களும் இந்த மண்ணில் உண்டா? என்பதை நீங்கள்தான் சொல்ல வேண்டும்.

அப்படி நீங்கள் சொல்லாமல் மௌனமாக இருந்தால் அதன் பொருள் வரமுடியாது என்பது தான். அப்படியானால் இந்த நாட்டில் தமிழர்களுக்கு என்ன பிரச்சினை உண்டு என்றும் தனித்து அபிவிருத்தியை ஏற்படுத்திவிட்டால் எல்லாம் சரியாகி விடும் என்றும் சொல்பவர்கள் ஒன்றை உணர வேண்டும்.

அதாவது ஈழத் தமிழ்க் குழந்தைகள் தங்கள் இலட்சியம் இந்த நாட்டில் நிறைவேறுமா என்பதை தெரிந்து கொண்டுதான் தமது இலட்சியத்தைத் தீர்மானிக்க முடியும். அந்தளவிலேயே எங்கள் நாட்டின் இனசமத்துவம் உள்ளது.

ஒரு பிள்ளையின் இலட்சியம் இனத்தின் பெயரால் தகர்க்கப்படுகிறது எனில், தமிழ் மக்கள் எப்போதுதான் தங்கள் இலட்சியம் தொடர்பில் ஒரு முடிவுக்கு வரமுடியும் என்பதுதான் இங்கு ஏற்படக்கூடிய எழுவினா.

## பிறந்த நாள் வீட்டில் கைகலப்பு; கத்திக்குத்து

(யாழ்ப்பாணம்)

பிறந்த நாள் வீட்டில் திடீரென ஏற்பட்ட கைகலப்பு கத்திக் குத்தில் முடிவடைந்தது.

இச்சம்பவம் ஏழாலைப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை நள்ளிரவு 11.45 மணியளவில் இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் சிவம் சிவானந்தன் (வயது 22) எனும் இளைஞனே கத்திக் குத்துக்கு இலக்காகியுள்ளார்.

பிறந்த நாள் விழாவில் ஏற்பட்ட கைகலப்பில் சக நண்பனின் கத்திக்குத்துக்கு இலக்கான இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-3-30)

## வளர்ப்பு சரியில்லை; மகிந்தமீது பசில் புகார்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒழுங்காக வளர்த்திருந்தால் இந்த நிலை இன்று ஏற்பட்டிருக்காது. அவரின் வளர்ப்பு சரியில்லையென முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திருடனின் தாயிடம் திருட்டு குறித்து குறி பார்ப்பது போன்றதுதான் நல்லாட்சி அரசாங்கத்தின் மோசடிகள் தொடர்பான விசாரணைகளும். எனவே எமது ஆட்சிக் காலத்தில் இருந்தவர்கள் கூட இதற்கு உடந்தையாக தற்போது செயற்படுகின்றனர்.

மகிந்த ராஜபக்ஷ ஒழுங்.காக வளர்த்திருந்தால் இந்த நிலை இன்று ஏற்பட்டிருக்காது.

ஆனால் மகிந்த ராஜபக்ஷவுக்கு செய்த துரோகத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் செய்ய மாட்டார்கள் எனக் கூற இயலாது.

பத்தரமுல்லை - நெலும் மாவத்தையில் அமைந்துள்ள மகிந்த ராஜபக்ஷ அலுவலகத்தில் சமகால அரசியல் சூழல் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்துகையிலேயே முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7-10)

## சர்வதேச முதியோர் தினவிழா

நுழைவாயில் லயன்ஸ் கழகத்தின் ஆதரவுடன் கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் சர்வதேச முதியோர் தின விழா நாளை 8 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சீனிவாசகம் வீதியிலுள்ள சனசமூக நிலைய முன்றலில் இடம்பெறும்.

லயன் கலாநிதி நா.தனேந்திரன் (ஜே.பி) தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன் கிங்ஸ்ரன் றமேஸ் (306 B1), சிறப்பு விருந்தினர்களாக நுழைவாயில் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் இரா. கிருபாகரன், லயன்பி.தினேஸ் (306 B1), சாவகச்சேரி சிற்றி லயன்ஸ் கழகத் தலைவரும் சர்வோதய யாழ். மாவட்ட அமைப்பாளருமாகிய லயன்சி.யுகேந்திரன் (ஜே.பி), கௌரவ விருந்தினர்களாக ஜே/ 83 அபிவிருத்தி உத்தியோகத்தர் வே.பிரபானந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### விளக்கு ஏற்றுவது நல்லது

காமாட்சி விளக்கு அல்லது மகாலட்சுமி விளக்கு இருப்பது அவசியம். தினமும் காலையிலே மாலையிலே விளக்கு ஏற்றுவது நல்லது. பித்தளை , வெள்ளி , பஞ்ச லோக விளக்குகள் ஏற்றலாம். ஒரு திரி நித்திய பூஜைக்கு ஏற்றலாம். ஆனால் இரண்டு விளக்குகள் ஏற்ற வேண் டும். சகோதர ஒற்றுமைக்கு இரண்டு திரி. ஐந்து திரி செல்வ வளம் தரும். தெற்கு பார்த்து எரிய விடக் கூடாது. நல்லெண்ணெய் விஷ்ணுவிற்கு, தேங்காய் எண்ணெய் விநாயகருக்கு, நெய் மகாலட்சுமிக்கு, இலுப்ப எண்ணெய் குல தெய்வத்திற்கு உகந்தது. விளக்கெண்ணெய் இனிய இல்லறத்திற்கு உகந்தது. கடலெண்ணெய் மற்ற சமையல் எண்ணெய் பயன்படுத்தக் கூடாது. பஞ்சு திரி நல்லது. சிவப்பு நூலில் விளக்கு போடுவது திருமணத்தடை நீக்கும். வாழைத்தண்டு திரி செல்வவளம் பெருகும். மிகச்சிறப்பாக தாமரைத்தண்டு திரியும், வெள்ளெருக்க வேர் திரியும் சொல்லப்படுகின்றன. கடைகளில் விளக்கேற்றும்போது நெய் ஊற்றி தாமரை இதழ் ஒன்றை விளக்கில் வைத்து தீபமிட்டால் செல்வ வளம் கிட்டும்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை யாழ்.பிரதேசத்தில பூதர்மடம், கோப்பாய் சந்தி, இருபாலை, வட்டக்குளம், கட்டைப்பிராய், கல்வியங்காடு, ஆடியபாதம் வீதி, நாயன் மார்கட்டு, இராமலிங்கம் சந்தி, கோப்பாய் பொலிஸ், பாற்பண்ணை, GPS றோட், திருநெல்வேலி சந்தை, கலாசாலை வீதி, இராமலிங்கம் சந்தியிலிருந்து முடமாவடி கிளிகடை வரை, பூங்கனிச்சோலை, தெல்லிப்பழை, மாதனை ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில அறிவியல் நகர், முறிகண்டி, கொக்காவில், சிலாவத்தை, உடுப்புக் குளம், அளம்பில், குமுழமுனை, செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டங்கேணி, கொக்கிளாய், விக்கிரமரட்ண பிறைவேற் லிமிற்ரெட், மத்திய வங்கி, இரணைமடு விசேட அதிரடிப்படை இராணுவ முகாம், MAS Active, யுனிச்செலா, பொறியியல் பீடம், விவசாயபீடம், North Cargill's Agro foods, இராணுவ பாசறை I மற்றும் II, இராணுவ பாசறை, 7வது படையணி இராணுவ முகாம், கடற்தொழில் கூட்டுறவுச் சங்கம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தெற்கிலுப்பைக்குளம், வெளிக்குளம், கொக்கிலியவிலிருந்து புளியங்குளம் வரை, தோணிக்கல் சிவன் கோவில பிரதேசம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில முருங்கனிலிருந்து தலைமனனார் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப் பிட்டி பாம் கவுஸ், மீன்பிடி சமாசம், அந்தோனிப் பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற் சாலை, தலைமன்னார் கடற்படை முகாம், சீனத் துறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### ஆசையும் வழிபாடு நிலையும்

உங்கள் வழிபாடு (பிரார்த்தனை) நிறைவேற வேண்டுமானால் உங்கள் ஆசை தீவிரமானதாக இருக்க வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு உங்கள் ஆசை தீவிரமாக இருந்து பிறகு அது நிறைவேறுகிறதோ, அந்த அளவிற்கு நன்றியுணர்வு உயர்கிறது.

ஆசையின் தீவிரம் உன்னைப் பக்திப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது. ஆசை, ஆழ்ந்து தீவிரமாகக் காலமும் தேவையும் அவசியம்.

ஆசை நிறைவேறியதுடன் நன்றிப் பெருக்குணர்வில் ஆசை தன் கவர்ச்சியையும் முக்கியத்துவத்தையும் இழந்து விடுகிறது.

இந்தியாவில் ஒரு விவசாயி மகன், இங்கிலாந்திற்குப் போன வேண்டுமென வெகு நாட்களாக ஆசைப்பட்டான். அதற்கான மிகவும் பிரார்த்தனை செய்து வந்தான். அது நிறைவேறும் கட்டத்தில் அவன் அளவற்ற நன்றியுணர்வுடையவனாவான். பிறகு அவன் போவது, போகாதது பற்றிக் கவலைப்படவேயில்லை.

மக்கள் தங்கள் ஆசைகள், உடனே நிறைவேறாக போது தாங்கள் அதிர்ஷ்டமில்லாதவர்கள் என்று நினைப்பர். ஆசையின் தீவிரம், ஒன்று, உங்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கக்கூடும் அல்லது வழிபாடு செய்யத் தூண்டும். பக்தியும் நன்றியுணர்வும் நிரம்பியதே வழிபாடு ஆகும். எந்த ஆழ்ந்த அனுபவமும் உன்னை முழுமையாக ஆக்குகிறது.

உன்னுடைய அறிவு கெட்டியான சோளம் போன்றது. வெப்பத்தில் சோளம் பொறிவதைப்போல, ஞானம் என்ற நெருப்பில் தூய்மையாகி, மெய்யறிவு மேலெழுந்து பூரிக்கிறது.

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### விசாரணைக்காலம் வந்தே தீரும்

❖ என்னுடைய மக்களே! நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கையெல்லாம் சொற்ப இன்பம் தான். மறுமை-அது தான் நிலையான (இன்பம் தரும்) வீடு.

❖ விசாரணைக் காலம் நிச்சயமாக வந்தே தீரும். அதில் சந்தேகமே இல்லை, எனினும் மனிதர்களில் பெரும்பாலானோர் (இதனை) நம்புவதில்லை. அவர்களில் நம்பிக்கை கொண்டு (பாவத்திலிருந்து) விலகிக் கொண்டவர்களை நாம் பாதுகாத்துக் கொண்டோம்.

❖ நன்மையும் தீமையும் சமமாகிவிடாது. (ஆதலால், நபியே! தீமையை) நீங்கள் நன்மையைத் கொண்டே தடுத்துக் கொள்ளுங்கள், அவ்வாறாயின், உங்களுடைய கொடிய எதிரியை அதே சமயத்தில் உங்களுடைய உண்மையான, நண்பனைப் போல் காண்பீர்கள்.

❖ எவன் மறுமைக்காகப் பயிரிட விரும்புகின்றானோ, அவனுடைய பயிரின் விளைச்சலை நாம் அதிகப்படுத்துகிறோம். எவன் இம்மைக்காக (மட்டும்) பயிரிட விரும்புகின்றானோ, நாம் அவனுக்கும் அதிலிருந்து ஓரளவு கொடுக்கின்றோம்.

## ராகுலன்,உத்தமன் சிறப்பாட்டம்

# முக்கோண வெற்றிக்கிண்ணம் கே.சி.சி.சி. அணி வசமானது



முக்கோண வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 2 ஆவது வருடமாக நடத்தும் 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி கடந்த 2 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அன்று யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் கே.சி.சி.சி. அணி யாழ்.பல்கலைக்கழக அணியை 10 ஓட்டங்களால் வெற்றி பெற்று முக்கோண வெற்றிக் கிண்ணத்தை கைப் பற்றியது.

நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற கே.சி.சி.சி அணி முதலில் துடுப்பெடுத்தாடிய போது 45 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 233 ஓட்டங்களை பெற்றது.

ராகுலன் - 72, உத்தமன் - 57 இவ்விருவரின் 5 ஆவது இலக்கு இணைப்பாட்டம் 137 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர். இது இந்தச் சுற்றுப் போட்டியில் ஓர் சாதனையாக அமைந்துள்ளது.

ஆதித்தன் - 14 ஓட்டங்களைப் பெற்றார். ஜனன்தன் -1, வைகுண்டன் -5, சயந்தன் - 2, குருகுலசூரியா -1, கோகதீசன் - 1 இலக்கினைக் கைப் பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி 48.3 ஓவர்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 223 ஓட்டங்களை பெற்றது.

யோகேஸ்வரன் - 49, தரகா -79 இவ்விருவரின் 2 ஆவது விக்கெட் இணைப் பாட்டம் 131 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

இதுவும் இந்த சுற்றுப் போட்டியில் ஓர் சாதனையாக அமைந்துள்ளது. சிறிகுமரன் 43 ஓட்டங்களையும் பெற்றனர்.

ராகுலன் - 3, தனலக்ஷன் -1, சாமீபவன் -2, சிரேலாஜன் -1, உத்தமன் - 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் சிறந்த வீரராக கே.சி.சி.சி. அணியைச் சேர்ந்த ராகுலன் தெரிவு செய்யப்பட்டார். இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற கே.சி.சி.சி. அணிக்கு முக்கோண வெற்றிக்கிண்ணம் வழங்கப்பட்டது.

இப்போட்டிக்கு யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கத் தின் கடந்தகால பொருளாளர் ந.வீர சிங்கம் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்.

இப்போட்டியின் மூலம் 2016 ஆண்டிற்கான தரவரிசை பட்டியலுக்கு கே.சி.சி.சி. அணி 3.34 புள்ளிகளையும் யாழ். பல்கலைக்கழக அணி 3.23 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டது. இப்போட்டிக்கு குமரேசன், குகராஜா ஆகியோர் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர். (க)


ராகுலன்


உத்தமன்

## நாவாந்துறை சென்.மேரிஸை வீழ்த்தியது மன்னார் சென்.ஜோசப் விளையாட்டுக்கழகம்








நெற்கொழு கழுகுகள் வி.க நடத்தும் வடமாகண வல்லவன் உதைபந்தாட்ட சமரில் 05.10.2016 அன்று நடை பெற்ற போட்டியில் நாவாந் துறை சென்.மேரிஸ் வி.கழகத்தை எதிர்த்து மன்னார் சென்.ஜோசப் வி.க. மோதியது.

இரண்டு பலம் பொருந்திய அணிகள் மோதிய போட்டியாக அமைந்ததால் விறுவிறுப்பிற்கு குறைவில்லாது பார்வையாளர்களை பரவசப்படுத்தின.

முதற்பாதி ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் நேற்று பிரதேசத்தில் ஏற்பட்ட கைபந்து காரணமாக சென்.ஜோசப் வி.க கிடைக்கப்பெற்ற தண்ட உதையினை ராஜ்கமல் கோலாக மாற்ற 1:0 என சென்.ஜோசப் முன்னிலை பெற்றது.

மிகுந்த எதிர்பார்ப்புடன் தொடங்கிய இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் மிகுந்த உற்சாக ஆட்டத்தினை வெளிப்படுத்திய போதும் கோல் பெறும் வாய்ப்புக்கள் இலாபமாக தடுக்கப்பட ஆட்ட நேர முடிவில் 1:0 என மன்னார் சென். ஜோசப் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.ஜோசப் கோல் காப்பாளர் அனோஜன் தெரிவு செய்யப்பட்டதுடன் அணிக்கான பரிசினை மாதர் சங்கத் தலைவி பாலமணி வழங்கி கௌரவிக்க பதக்கத்தினை கழக நலன்விரும்பி சீ.சிவநேசன் அணிவித்தார். (க)

## இன்றைய போட்டிகள்

வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள போட்டியில் சென் மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் கரவைச் சுடர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பொற்பதி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் யாழ். சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான B பிரிவினருக்கான கரப்பந்தாட்ட போட்டியில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறும் போட்டியில் கெருடாவில் அண்ணா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும் இரவு 8 மணிக்கு நடைபெறும் போட்டியில் புத்தூர் குருநாதர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கச்சாய் லொலி கிற்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

யாழ். லிக் அனுசரணையுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் சிங் பட்டத்திற்கான உதைபந்தாட்ட போட்டியில் இன்று பிற்பகல் 3.40 மணிக்கு நடைபெறும் போட்டியில் இளவாலை யங் கென்றீஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆனைக் கோட்டை கலைஒளி விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் அரியாலை ஐக்கியம் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து திலகம் ஐயனார் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

## விளையாட்டுப் போட்டிக்கு விண்ணப்பிக்குக

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசம் உள்ளூராட்சி மாதத்தினை (ஐப்பசி) முன்னிட்டு நடத்தப்படும் விளையாட்டு மற்றும் கலை கலாசாரப் போட்டிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

ஆண்களுக்கான மென்பந்து சுற்றுப்போட்டி , இரு பாலாருக்குமான சைக்கிள் , மரதன் ஓட்டப்போட்டி, சுவரொட்டிச் சித்திரப்போட்டி மற்றும் நாடகப் போட்டி நாளை சனிக்கிழமை நடை பெறும் இரு பாலாருக்குமான சைக்கிள் ஓட்டப்போட்டிக்கு 500 ரூபா அறவிடப்படும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இருபாலாருக்குமான மரதனோட்டப் போட்டிக்கு அனுமதிக்கட்டணமாக 100 ரூபா அறவிடப்படும்.

வயது எல்லை இன்றி நடைபெறும் மேற்படி போட்டியில் பங்கு பற்றும் போட்டியாளர்கள் வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை யின் எல்லைக்குள் வசிப்பவராக இருக்க வேண்டும்.

இது தொடர்பில் மேலதிக தகவலை பெறுவதற்கு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் து.கஜேந்திரனுடன் (075 0187850) தொடர்பு கொள்ள முடியும். (க)

## நவாலி Y.M.C.A இன் பரிசளிப்பு விழா

நவாலி வை.எம்.சி.ஏ(YMCA) இன் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட செஸ், கரப்பந்தாட்ட போட்டிகளின் பரிசளிப்பு விழா நாளை 8 ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் நவாலி YMCA மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் ப.கஜதீபனும் சிறப்பு விருந் தினராக மேக்கன் ரைன் தனியார் பாதுகாப்புச் சேவை முகாமைத்துவப் பணிப்பாளர் வி. சுகுமாரனும் கௌரவ விருந்தினர்களாக மருதனார்மடம் இராமநாதன் இசை நடனக் கல்லூரி அதிபர் எம். யூட் சுதர்சன், காரைநகர் யாழ்ரன் கல்லூரி ஆசிரியர் திருமதி .வி. ஐங்கரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## ஜெகநாதனின் உடல்...







திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பூதவுடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக கரைதுறைப்பற்று பிரதேசசபை மைதானத்தில் வைக்கப்பட்டு தொடர்ந்து புனித இராஜப்பர் ஆலயத்தில் விசேட ஆராதனைகள் இடம்பெற்று பினைர உண்ணாப் புலவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. (செ)

## 2 கிலோ கஞ்சா...

காளைப் பகுதியிலிருந்து கஞ்சா பொதியொன்று பஸ்ஸில் கைமாற்றப்படுவதாக கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து குறித்த பஸ்ஸை மறித்துச் சோதனை செய்த பொலிஸார் அச்சந்தேகநபரைக் கைது செய்ததுடன் 2 கிலோ கஞ்சா பொதியினையும் மீட்டுள்ளனர்.

சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணையில் குறித்த கஞ்சா பொதியை கொழும்பிலுள்ள தனது நண்பருக்கு கொடுப்பதற்காக எடுத்துச் சென்றதாகத் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் சந்தேகநபரைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (செ-4)

## இளைஞன் மீது...

தியில் இடம்பெற்றுள்ளது.

இதில்வட்டுக்கோட்டை மாவடியை சேர்ந்த ஞானச்சந்திரன் ரஜிந்தன் (வயது 30) என்ற இளைஞனே வெட்டுக்காயத்துக்கு உள்ளானவராவார்.

இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸில் முறையிட்டதனை தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-30)

## தனியார் பஸ்...

விபத்தில் அதிஸ்டவசமாக உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற லொறியுமே ஏ9 வீதி எழுதுமட்டுவாள் ஆசைப்பிள்ளையேற்றம் பகுதியில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் விபத்துக்குள்ளாகின.

வீதியில் மாடுகள் திடீரென குறுக்கிட்டதால் தனியார் பஸ் திடீரென வேகக்கட்டுப் பாட்டை இழந்து லொறியுடன் மோதியது என கூறப்படுகின்ற நிலையில்,

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## நிதி திரட்டும் நடைபவனி ஆர...

காலி, கராப்பிட்டியவில் சிறுவர்களுக்கான புற்றுநோய் சிகிச்சை பிரிவொன்றை புதிதாக நிர்மாணிப்பதற்கான நிதி திரட்டும் நடைபவனி நேற்று வியாழக்கிழமை பருத்தித்துறையில் இருந்து ஆரம்பமாகியுள்ளது.

Trial as One - ஒரே பாதையில ஒன்றிணைவோம் எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்துள்ள இந்நிகழ்வு, புற்றுநோய் தொடர்பான புதிய சிகிச்சை வசதிக்குத் தேவையான, 5 மில்லியன் அமெரிக்க டொலர்களை சேகரிக்கும் நோக்கில் இலங்கைமுழுவதும்640 கிலோ மீற்றர் தூர நடைபவனியை மேற்கொள்வதே இதன் நோக்கமாகும்.

இந்நிகழ்வின் பிரதிநிதிகளாக இந்நடைபவனியில் கலந்து கொண்டு நிதி திரட்டுவதற்காக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்களான குமார் சங்கக்கார, மஹேல ஜயவர்தன, முத்தையா முரளிதரன், அஞ்சலோ மத்யூஸ் மற்றும் பொலிவூட் நட்சத் திரம் ஜக்குலின் பெர்னாண்டஸ், தொழில் முயற்சியாளர் ஒட்டாரா குணவர்தன, நடிகை யுரேனி நொஷிகா உள்ளிட்ட பல பிரபலங்கள் இணைந்துள்ளனர்.

சுமார் 5 மில்லியன் டொலர் நிதியினை திரட்டும் நோக்கில் வடக்கில் இருந்து தெற்கிற்கு 28 தினங்களாக பயணிக்கவுள்ள இந்த நடைபவனி நேற்று யாழ். பருத்தித்துறையில் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் திகதி நிறைவடையவுள்ளது. ஒரு நாளில் சுமார் 20 தொடக்கம் 30 கிலோமீற்றர் தூரத்தை கடக்கவுள்ள இந்நடைபவனியானது பருத்தித்துறையில் இருந்து வல்லை, யாழ்ப்பாணம், கொடிகாமம், இயக்கச்சி, இரணைமடு, மாங்குளம், புளியங்குளம், வவுனியா, மதவாச்சி, அநுராதபுரம், தம்புத்தேகம, கல்கமுவ, தலைதாகமுவ, பாதெனிய, குருநாகல், தம்பலஸஸ, பன்னல, கொச்சிக்கடை, ஜாஎல, கொழும்பு காலிமுகத்திடல், பாணந்துறை பயாகல, கொஸ் கொட, சீனிகம, உனவட்டுன, வெலிகம ஆகிய நகரங்களை கடந்து மாத்தறைநகரை அடையவுள்ளது.

இந்நடைபவனியில் இணைந்து கொள்வதற்கு 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட நன்கொடையாளர்களும், 800இற்கு மேற்பட்ட நடைபவனியாளர்களும் தங்களை பதிவு செய்துள்ளனர்.

இந்நடைபவனியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள், தமது உடற்தகுதிக்கு ஏற்ப ஒரு நாளோ அல்லது அதற்கு மேற்பட்ட தினங்களோ இணைந்து கொண்டு நடைப்வனிக்கு வலுச் சேர்க்குமாறு ட்ரைல் அமைப்பினரும் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர்களாக குமார் சங்கக்கார, மஹேல ஜயவர்தன ஆகியோர் பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளனர்.

நேற்றைய ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்துகொண்டிருந்தனர். (செ-4)

## போரில் மட்டுமே வெற்றி...

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியத் தலைவர்களில் ஒருவரான தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன, நேற்று அந்தக் கட்சி கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இந்தக் கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், 2009 ஆம் ஆண்டு யுத்தத்தை வெற்றிகொண்டாலும் தேசிய சமாதானத்தை ஏற்படுத்த எங்களால் முடியாமல் போயுள்ளது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தும எங்களால் தேசிய சமாதானத்தை ஏற்படுத்த முடியாமல் போனது.

போரை வெற்றிக்கொண்டதாக பெருமை பாராட்டிவரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு, நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த நிறைய சந்தர்ப்பம் இருந்தது. ஆனால் அதனை அவர் பயன்படுத்தவில்லை.

இதனாலேயே கடந்த ஆட்சியில் தவிர்த்துக்கொள்ளப்பட்ட நல்லிணக்கம் மற்றும் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அதிகாரப் பரவலாக்கலை மேற்கொண்டு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியுடன் நான் இணைந்து தேசிய அரசாங்கத்தை உருவாக்க நேரிட்டது.

ஆட்சியாளர்கள் நினைத்திருந்தால் இனங்களுக்கு இடையில் தேசிய சமாதானத்தை எப்போதோ இலகுவாக ஏற்படுத்தியிருக்க முடியும்.

எனினும் அனைவரும் இணக்கம் தெரிவிக்கக் கூடிய அதிகாரப் பரவலாக்கலை துரதிர்ஷ்டவசமாக எங்களால் ஏற்படுத்த முடியாமல் போனது. ஆகவேதான் நாங்கள் சிந்தித்தோம். எதிர்க்கட்சியாக இருப்பதை விட தேசிய அரசாங்கத்தின் ஊடாக பொருளாதாரத்தை வலுப்படுத்தவும், இனங்களுக்கு இடையில் சமாதானத்தை ஏற்படுத்தவும் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள முடியுமென நாம் கருதினோம்.

அதேபோல் மற்றுமொரு விடயம் இருக்கின்றது. தொடர்ச்சியாக நாம் எதிர்ப்பினை வெளியிட்டு வரும் தேர்தல் முறை. பெரும்பான்மை பலத்தைப் பெற்ற அரசாங்கம் இருந்தும் தேர்தல் முறைமையை மாற்றியமைக்க எங்களால் முடியாமல் போனது. ஆகவே இவ்வாறான விடயங்கள் தொடர்பில் கருத்திற் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன இணைந்து தேசிய அரசாங்கத்தை ஏற்படுத்தினோம் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## அன்ரனி - ஜெகநாதனுக்கு...

வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதனுக்கு வடக்கு மாகாண சபையின் 63 ஆவது அமர்வில் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

அண்மையில், மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் போது மாரடைப்பு காரணமாக வீதியில் விழுந்து விபத்துக்குள்ளான வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர், வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்தார்.

இந் நிலையில் நேற்றையதினம நடைபெற்ற 63ஆவது அமர்வில், அமரத்துவ மடைந்த முதலாவது வடக்கு மாகாண சபையின் முதலாவது பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெயகநாதனுக்கு எழுந்து நின்று அஞ்சலி செய்வோம் என அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம் சபையின் ஆரம்பத்தின் போதே அறிவிப்பு செய்தார். இதன் பின்னர் அனைத்து மாகாண சபை உறுப்பினர்களும் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினார்கள்.

பின்னர் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அன்ரனி ஜெகநாதனுக்கு அஞ்சலி உரையாற்றினார்.

எதனையும் வெளிப்படையாக பேசும் அவர், நீதிக்காக எப்போதும் குரல் கொடுத்துக் கொண்டிருந்தார் என முதலமைச்சர் தனது அஞ்சலி உரையில் குறிப்பிட்டு கூறினார். முதலமைச்சரின் அஞ்சலி உரையை அடுத்து ஒரு சில முக்கியமான விடயங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு சபை நடவடிக்கைகள் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டன. (செ-4)

## கொக்குவில்...

வீட்டில் நேற்றையதினம் அதிகாலை 4 மணியளவில் வீட்டில் உள்ளவர்கள் உறக்கத்தில் இருந்த வேளையில் திடீரெனக் கேட்ட துப்பாக்கி சூட்டு சத்தத்தினை அடுத்து வீட்டார் எழுந்து பார்த்தபோது ஓர் ஓட்டோ செல்வதனை அவதானித்துள்ளனர்

பின்னர் அவதானித்து பார்த்த போது வீட்டின் முன்னால் துப்பாக்கி ரவை காணப்பட்டதுடன் வீட்டின் சுவரில் துப்பாக்கிச் சன்னம் துளைத்த அடையாளமும் காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த சம்பவம தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்திற்குச் சென்ற பொலிசார் துப்பாக்கி ரவையை மீட்டதோடு இது தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரையில் தெரியவராதபோதிலும் இது ஓர் தனிப்பட்ட பகைமையின் காரணமாக இடம்பெற்றதா என்ற ஐயமும் நிலவி வருகிறது.

இதேவேளை நீண்ட காலத்துக்கு பின்னர் இடம்பெற்ற இச் சம்பவம் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

## வடக்கு விவசா...

யன்கட்டு மரமுந்திரிகை பண்ணை, கிளிநொச்சி - முக்கொம்பன் தென்னை பண்ணை, கிளிநொச்சி - கனகாம்பிகை குளம் பண்ணை, வவுனியா- பெரியகுளம் நாரத்தை பாம், மன்னார்- வெள்ளாங்குளம் தோட்டக்கலை பண்ணை, முல்லைத்தீவு - தேராவில் தோட்டக்கலை பண்ணை, முல்லைத்தீவு - தேறாங்கண்டல் பண்ணை ஆகிய 7 பாரிய விவசாய பண்ணைகளும் அந்த பண்ணைகளுக்குரிய சுமார் 1496.06 ஏக்கர் நிலமும் போருக்கு பின்னர் படையினருடைய கட்டுப்பாட்டில் உள்ளது.

இவற்றில் மன்னார்- வெள்ளாங்குளம்தோட்டக்கலை பண்ணை மற்றும் முல்லைத்தீவு- தேராவில் தோட்டக்கலை பண்ணை ஆகியவற்றில் சுமார் 15 வரையான பழமர கன்றுகள் உற்பத்தி செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் விதை உற்பத்தி நிலையங்கள், உத்தியோகஸ்த்தர்களுக்கான தங்குமிடங்கள், பயிற்சி பாடசாலைகள் உள்ளிட்டவை அடங்குகின்றது என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளதுடன்,

மேற்படி இடங்களை மீளவும் மாகாண விவசாய அமைச்சிடம் கையளிக்கவேண்டும் என பல தடவைகள், பல சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாக இல்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை மேற்படி விடயம் தொடர்பாக மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனை தொடர்பு கொண்டு கேட்டபோது,

மாகாண விவசாய அமைச்சு வடமாகாண விவசாய அமைச்சுக்கு சொந்தமான 29 இடங்களை படையினர் ஆக்கிரமித்து வைத்துள்ள விடயம் தொடர்பாக சகல தரவுகளும் சேகரிக்கப்பட்டு முதலமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதன் ஊடாக அந்த நிலங்களை படையினரிடமிருந்து விடுவிப்பதற்கான முயற்சிகளை முதலமைச்சர் மேற்கொள்வார்.

இது தொடர்பான கோரிக்கையினை மாகாண விவசாய அமைச்சு முதலமைச்சருக்கு விடுத்துள்ளதெனவும் அவர் கூறியுள்ளார். (செ-4)

**தேவை**

யாழ். நகரை அண்மித்த பகுதியில் உள்ள சலூன் கடைக்கு வேலையாள் தேவை. (அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு :-

**077 785 6677**

## நாடு முழுவதும்...

இவ்வாறு தொடர்ச்சியான வரட்சி நிலை ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள 78 ஆயிரம் குடும்பங்களில் அதிகளவானோர் கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் 20 ஆயிரத்து 458 குடும்பங்களைச் சேர்ந்த 69 ஆயிரத்து 678 பேர் வரட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் திருகோணமலை மாவட்டத்தில் வரட்சியினால் 3ஆயிரத்து 867 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 677 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடமாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் 5 ஆயிரத்து 550 பேரும், வவுனியா மாவட்டத்தில் 3ஆயிரத்து 111 பேரும் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த பொலநறுவை மாவட்டத்தில் 25 ஆயிரத்து 480 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 309 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் வெகுவிரைவில் அவர்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.(செ-11)

**Vacancy for Montessori Teachers (English Medium)**

We are seeking innovative qualified Montessori teachers to join the English faculty at our co-educating school you will be hard working and enthusiastic teaching professional with excellent knowledge of English.

The position will involve teaching Montessori and also assisting in the encouragement of extracurricular activities. The applicant will be a motivated individual with a keen interest in encouraging and inspiring students to love learning in English medium.

Please summit your CV at sat37aero@gmail.com

Tel No :
072 494 5906

(C-6027)

**DCM**

வேம்படிச் சந்தி, யாழ். நகர்
ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்

**A/L 2018 2019**

கலை, வர்த்தகம், தொழில்நுட்பம் பிரிவுகள்

பொருளியல் S.ஜெயக்குமார் B.A, MA PGDE

S.தவா B.Com PGDE கணக்கீடு

தனிப்பட்ட அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**A/L 2018 2017**

கணக்கீடு

S.தவா
B.Com, PGDE

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

D.C.M
யாழ். நகர்

## பிரத்தியேக செயலாளருக்கான பதவி வெற்றிடம்

- முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிறுவனத்திற்கு ஒரு பிரத்தியேக செயலாளர் பதவி ஒன்று வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் வயதில் முதிர்ந்தவரும் சிறந்த ஆரோக்கியத்துடன் பொது நிர்வாகப் பணிகளில் மிகுந்த அனுபவசாலியுமாக இருத்தல் அவசியமாகும்.
- அத்துடன் தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் மிகப்புலமை பெற்றவராக இருப்பதுடன் சிங்கள மொழியில் எழுத வாசிக்கத் தெரிந்திருத்தல் அவசியம்.
- மேலும் பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள், தாபன விதிக்கோவைகள், அரசியலமைப்பு மற்றும் சட்ட நுணுக்கங்கள் ஆகியவற்றை நுண்மதியுடன் அணுகுபவராக இருத்தல் வேண்டும்.
- முழுமையான கணனி அறிவுடையவராகவும் நாட்டின் எப்பகுதிக்கும் பிரயாணம் செய்யக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
- சிறப்பான மனிதநேய ஆலோசனை வழங்குபவராக இருத்தல் அவசியம்.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
- விண்ணப்பங்களை 14.10.2016 இற்கு முன்னர் கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மின்னஞ்சல் முகவரி: **npapp2015@gmail.com**

(6148)

**CNR** எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

(C-6016)

## அமெரிக்க லொத்தர் விசா

2018ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

இலங்கையர்களுக்கு 1600 விசாக்கள்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

பதிவுகள் 04-10-2016 தொடக்கம் 07-11-2016 வரை

0768226230

முன்னரே பதிபவர்களுக்கு முன்னுரிமை விசா வாய்ப்புக்கள்




இளைஞர்களே,
யுவதிகளே
வெளிநாடு செல்ல காசில்லையா?
இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் **50'000** பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

அலட்சியம் வேண்டாம்

உண்மை! உண்மை! உண்மை!

சென்ற வருடம் (2015) எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 12 பேர் அமெரிக்க விசாவிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்

இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

**V2 TRAVELS**

| | | | | |
|---|---|---|---|---|
| #49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | A9 வீதி கிளிநொச்சி | முடக்காட்டு சந்தி நெல்லியடி | No-324,யாழ் பிரதான வீதி பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
| 0768226241 | 0768226240 | 0776699892 | 0768226230 | 0776697960 |

(C-6008)

## வடமராட்சியில்....

**ஆங்கிலக் கல்விக்கு என தனித்துவமான ஒரே நிறுவனம்**

# OXFORD ENGLISH ACADEMY

P.K. Lane, Point pedro.

**புதிய பிரிவுகள் ஆரம்பம் : 12.10.2016 (Wednesday)**

- A/L எடுத்தவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்புக்கள் - பிரிவு - II ஆரம்பம் : 12.10.2016 (5pm)
- 2016 ஆம் ஆண்டு O/L ஆங்கில பாடப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான விசேட பயிற்சி வகுப்பு (paper class) ஆரம்பம்: 12.10.2016 (4pm)

**By : B.Jothy**

அனுமதிக்கு முந்துங்கள் (C-6023) - நிர்வாகி

## உங்களின் ஆங்கிலம் பேசும் திறனை வளர்த்துக் கொள்வதில் ஆர்வம் உள்ளவரா நீங்கள்???

விஜயதசமியை முன்னிட்டு உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்கள், தொழில் தேடுவோர் மற்றும் தொழில்புரிவோர்களுக்கான Spoken English with Personality Development வார மற்றும் வார இறுதிநாள் வகுப்புக்கள்.

**11.10.2016 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.**

K-AIMS Business School

148 2/1, K.K.S Road, Jaffna.
T.P:0768268211, 0768268206

(சி-6018)

## ACCA புதிய பிரிவுகள் ஆரம்பம்

**விஜயதசமியை முன்னிட்டு**

Foundation Level
Skill Level

**ஆகிய வகுப்புக்கள் 11.10.2016 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.**

K.AIMS Business School

148 2/1, K.K.S Road, Jaffna.
T.P:0768268206, 0768268208

(சி-6018)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.